# கல்கி

KALKI 23.10.88 ரூ. 2.







# பெறுவோர்க்கு ஆனந்தம் !
# அளிப்போர்க்கோ பேரானந்தம்!!

நாவிற்கினிய க்ரீமின் நற்சுவை நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகளின் நடுவில். மிகச்சிறந்த மூலப்பொருட்களினாலான கரகரவென்றிருக்கும் இந்த பிஸ்கட்டின் சுவையே நிகரற்றது ! எனவே வழங்குவதின் மகிழ்ச்சிக்கு நிகர் பெறுவதின் மகிழ்ச்சியே !

## நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகள். அளித்து அகமகிழவே !

nutrine
BISCUITS

SPEER 21 102 88 A Tam



**விமரிசையான வண்ணப் படங்களின் வரிசை!**

**அட்டைப்படம்:**

* இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜப் பெருமானின் நடனத்தில் மனம் குவிய மேலட்டையைப் புரட்டவே மனம் வராது!

**அருள்வாக்கு:**

* காஞ்சி முனிவரின் வண்ணப் படம்; அருளுரை.
* ஜெயேந்திரர், சங்கரானந்தேந்திரர் வண்ணப்படங்கள்.

**ஆன்மிகம்:**

* ஷீர்டி பாபா — வண்ணப் படம்: லதா
* அண்மையில் கும்பாபிஷேகம் கண்ட திருவாரூர் தியாகராஜர் வண்ணப்படம் மற்றும் திருத்தலக் காட்சிகள்: தனுக.

**புராணம்:**

* உத்தர ராமாயணம் தெரியும்; இது வேறு ஓர் அபூர்வமான அற்புத ராமாயணம்! வண்ணப்படங்கள்: விஜு.

**தலயாத்திரை:**

* உடுப்பி மத்து கிருஷ்ணரை நேரில் தரிசிப்பது போல் வண்ணப்படம்.

# கல்கி தீபாவளி மலர்-1988

**அழகிய இந்தியா:**

* பாரதத்தின் எழில்களை வண்ணங்களில் வடித்துத் தருபவர்: கே. வி. ஆனந்த்.

**நகைச்சுவை:**

* ஓவியர் உமாபதியின் வண்ணச் சிரிப்பு; மற்றும் அரசியல் கார்ட்டூன்.

**கலை:**

* யக்ஷகானம் என்ற புத்துயிர் பெற்ற அபூர்வக் கலை இதயத்தை மட்டுமல்ல, அதன் வண்ணங்களால் கண்ணையும் பறிக்கும்! வண்ணப்படங்கள்: யோகா.

**இலக்கியம்:**

* மீ. ப. சோமு தேர்ந்தெடுத்த பொறுக்கு மணியான கவிதைகளுக்கு எடுப்பான வண்ணச் சித்திரங்கள் தீட்டியிருப்பவர் கோபுலு.

**அமரர் கல்கி:**

* தவுல் கந்தப்பப்பிள்ளை கூறிய கதைகள் வரிசையில் மூன்றாவதான "நாடகக்காரி" — அமரர் கல்கியின் குறுநாவல், ம. செ. தீட்டிய வண்ணச் சித்திரங்களுடன் ஜொலிக்கிறது.

**மற்றும்: —**

* கவிமலர்; கோகுலம் பக்கங்கள்; மங்கையர் மலர்; ஏராளச் சிறுகதைகள்; கட்டுரைகள்; புகைப்படங்கள்; பிரபஞ்சன் எழுதிய குறுநாவல்.

---


**இப்போதே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். விலை ரூ. 30. ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ. 37 அனுப்பவும். மானேஜர், கல்கி, சென்னை — 600 032.**

## சின்னச் சின்னச் செய்திகள்:

• ஜெர்மானியக் கார் ஒன்று தானியங்கு முறையில் ஓடுகிறது. இதன் முன்புறம் டிரைவர் ஸீட் அருகே வீடியோ காமிராக்கள் உள்ளன. அவை சாலைப் போக்குவரத்தைச் சதா படம் பிடிக்கின்றன. காமிரா கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்கு ஏற்ப கம்ப்யூட்டர் இயங்கி காரின் வேகத்தை அதிகரிக்கிறது அல்லது குறைக்கிறது. தேவையான அளவு வலப்புறமோ இடப்புறமோ திருப்புகிறது! ஓவர்டேக் கூடச் செய்கிறது! நெடுஞ்சாலையில் மணிக்கு 96 கி.மீ. வேகம் செல்லும்!

• ஜப்பானில் பொது தொலைபேசியில் பேசுபவர் வெளியே காத்து நிற்பவருக்கு இரு வித செய்திகள் தெரிவிக்க முடியும். ஒரு பட்டனை அழுத்தினால், "ஒரு நிமிஷம், இதோ நான் முடித்துக் கொண்டு விடுகிறேன்" என்று ஓர் அறிவிப்பு பளிச்சிடும். இன்னொரு பட்டனைத் தட்டினால், "மன்னியுங்கள்; சற்று நேரம் ஆகும்; வேறு ஒரு ஃபோனை நீங்கள் நாடிச் செல்வது நலம்" என்று வாசகம் தோன்றும். பண்பாடு என்றால் ஜப்பானில்தான் கற்றுக் கொள்ள வேண்டும்!

• பெருகி வரும் பாங்குக் கொள்ளைகளைத் தடுக்க பம்பாயில் ஒரு புதிய சாதனம் நிறுவப்படவிருக்கிறது. ஒரு பொத்தானை அழுத்தினால் பல காரியங்கள் நடக்கும். போலீஸுக்குத் தகவல் போகும்; நுழைவாயில் கதவுகள் யாரும் தப்பிச் செல்ல முடியாதவாறு மூடிக் கொள்ளும்; வீடியோ காமிரா இயங்கி நடப்பன எல்லாவற்றையும் பதிவு செய்யும்; காஷியர் அறையைச் சுற்றி, புல்லட் புரூஃப் கண்ணாடிகள் இறங்கும்!



• மிக அதிகமாகப் பணம் செலவான ஒரு டாக்ஸி பயணம் டாக்டர் ஜான் மோர்கான் மேற்கொண்டது தான். டாக்ஸியிலேயே உலகைச் சுற்றிவரத் தீர்மானித்தார், இந்த ஆஸ்திரேலியர். ஒரு நண்பரை உடன் அழைத்துக் கொண்டார். டாக்ஸி டிரைவர் தமது தோழியான டாக்ஸி டிரைவரிணியை ஏற்றிக் கொண்டார். ஒரு மெக்கானிக்குக்கு இடமளித்தனர். ஒரு புகைப்படக்காரரும் தொற்றிக் கொண்டார். பம்பாயை இவர்கள் அண்மையில் வந்து அடைந்தபோது மீட்டர் 17,982 (ஆஸ்திரேலிய) டாலர் என்று கணக்குக் காட்டியது!

# தானாக ஓடும் கார்!

• பம்பாய் பல்கலைக் கழகம் தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் ஒரு சாதனை புரிந்திருக்கிறது. 1987 மே மாதம் நடந்த, உடற்பயிற்சிக் கல்வி முதுநிலை பட்டத்துக்கான தேர்வின் முடிவுகள் இன்றையத் தேதி வரை வெளிவந்த பாடில்லை! பதினைந்து மாதங்களாக "அடுத்த வாரம்" என்ற ஒரே பதிலைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்!

• அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹாலிவுட் பார்க் என்று ஒரு சிறிய ஊர் இருக்கிறது. அதற்கு ஒரு மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் நம்மவர் என்பதுதான் விசேஷம்! பெயர் பாலா கே. ஸ்ரீனிவாஸ். இந்த ஊரில் இருப்பது மொத்தம் மூன்றே இந்தியக் குடும்பங்கள்தான். ஆனால் பாலா தொண்ணூற்று இரண்டு சதம் வோட்டுக்களைப் பெற்றிருக்கிறார்! அதுமட்டுமல்ல; இவரை எதிர்த்துப் போட்டியிட யாருமே முன்வரவில்லை! கவனியுங்கள்: மேயருக்குச் சம்பளம் கிடையாது. பாலா, நிர்வாக ஆலோசனை நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

• தென் கொரியா நாட்டுடன் ஓர் ஒப்பந்தத்தைக் கையெழுத்திடுவதில் தாமதம் செய்ததால் நமது வரிப்பணம் ரூபாய் இருபது கோடி நஷ்டமாகியிருக்கிறது! கடல் ஆழப்படுகையில் எண்ணெய் குடைந்தெடுக்க கடலில் மேடை அமைத்துப் பணியாற்றுவார்கள். அந்த மேடைகளின் விலையில் பத்து சதம் தள்ளுபடி செய்து தருவதாகவும் ஆனால் குறிப்பிட்ட தேதிக்குள் ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும் என்றும் தென்கொரிய நிறுவனம் கூறியது. குறிப்பிட்ட தேதி தாண்டினால் தள்ளுபடி கிடைக்காது என்பதுடன் விலை பத்து சதம் உயரும். நமது பெட்ரோலியம் மந்திரி பிரம்ம தத் இதற்கெல்லாம் பயப்படுவாரா? தாமதம் செய்யத்தான் தயங்குவாரா? நஷ்டம் அவருக்கா? இந்தியக் குடிமகனுக்குத்தானே!

— மௌஷ்மி; பி. கே.



மனோன்மணி

# மனித உரிமைக்குப் போராடும் மனோன்மணி

தென் ஆப்பிரிக்காவில் பல காலமாகப் பல இனத்து மக்கள் மனோன்மணி நாயுடுவை 'அம்மா' என்றுதான் அழைத்து வருகிறார்கள்.

ஐந்து மக்களுக்கு அன்னையான 'அம்மா'வின் வாழ்க்கை தென் ஆப்பிரிக்க அரசியல் சரித்திரத்தில் ஓர் அசாதாரணமான ஏடு. நான்கு தலைமுறைகளாக அவரது குடும்பம் தென் ஆப்பிரிக்க விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருப்பது ஒரு மகத்தான வீர காவியம். இவரது ஒன்பது வயது மகள் கூட, புரட்சிகரமான எழுத்துக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த காரணத்தால் கைதாகிச் சிறைக்குச் சென்றிருக்கிறாள்! குடும்பத்தில் சிறைக்குச் செல்லாதவர் யாருமே இல்லை!

மனோன்மணியின் மாமனார் தம்பி நாயுடுவும் மகாத்மா காந்தியும் நெருங்கிய நண்பர்கள். அவரை ஒரு 'சிங்கம்' என்று மகாத்மா வர்ணித்திருக்கிறார். தம்பி நாயுடு பதினான்கு முறை சிறைக்குச் சென்றார். பெண்களும் சத்யாக்கிரகத்தில் சேர வேண்டும் என்று காந்திஜி சொன்ன போது, தம்பி நாயுடுவின் மனைவி வீரம்மாள் நிறைமாத கர்ப்பிணி. ஆயினும் முதல் சேவகியாகச் சேர்ந்தார்.

இவர்களுடைய மூத்த மகன் நாராயண சுவாமி தென் ஆப்பிரிக்க சுதந்திரப் போராட்டத்தில் முழு மூச்சுடன் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். 1953–ல் காலமானார்.

அவருடைய மனைவி திருமதி மனோன்மணி, இந்திய அரசின் அழைப்பை ஏற்று (தற்சமயம் இங்கிலாந்தில் புகலிடம் பெற்று வசிக்கும்) தமது மகள் சாந்திவதியுடன் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். தென்னாட்டையும் சபர்மதி ஆசிரமத்தையும் தமது கணவர் படித்த சாந்தினி கேதனையும் பார்க்கும் ஆவலுடன் வந்திருக்கிறார் இந்த 79 வயது மூதாட்டி.

''நெல்சன் மண்டேலா நிறபேதம் காட்டுகிற, தென் ஆப்பிரிக்க அரசைச் சமாதான வழிமுறைகளினால் எதிர்க்க முடியாது என்கிற முடிவுக்கு வந்தார். இப்பொழுது அது ஆயுதப் போராட்டமாக மாறி விட்டது. இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''




சாந்திவதி

''இந்தக் கேள்விக்கு 'அம்மா' பதில் சொல்ல முடியாது'' என்று மகள் சாந்திவதி குறுக்கிட்டார். ''அம்மா தென் ஆப்பிரிக்காவில் வசிப்பவர். ஆயுதப் போராட்ட இயக்கங்கள் சட்டத்துக்கு விரோதமானவை என்று அரசு தடை விதித்திருக்கிறது. அவற்றைப் பேசுவது அம்மாவுக்கு ஆபத்து'' என்றார்.

'தடை உத்தரவு' என்பது தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் அரசு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான வெள்ளையர் அல்லாதாரைப் பல வகையில் ஒடுக்கக் கையாளும் வழி. இதனால் சாந்திவதி பலமுறை வேலைகளிலிருந்து நீக்கப்பட்டும் சிறைப்படுத்தப்பட்டும் இருக்கிறார்.

ஒருமுறை மண்டேலாவின் மனைவி வின்னி மற்றும் இருபத்தோரு பேருக்கு எதிராகச் சாட்சி சொல்லும்படி நீதி மன்றத்




துக்கு அழைக்கப்பட்டார். சாட்சி சொல்ல மறுத்ததற்காக ஐந்து நாட்கள் சேர்ந்தாற் போல் அவரைக் கட்டாயமாக நிறுத்தி வைத்து விசாரணை நடத்தினார்கள்.

"நேரம் காலம் என்ற பிரக்ஞையே எனக்கு மறந்து போயிற்று. மீண்டும் என்னைச் சிறைக்கு அழைத்துச் சென்ற போது 'இன்று என்ன கிழமை' என்று அன்று கேட்ட போது கிடைத்த பதில்தான் ஐந்து நாட்கள் என்னைச் சாப்பாடு தூக்கம் இல்லாமல் நிற்க வைத்திருந்ததை உணர்த்தியது" என்றார் சாந்திவதி. அத்தனை துன்புறுத்தப்பட்டும் சாந்திவதி நெருங்கிய தோழி வின்னி மண்டேலாவுக்கு எதிராகச் சாட்சி சொல்ல மறுத்து விட்டார். பலவிதமான கஷ்டங்கள் அனுபவித்த பிறகு கடைசியில் உலக நாடுகள் பல வற்புறுத்தியதன் பேரில் 1972—இல் தென் ஆப்பிரிக்காவை விட்டு வெளியேற தென் ஆப்பிரிக்க அரசு இவருக்கு அனுமதி வழங்கியது. இப்பொழுது லண்டனில் இருந்தபடி தென் ஆப்பிரிக்க விடுதலைக்காகத் தொடர்ந்து போராடுகிறார் சாந்திவதி.

"கடைசியிலே தர்மம்தான் ஜெயிக்கணும்" என்கிறார் அம்மா. "அதர்மம் என்னிக்காவது நிலைச்சு நிற்குமா? நம்ம புராணக் கதைங்க எல்லாம் அதைத்தானே சொல்கின்றன?"

"கைது செய்யப்படுகிற பெண்களைக் கொஞ்சம் கருணையுடன் நடத்துவார்களா?"

"கிடையாது. எல்லாருக்கும் ஒரே மாதிரி தண்டனைதான். பார்க்கப் போனால் பெண்களை இன்னும் அதிகமா அவமானப்படுத்துவார்கள். நிர்வாணமாக நிறுத்தி விசாரணை, அடி எல்லாம் உண்டு."

"உங்களுடைய எல்லாக் குழந்தைகளும் போராட்டத்தில் சேர்ந்து சிறைப்பட்டு விவரிக்க முடியாத சித்திரவதைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். குடும்பம் சேர்ந்திராமல் சிதறியிருக்கிறது. ஒரு தாய் என்கிற ஸ்தானத்தில் இதையெல்லாம் எப்படிப் பொறுத்தீர்கள்?"

"ரொம்ப கஷ்டந்தான் பட்டேன். என்ன செய்ய முடியும்? சில சமயம் கதறி அழுதிருக்கேன். ஆனால் அந்தக் காரணத்தினாலே அவங்க இந்தப் போராட்டத்திலேருந்து விலகிடணும்னு நான் ஒரு நாளும் நினைச்சதில்லே. சுதந்திரப் போராட்டம் என்கிறது ஒரு யாகம் போல. அதிலே அவங்க எல்லாரும் இருக்கிறது எனக்குப் பெருமை. இதுக்காகவே அவங்க பிறந்திருக்காங்க. அவங்களை எதுக்கும் நான் தடை சொன்னதில்லே."

ஒரு தாய் படக்கூடாத கஷ்டங்கள் அவ்வளவையும் அனுபவித்தும் அந்த மூதாட்டியின் கண்களில் ஒளிரும் நம்பிக்கைச் சுடர் அசாதாரணமானதாகப்படுகிறது.

—வாஸந்தி

புகைப்படங்கள். வி. எஸ். ராமநாதன்





# பிறந்த நாள் இன்று... அரும்பெரும் பரிசு ஒன்றை மீனுவுக்கு அளித்துவிட்டது ஃபேர் அண்ட் லவ்லி.

இந்த நாளுக்காகவே மீனா அரு முயற்சி எடுத்திருக்கிறாள். இரு மாத முன்னேற்பாடுகள் — அதில் முக்கியமானது ஃபேர் அண்ட் லவ்லி ஒத்துழைத்த மகிமை. அவள் மேனிமீது வெண்ணிலவைப் பொழிந்துள்ளது இதமாக, இயல்பாக. பரிசுப் பெட்டகத்தை அவளிடம் நீட்டும் ரவி, பால்நிலா முகத்தழகை பருகுகிறான் சக்கரவாகப் பறவை போல். அதை வாங்கும் மீனாவின் இதயம் பாடுகிறது நன்றிக் கீதம் — ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமுக்கு!

மீனாவைப் போலவே நீங்களும், கவனிக்கத் தக்க சிகப்பழகை அடைந்திட முடியும் ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...
ஃபேர் அண்ட் லவ்லி. இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா — இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல்





ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது — வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை.

மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவ்வையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி — நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.

உபயோக முறை:
கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம். விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி. ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது.

உடலாரா உணருவீர் இம் மாறுதலை... பிறகு காண்பீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைசர், பி.ஓ. பாக்ஸ் 758, பம்பாய்-400 021.

**ஃபேர் அண்ட் லவ்லி**
**சிகப்பழகு க்ரீம்**




## கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழியில்

LINTAS FAL 59 2517 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் முட்டையின் புரதச் சத்தூட்டத்தை!
ஃபாரெக்ஸ்®-எக்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ் எக் — இது, உங்கள் குழந்தையின் முழு நிறைவான வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்தைக் கொண்டுள்ளது. இது, நன்றாக முன்பே பக்குவப் படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மை யான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி
PROTEIN-RICH
Farex-egg
WITH CEREAL, EGGS AND MILK
இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-எக்


GX/32/203 TML

# இலட்சிய அம்புகள்

கவியரங்கம் களைகட்டியது. வழக்க மான கவிஞர்களுடன் இன்று பல புது கவிஞர்களும் உற்சாகமாகக் கவிதைத் தேரை உருட்டினார்கள்.

கடைசியாகத் தமிழ்நேசன் மேடையேறி னான். மைக்கின் முன்னால் கைகளை அசைத்து.

ஆண்களின்
அடிமைகளா
பெண்கள்...?

என ஆரம்பித்து ஆவேசமாகக் கவிதை பாடினான். பெண்கள் பரம்பரைத் தளை களை உடைத்தெறியும் எண்ணமேயின்றி முடங்கிக் கிடப்பதால்தான் பிரச்னையே எழுகிறது என்று பொருள்பட அவன் மிக இயல்பாய்ப் பாடி முடித்ததும் கைதட்டல் கள் அரங்கத்தை அதிரச் செய்தன.

சுற்றிலும் அமர்ந்திருந்த ஆண் கவிஞர் கள் காலரை நிமிர்த்திக் கொண்டு பெண் கள் பக்கம் ஏளனப் பார்வையை வீசினார் கள்.

மன்றச் செயலாளர் நன்றி நவில, கூட்டம் இனிதே முடிந்தது.

கூட்டம் தமிழ்நேசனின் கவிதையைப் புகழ்ந்தபடியே கலைய... இதில் அத்தனை யிலும் திருப்தியுறாத தமிழ்நேசனின் கண்கள் மட்டும் கூட்டத்தையே வெறித்தன. எதிர்ப்பு இல்லாமல் கவிதை முடிந்த ஏக்கம் அவனைச் சோர்வுபடுத்தியது.

அவள் எங்கே? ஏன் வரவில்லை? இந் நேரம் ஒரு பெண் புலி போலச் சீறி எதிர்க் கவிதை தொடுத்திருப்பாளே!

அவளிடம் அடிக்கடி அவன் தோற்றா லும், அப்படித் தோற்பதே அவனுக்கு ஒரு சுகானுபவம்தான். யோசித்துப் பார்த்த போதுதான் ஞாபகம் வந்தது, அவள் போன கவியரங்கத்திற்கும் வரவில்லையென்பது.

அவனுக்கு மண்டையைக் குடைகிற மாதிரி இருந்தது. அவள் வீட்டுக்கே சென்று ஏன் வரவில்லை என்று கேட்டு விடலாமா?

ஊ...ஹூம். அவள் கணவனைக் கல் யாணத்தன்று பார்த்ததுதான். சரியாகப் பேசிக் கூடப் பழகவில்லை... இந்த நிலை யில் அவள் வீட்டுக்குப் போவது உசிதப் படுமா? வேண்டாம்.

அந்த எண்ணத்தை உதறி விட்டு, கடற் கரையை நோக்கிச் சிந்தனையோடு நடந் தான்.

பலவித குழப்பங்களோடு நடந்தவனைப் பழக்கப்பட்ட குரல் தடுத்து நிறுத்தியது.

''என்ன சார், எதிரில் வர்றவங்களைக் கூட கவனிக்காம, என்ன அப்படியொரு சிந்தனை?'' கிருபாகரி சிரித்தபடியே கேட் டாள்.

''ஓ! நீங்களா...? எங்கே இப்படி?'' மகிழ்ச்சியும், வியப்புமாகக் கேட்டான்.

''அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குப் போனேன். இந்தாங்க பிரசாதம்.''

''தாங்க் யூ! ஆமாம், ஏன் நீங்க கவியரங் கத்துக்கு வரவில்லை? அழைப்பிதழ் வரலீங் களா?''

''வந்ததே!''

''பின், ஏன் நீங்க வரலே?''

''சந்தர்ப்பப்படலே.''

''சந்தர்ப்பப்படலேயா? சந்தர்ப்பம் கொடுக்கப்படலேயா?'' — கிண்டலாகக் கேட்டான் தமிழ்நேசன்.

''கொடுப்பதற்கும், கொடுக்காததற்கும் யாருக்கு உரிமை இருக்கு?'' எதிர்க் கேள்வி சூடாகப் பிறந்தது.

''அப்படியானால், உங்கள் உரிமையை உங்களால் நிலைநாட்ட முடியுதா?''

சட்டென்று கிருபாகரிக்கு அவன் மேல் எரிச்சல் வந்தது.

''ஏன் சார் வாழ்க்கைங்கறது போர்க் களமா! யாருக்கு அதிக பலம் இருக்குன்னு பார்க்கிறதுக்கு?''

''எது எப்படியோ, நீங்க கவியரங்கத்



தாஸ்பதி ராஜேந்திரன்

திற்கு வராமல் இருந்ததுக்கு அழுத்தமான காரணம் இருக்குன்னு நினைக்கிறேன்.''

''காரணம் எதுவுமில்லே. இது ஒரு விட்டுக் கொடுத்தல்.''

''கணவனுக்காகக் கவிதையை விட்டுக் கொடுத்து விட்டீர்கள் இல்லையா கிருபா?''

''நோ, விட்டு விடவில்லை. ஒத்தி வைத்திருக்கிறேன். ஓர் அநாகரிகமான சூழ்நிலையைத் தவிர்த்திருக்கிறேன் அதாவது வரு முன் காத்தல்- அவ்வளவே!''

''இங்குதான் பெண்ணடிமைத்தனம் உருவாகிறது. இன்றைய என் கவிதையே அது தான்!''

''இல்லே. தமிழ்நேசன் சார். இது அடிமைத்தனம் அல்ல: ஒரு சின்ன விஷயத்தை விட்டுக் கொடுக்கிறதினாலே ஒரு பெரிய மகிழ்ச்சி கிடைக்கிறது. இது பஞ்ச தந்திரத்திலே ஒன்று.''

''இல்லீங்க கிருபா. இந்த இடத்திலேதான் பெண்கள் வலுவிழந்து போகிறீர்கள். எது சின்ன விஷயம்? தனித்தன்மையையும், சுய சிந்தனையையும் விட்டுக் கொடுப்பதா? இந்தச் சின்ன விஷயத்தை ஏன் உங்க கணவர் பெரிசுபடுத்தணும்? அவரே ஏன் விட்டுக் கொடுக்கக் கூடாது. இந்தக் கோணத்தில் நீங்கள் சிந்திப்பதே கிடையாது. கல்லானாலும் கணவன் என்கிற கற்காலத்திலேயே நீங்கள் இருக்கிறீர்கள், ரொம்ப வருத்தப்படுகிறேன் கிருபா'' — படபடவென்று பொரிந்து தள்ளினான் ஆத்திரத்தால்!

''சார், ப்ளீஸ் கொஞ்சம் அமைதி! முதலிலேயே சொன்னேன். வாழ்க்கை என்கிறது போர்க்களம் அல்ல. என்னால் எதனோடும் ஒத்துப் போக முடியும்ங்கிறதுதான் என்னோட பலம். சின்ன விஷயத்தையும் அவரால விட்டுக் கொடுக்க முடியாதுங்கிறது தான் அவரோட பலவீனம். எதிராளியோட பலவீனத்தைத் தெரிஞ்சுக்கிட்டாலே பாதி வெற்றி கிடைச்ச மாதிரி இல்லையா? நிம்மதியான வாழ்க்கை வேணும்னா கொஞ்சம் அட்ஜெஸ்ட்மெண்ட் வேணும்.''

''ஆக, வாழ்க்கைக்காக லட்சியத்தைக் கைவிட்டுட்டீங்க இல்லையா கிருபா?''

''யார் சொன்னா? என்னோட லட்சிய தாகம் அவ்வளவு சீக்கிரம் அழிஞ்சுடாது. உள்ளுக்குள்ளே நீறுபூத்த நெருப்பா கனன்று கிட்டு இருக்கு.''

''அப்படின்னா..... ?''

''புலி பதுங்குவதற்கும், வில் வளைவதற்கும் பணிந்ததாக அர்த்தம் இல்லே.''

''ஓஹோ! அப்ப, எப்ப நீங்க பாயப் போறீங்க?''

''இங்கு வில்தான் வளைந்திருக்கிறதே தவிர அம்பல்ல! சமயம் வாய்க்கும் போது என்னோட லட்சிய அம்புகள் விடுபடும். கூடிய விரைவில், என் முதல் கவிதை தொகுப்பை என் கணவரே வெளியிடுவார்.''

''ஆனாலும், உங்களுக்குத் தன்னம்பிக்கை ரொம்ப அதிகம் கிருபா.''

''அதுதான் என்னோட பலம். அப்ப நான் வரட்டுமா?''

கம்பீரமாக அவள் விடைபெற்றுப் போகத் தமிழ்நேசன் இந்த முறையும் அவளிடம் பெருமிதத்தோடு தோற்றுப் போனான்.

**அ**டுத்த கவியரங்கத்தில் —

விட்டுக் கொடுத்தல்
அனுசரித்துப் போதல்
என்ற
அரவணைப்பிலேயே
நம்மை
அடிமைப்படுத்தி

விடுகிறார்கள்
இந்தப் பெண்கள்!
உண்மையில்
நாம்தான்
இங்கே
அடிமைகள்.

— கண்களில் நீர்த் துளிக்க உற்சாகமாகக் கவிதை பாடினான் தமிழ்நேசன்.

''சிந்தித்து வாக்களியுங்கன்னு, மக்களிடம், வேண்டுகோள் விடுக்காதீங்கன்னு, சொன்னேனே, கேட்டீங்களா?''

''ஏன், என்னாச்சு...?''

''நம்ம வேட்பாளர்கள் ஒருவர் பாக்கி யில்லாமே எல்லாருக்கும் 'டெபாஸிட்' போயிடுச்சு...''

— ஆர். வசந்தகுமார்.



டாக்டர்: தூக்கத்தில் நடக்கிற பழக்கத்திற்கு மருந்து கொடுத்தேனே.... இப்போ எப்படி இருக்கு....?

நோயாளி: பரவாயில்லே டாக்டர். இப்போ எல்லாம் தூக்கத்தில நடக்கிறது இல்லே... ஸ்கூட்டரை எடுத்துட்டுத்தான் ஒரு ரவுண்டு போயிட்டு வர்றேன்.

— திருத்துறைப்பூண்டி. எஸ். கந்தசாமி.





உமது மேனியைத் தழுவட்டும்
ஜப்பானிய கெஸோமேகா
俳句
ஹைகூ
பாலியெஸ்டர் சேலைகளும்
உடுப்புத் துணிகளும்
பாம்பே டையிங்




# கல்கி

1988 அக்டோபர் 23
மலர் 47 இதழ் 12
விபவ ஐப்பசி 7






## தொண்டைமான் சொல்வதைக் கேளுங்கள்

**அ**ஸ்திவாரம் பலமில்லாது போனால் கட்டிடம் சரிய வேண்டியதுதான். இந்தியா – இலங்கை ஒப்பந்தம் என்ற முதல் கோணல் முற்றும் கோணலாக உருமாறி வருவதில் வியப்பில்லை. தமிழ் ஈழப் போராளிகளுக்கும் சிங்கள ராணுவத்துக்கும் இடையில் நடந்து வந்த யுத்தத்தில் மத்தியஸ்தம் செய்து வைப்பதாகக் கூறி இடையில் புகுந்த இந்தியா, இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தமிழ்ப் போராளிகளின் ஆயுதங்களைப் பரிகரணம் செய்யும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது. பகுத்தறிவுக்குப் பொருந்தாத இந்த ஒப்பந்தம் காரணமாக என்னென்ன விபரீத சோகங்கள்!

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்கும் முயற்சியில் அமைதிப் படை அவர்களுடன் மோத, விடுதலைப் புலிகளை – தமிழர்களை – இந்திய ராணுவம் கொன்று தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்திய ராணுவத்தின் பல ஜவான்களும் அதிகாரிகளும் எதற்காக, யாருக்காகச் சாகிறோம் என்று புரியாமலே விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகளுக்கும் கண்ணி வெடிகளுக்கும் பலியாக நேர்ந்தது. தாய்நாட்டின் மானம் காக்க இந்த உயிர்த் தியாகம் நடக்கவில்லை என்பது மட்டும் அவர்களுக்கு நன்கு புரிந்தது. இதற்கு மறுபுறமாக அமைதிப்படையையும் மீறிச் சிங்களவரை விடுதலைப் புலிகள் கொன்று குவிக்கும் அக்கிரமமும் தொடர்கிறது. சமீபத்திய பலி, ஒரு கிராமத்தைச் சேர்ந்த நாற்பத்தைந்து சிங்களவர். இன்னொரு பக்கம் ஜே. வி. பி. என்ற சிங்கள வன்முறையாளர் அமைதிப்படையினரையும் இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தையும் எதிர்த்து நடத்தும் வன்முறைக் கிளர்ச்சிகள் விசுவரூபமெடுத்துள்ளன. எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர் இன்றி, வோட்டுரிமையைப் பயன்படுத்தும் வாய்ப்பே வாக்காளருக்கு இல்லாமல், தேர்தல் என்ற ஒரு நாடகம் வடக்குத் தமிழ் ஈழப் பகுதிகளில் நடந்தேறியிருக்கிறது.

விடுதலைப்புலிகள் சுதந்திர தனி ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு, ஆயுதங்களை அமைதிப்படையினரிடம் ஒப்படைத்துவிட்டு, ஜனநாயக முறையில் தேர்தல்களில் பங்கேற்று, தமிழ் ஈழ மாநிலத்தின் உயர்வுக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் உழைக்க முன் வந்திருந்தால் பிரச்னையே இருந்திராது. மாநிலத்துக்கு அதிகப்படி அதிகாரங்கள் கோரி அவர்கள் பதவியில் இருந்தபடியே ஜனநாயக முறையில் தொடர்ந்து போராடலாம். ஆனால் விடுதலைப் புலிகளோ தனி சுதந்திர ஈழ நாடு கோரிக்கையையும் கைவிடவில்லை,






அதனை அடைவதற்கு வன்முறை ஒன்றே வழி என்ற எண்ணத்தையும் துறக்கவில்லை. இவர்களுக்கு நல்லதை எடுத்துச் சொல்லி ஜனநாயக அமைதிப் பாதையில் திருப்பிவிட வேண்டிய தமிழ்நாட்டிலுள்ள ''தமிழினத் தலைவர்''களோ, தில்லி அரசு மீது தங்களுக்கு உள்ள கோபத்தில் இவர்களுக்குத் தூப தீபம் காட்டி, வேப்பிலை அடித்து, மேலும் சாமி யாட்டம் போடத் தூண்டுகின்றனர்.

கிட்டுவையும் சகாக்களையும் இங்கு கைது செய்த போதிலும் அங்கு கொண்டு சென்று விடுதலை செய்ததும், பல லட்சக்கணக்கான தமிழர்களுக்குப் பிரஜா உரிமை வழங்கப்படவிருப்பதும், வடக்கு கிழக்கு இணைப்பும், அதிகாரங்களைப் பரவலாக்கி வழங்கியுள்ள சலுகைகளும் எதிர்பார்த்த நற்பலன்களை உருவாக்கவில்லை. மாறாக முரட்டுப் பிடிவாதமே நீடிக்கிறது.


ஜெயவர்த்தனவின் பதவிக்காலம் முடியப் போகிறது. அடுத்து அவரது வாரிசு என்று கருதப்படுகிற பிரேமதாசாவும் சரி, எதிர்த் தரப்பில் அவருக்குப் பலமான போட்டி யாக விளங்கும் சிரிமாவோவும் சரி, ''நான் பதவிக்கு வந்தால் அமைதிப் படையை வாபஸ் பெறச் செய்வேன்'' என்றே கூறியுள்ளனர். நமது பிரதமரோ, தேர்தலுக்கு முன் இவர்கள் எப்படிப் பேசினாலும் பதவிக்கு வந்தபின் நேர்மாறாகப் பேசுவர் என்று எதிர்பார்க்கிறார். இந்தக் கணிப்பு தவறாகிப் போகக் கூடும்.

இந்தச் சூழலில் இந்தியா புதைசேற்றிலிருந்து தன்மானத்தோடு மீள வழிகண் டாக வேண்டும். இதற்கு ஓர் உபாயம் கூறுகிறார் மலைத்தோட்டத் தொழிலாளர் தலை வரும், இலங்கை அமைச்சரும், பழுத்த அரசியல்வாதியுமான தொண்டைமான்: ''விடு தலைப் புலிகள் நீண்ட காலமாகப் போராடியும் பெற முடியாத பல சலுகைகளை இந்தியாவின் தலையீடுதான் பெற்றுத் தந்திருக்கிறது. சுதந்திரத் தனி ஈழக் கோரிக்கைக்குப் பதிலாக வேறு பல சலுகைகளைப் பெற்றுத் தருவதாகக் கூறித்தான் இந்தியா இலங்கைக் குள் நுழைந்தது. இதனை ஈழத் தமிழர் பலரும் ஏற்றனர். இப்போது விடுதலைப் புலிகள் தங்களது கோரிக்கைகளுள் மேலும் பலவற்றை இந்தியாவைப் பயன்படுத்தியே பெற்று விடலாம் என்று நினைத்துக் கொண்டு ஆயுதங்களை ஒப்படைக்காமல் போராட்டத்தை நீடிக்கின்றனர். இந்தப் போக்கினால் இந்தியாவின் தலையீட்டையும் உதவியையும் பெறும் தகுதியை அவர்கள் இழக்கின்றனர். இதைக் காரணம் காட்டி இந்தியா அமைதிப்படையை வாபஸ் பெறலாம்.''

தக்க சமயத்தில் வந்த சத்தான யோசனையை இந்தியா ஏற்பதுடன், இந்திய மண்ணில் இனி விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் தருவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

---

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



# டி.வி மகாபாரதம்

இந்தியா எங்கிலும் லட்சக்கணக்கான ரசிகர்களை ஞாயிறு தோறும் கட்டிப் போட்ட டி.வி. நிகழ்ச்சி ராமானந்த சாகரின் ராமாயண்.

மகத்தான வெற்றி பெற்ற இத்தகைய தொடர் முடிந்த கையோடு அதே பாணியில் மகாபாரதத்தைப் படமாக்கவும், வெளியிடவும் தயாரிப்பாளர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் எப்படித் துணிச்சல் வந்தது? ரசிகர்கள், ராமாயணத்தை மனத்தில் கொண்டு உருவாக்கிய எதிர்பார்ப்புகளுடன்தானே இதனை அணுகுவர்?

தயாரிப்பாளரும் இணை இயக்குனருமான ரவி சோப்ரா, "உண்மையில் ராமாயண நிகழ்ச்சியைத் தொடர்ந்து இதனைத் தயாரிப்பது எங்களுக்கு ஒருவிதத்தில் சௌகரியமாகவே இருக்கிறது. புராண கதைகளை டி.வி. தொடராக வழங்கினால் மக்கள் வரவேற்பார்கள் என்பது ஊர்ஜிதமாகிவிட்டதல்லவா!'' என்கிறார்.

பூனாவிலுள்ள 'பண்டர்கர் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஓரியண்டல் ரிசர்ச்' என்ற ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் வியாச பாரதக் கதையமைப்பையே கையாண்டு மகாபாரதம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐம்பத்திரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் இத் தொடர், சகுந்தலையின் புதல்வன் பரதனின் ஆட்சிக் காலத்திலிருந்து தொடங்குகிறது. பரதனாக நடித்துள்ளவர் ராஜ் பப்பர்.

மகாபாரதத் தொடரின் ஒவ்வொரு பகுதியும் நாற்பத்தைந்து நிமிடங்கள் நீடிக்கிறது. இத்தனை நேரத்துக்குச் சுவாரஸ்யம் குன்றாமல் நிகழ்ச்சியை வழங்குவதோடு, தயாரிப்பாளர், செலவையும் ஓரளவுக்குள் கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பகுதிக்கும் சராசரியாக ஆறு லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நிகழ்ச்சியை வீடியோ காசெட் செய்து விற்பதன் மூலம் கிடைக்கும் லாபம் தயாரிப்புச் செலவில் ஏற்படக்கூடிய பட்ஜெட் எகிறல்களைச் சமாளிக்க உதவும் என்று கூறுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

"நமது பெற்றோரும் தாத்தா பாட்டிகளும் நமக்குப் புராண இதிகாசக் கதைகளைச் சொன்னது போல் குழந்தைகளுக்குக் கதை சொல்ல இந்தத் தலைமுறையில் யாருக்கும் நேரம் இல்லை. அதனால் குழந்தைகளின் பண்பாட்டு வளர்ச்சிக்கு இந் நிகழ்ச்சி உதவும்'' என்று ஒரு பேட்டியில் கூறியுள்ளார் ரவி சோப்ரா.

முதல் இரண்டு வாரங்கள் மகாபாரத நிகழ்ச்சியைப் பார்த்ததில், அது ஒரு சராசரி நிகழ்ச்சியாகவே தோன்றியது. கங்கை ஒவ்வொரு குழந்தையாகக் கொண்டு போய்த் தண்ணீரில் போடுவதை மீண்டும் மீண்டும் காட்டியதைத் தவிர்த்து அச் சம்பவங்களைக் குறிப்பால் உணர்த்தியிருக்கலாம். கிட்டத்தட்ட ஒரு வருடம் நீடித்த 'புனியாட்' தொடரில் வீராவாலியாக நடித்தவர் 'கங்கை' பாத்திரத்தை ஏற்றிருக்கிறார். இவரை வீராவாலியாகத்தான் நினைக்கத் தோன்றுகிறது! வேறு புது முகங்களுக்குப் பஞ்சமா என்ன...?

வசனங்கள் நன்றாக இருந்தாலும் படாடோபமான ஆடை அலங்காரங்களால் அவை அடிபட்டுப் போகின்றன. மொத்தத்தில் சினிமாத்தனம் மிக அதிகம்!







## அருமை நண்பர்களே!

இனிமேல் நீங்கள் எல்லாரும் பாரிஸின் குதூகல உலகத்தில் பங்கு பெறலாம்.

இந்த இதழில், கட்டிப்பயல்கள் காஃபிபைட், கோமில்க், ட்ரை-மி மற்றும் நானும், நீங்களும் ஒரு ஜோரான விளையாட்டை நண்பர்களுக்கு விளையாடச் சொல்லிக் கொடுக்கப் போகிறோம். அத்துடன், உங்கள் அப்பாவை ஆச்சரியப்படுத்த ஒரு வழியையும் கற்றுத்தர போகிறோம். மேலும் கோ-மில்க், ட்ரை-மீ சொல்லும் நகைச்சுவை துணுக்கு…உங்கள்பாடு கொண்டாட்டம்தான்!

## குறிபார்க்கும் திறன் வளர...





1



ஒரு பெரிய வெள்ளைத்தாளை எடுத்துக் கொள்ளுங்கள். படம் 1'ல் காட்டியுள்ளபடி நாலு வட்டங்கள் வரையுங்கள். ஒரு கம்பாஸ், பென்சில் உபயோகித்து முதலில் நடு வட்டத்தை ('புல்ஸ் ஐ') வரையுங்கள். ஒரு ரப்பர் பந்தின் அளவு இருக்கவேண்டும். இந்த வட்டத்தின் மையப்புள்ளியிலிருந்து மேலும் 3 வட்டங்கள் வரையவும். 2வது வட்டத்தின் ரேடியஸ் 4 அங்குலமாகவும் 3'வதின் ரேடியஸ் 6 அங்குலமாகவும் 4'வதற்கு 8 அங்குலமாக வைத்து வட்டங்களை வரையவும். வட்டங்களுக்கு வெவ்வேறு வர்ணங்களைத் தீட்டுங்கள். ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு எண் கொடுங்கள் நடு வட்டத்திற்கு 20, 2வதற்கு 15, 3'வதற்கு 10, 4'வதற்கு 5. சின்ன ரப்பர் பந்துகள் ஒன்றிரண்டு எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வரைந்த படத்தை சுவரில் ஒட்ட வைத்து அதிலிருந்து 8-10 அடி தள்ளி நின்றுகொண்டு பந்துகளை வட்டங்களை நோக்கி வீசுங்கள். பந்து எந்த வட்டத்தை அடிக்கிறதோ அதற்குரிய பாயிண்ட்டுகள் உங்களுக்குக் கிடைக்கும். தனியாகவோ நண்பர்களுடனோ விளையாடலாம். ஒவ்வொருவரும் மாறிமாறி 3 தடவை பந்தை எறியவேண்டும். யார் முதலில் 100 பாயிண்ட் பெறுகிறார்களோ அவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள்.

## பூனைத் துணுக்கு


ஒரு படகில் 10 பூனைகள் இருந்தன. ஒரு பூனை வெளியே விழுந்தது. மீதி எவ்வளவு இருக்கும்? விடை: ஒன்றுகூட இருக்காது. ஏனென்றால், அவை எல்லாம் 'காபி-கேட்ஸ்' (COPYCATS)



## அப்பாவிற்கு ஒரு புக்-மார்க்



இங்குள்ள படத்தை ஒரு காகிதத்தில் அப்படியே வரைந்து ஒரு மெல்லிய அட்டையின் மீது ஒட்டி, படத்தை சுற்றி வெட்டி விடுங்கள். உங்கள் படமே ஏதாவது இருந்தால், அதைக் கூட ஒட்டி, சுற்றி வெட்டி எடுக்கலாம் இதை ஏதாவது ஒரு பத்திரிகை அல்லது புத்தகத்திற்குள் வைத்து விடுங்கள். அந்த புத்தகத்தை அப்பா திறக்கும்போது புக்-மார்க்கைப் பார்த்து ஆச்சரியமடைவார்.




2

## நீளமான மீசை



மசூரிஜா என்ற இந்தியருக்குத்தான் உலகிலேயே நீண்ட மீசை இருக்கிறது. நீளம்: 259 செ.மீ. (உலகிலேயே மிக உயரமான ஆசாமியை விட இது நீளமானது!) இதை வளர்க்க அவருக்கு 13 வருடங்கள் பிடித்தது






HTA 7047

பாரிஸ் மிட்டாய்கள் மற்றும் பிஸ்கட்டுகள் அனைவரும் விரும்புவது

THE KING OF SWEETS




ஜனதா அரசு, 'கோக-கோலா'வை நாட்டை விட்டுச் சோக கோலாவாக வெளியேற்றிய பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, ராஜீவ் அரசு 'பெப்ஸிகோலா'வை இருகரம் நீட்டி இந்தியாவுக்குள் வரவேற்றிருக்கிறது.

இந்தத் திட்டத்துக்கு முதலீடு இருபத்திரண்டு கோடி ரூபாய்! இதில் மூன்றரைக் கோடி பெப்ஸி; ஐந்தரைக் கோடி வால்டாஸ் நிறுவனம். பாக்கி பஞ்சாப் அரசின் விவசாயப் பொருள்கள் உற்பத்தித் துறை. (இந்தச் சந்தடி சாக்கில், வால்டாஸ் ஷேர்கள், பங்கு மார்க்கெட்டில் கணிசமாக விலை கூடியதாம்!)

'பெப்ஸிகோலா' வருவதால் நாட்டுக்கு என்ன லாபம்?

ஆண்டுக்கு 175 கோடி ரூபாய் வெவ்வேறு வரிகள் மூலம் மட்டும் கிடைக்கும்; முதலாண்டிலேயே ஏற்றுமதி மூலம் இருபது கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிட்டும்; அப்புறம், நம்பினால் நம்புங்கள் — சுமார் ஐம்பதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ரஷ்யாவிலும் சீனாவிலும் போட்டிருப்பதைவிட நியாயமான நிபந்தனைகள்தான் பெப்ஸிகோலா இங்கே போட்டிருக்கிறதாம்!

இந்தியாவின் மிகப் பெரிய மூன்று குளிர் பானத் தயாரிப்பு நிறுவனங்களான பார்லே, மெக்டவல், ப்யூர் — ட்ரிங்க்ஸ் ஆகியன ஆனமட்டும் பெப்ஸியை உள்ளே விடக் கூடாது என்று முயன்று பார்த்தார்கள்.

'ஆமாம், இவர்கள் மட்டும் ரஷ்யாவிலும், மேற்கு ஆசிய நாடுகளிலும் போய்த் தொழிற்சாலைகள் போடலாம். அவர்கள் இங்கே வரக் கூடாதோ? தாராளமாக வரட்டும். அப்போதுதான் தரம் பற்றிய பயம் இவர்களுக்கு இருக்கும்' என்று நறுக்கென்று தலையங்கம் எழுதிவிட்டது எகனாமிக் டைம்ஸ்!

மகாராஷ்டிர விவசாயிகளின் தலைவர் சரத் ஜோஷிக்கும், உத்தரப்பிரதேச திக்கயத்துக்கும் ஏகக் குஷி. விவசாயிகளின் விளை பொருள்களான பழங்களுக்கும், காய்கறிகளுக்கும் நல்ல விலை கிடைக்கும். ஏனென்றால், ஒப்பந்தப்படி பழங்கள் — காய்கறிகள் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவுகிறது பெப்ஸி.

"அப்புறம் என்ன! ஒரு மாம்பழம் பத்து ரூபாய், ஓர் ஆப்பிள் ஐந்து ரூபாய் விற்கும். உற்பத்தி அதிகரிப்பைவிட, விலை அதிகரிப்பில்தானே சரத் ஜோஷிக்கும், திக்கயத்துக்கும் அக்கறை! நடக்கட்டும், நடக்கட்டும்!' என்று கிண்டல் செய்திருக்கிறார், இன்னொரு பொருளாதாரத் துறை எழுத்தாளர் ஜெய் துபாஷி.

ஒன்றரைக் கோடி ரூபாயில் விவசாய ஆராய்ச்சி மையம் ஒன்றை நிறுவுவதாகச் சொல்லியிருக்கிறது பெப்ஸி. நோய்கள் தாக்காத, அதிக விளைச்சல் தரும் விதைகள் உற்பத்தி மட்டுமல்ல, அவற்றைப் பாரபட்சமில்லாமல் எல்லா விவசாயிகளுக்கும் விநியோகிக்கும் முறையும் கொண்டு வரப்படும் என்கிறது பெப்ஸி.

'பெப்ஸிகோலா' என்ற உலகப் பிரசித்தி பெற்ற பெயர் வைக்கக் கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறார்கள் இங்கேயுள்ள தயாரிப்பாளர்கள். அதற்கென்ன, பெப்ஸி என்று முன்னாலோ பின்னாலோ வந்தால் போதும் என்று சொல்லிவிட்டது பெப்ஸிகோலா.

எல்லாவற்றுக்கும் தலையாட்டிவிட்டு, எப்படியாவது உள்ளே வந்தால் போதும் என்றிருக்கிறது பெப்ஸிகோலாவுக்கு.

ஓர் ஆச்சரியம் என்ன என்றால், இ. காங்கிரஸ் பொதுச் செயலர் கே. என். சிங் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்! 'இந்த பெப்ஸிகோலா, ஜிப்ஸிகோலா எல்லாம் ஏகாதிபத்திய நாடுகளின் மறைமுக முகாம்கள். சிலி, பெரு நாடுகளில் வாலாட்டிய மாதிரி இங்கேயும் செய்யத்தான் இந்த நுழைவுத் திட்டம்!' என்று எச்சரித்திருக்கிறார். ஹூம், இவர் எதிர்ப்பை யார் லட்சியம் பண்ணப் போகிறார்கள்!

ஆதாயம் எதுவுமில்லாமல் இந்தத் திட்டத்துக்கு வழிவிட்டிருக்க மாட்டார்கள் என்று பொதுவாகப் பேசப்பட்டாலும், "அபாண்டம், மூணு வருஷமா முயற்சி பண்றோமாக்கும்!" என்கின்றனர் பெப்ஸிகோலாக்காரர்கள்.

கிசுகிசு ஒன்று: மைக்கேல் ஜாக்சனுக்கு பெப்ஸிகோலா ருசி துளிக்கூடப் பிடிக்காதாம். 'இதை வெளியில் சொல்லித் தொலைக்காதே. உன்னோடு வைத்துக்கொள்!' என்று வருடத்துக்குச் சில லட்சம் டாலர்களைக் கப்பம் கட்டுகிறதாம் பெப்ஸிகோலா.

கிசுகிசு இரண்டு: 'பெப்ஸிகோலாதான் வந்தாச்சே, நான் மட்டும் வரக் கூடாதா? நீங்கள் என்ன கண்டிஷன் போட்டாலும் எங்களுக்குச் சம்மதம்தான்!' என்று கோத்ரெஜின் கையைக் கோத்துக் கொண்டு வாசலில் நிற்கிறதாம் கோக-கோலா!

— சித்தார்த்.



**கல்கி** 6.11.88

தீபாவளி இதழில்...

புதிய
தொடர்கதை
ஆரம்பம்






ராஜேஷ்குமார்
எழுதும்

# இன்று இறப்பு விழா

## தராசு பதில்கள்




மீண்டும் ஆரம்பம்.

◆ கேரளச் சிறப்பிதழ் — II



படிக்கப் படிக்கத் தெவிட்டாத ஏராளச் செய்திகள், கதை, கட்டுரைகள் — கண்ணைக் கவர்ந்திழுக்கும் வண்ணப்படங்கள்.

மாணவர்களுக்கான SPECIAL பக்கங்கள்





# கள்வனை ஏற்ற கண்ணதாசன்!

தமிழ்த் திரையுலகிலும் கவிதைக் களத்திலும் புகழ்க் கொடி நாட்டிய பாவலரென்றாலும் மாற்றாரின் கருத்துக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கு படைத்தவர், கள்வனை ஏற்ற கண்ணதாசன்!

பெரியோரை மதிப்பதிலும் பெரியோர்களுக்கு மரியாதை தருவதிலும் அவருக்கு இணை அவரேதான்.

1956—ஆம் ஆண்டில் 'நானே ராஜா' என்னும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதும் பொறுப்பை ஏற்றிருந்த கவியரசர், வில்லாள மன்னன் (சிவாஜி கணேசன்) தன் எதிரியிடம் சினந்து பேசும் கட்டத்தில்,

''உயிரை எடுத்து விடு மறவன்
பொறுப்பான்
மானத்தைப் பழித்தால் நாவை
அறுப்பான்''

என்று உரையாடல் எழுதியிருந்தார்.

படம் தணிக்கைக்கு வந்தது. மண்டலத் தணிக்கை அதிகாரி ஜி.டி. சாஸ்திரி ''வசனத்தில் இடம் பெற்றுள்ள மறவன் என்னும் சொல் ஒரு ஜாதியைக் குறிக்கும் சொல் ஆகும். இதனைப் படத்திலிருந்து நீக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

''மறவன் — மறவர் என்பது வீரர்களைக் குறிக்கும் சொற்கள் ஆகும். பாரதியார் கூட 'மறவன் பாட்டு' என்ற தலைப்பில் ஒரு கவிதையை எழுதியிருக்கிறாரே'' என்று கவியரசர் வாதிட்டார்.

ஆனால் தணிக்கை அதிகாரி ஏற்றுக் கொள்ளாததோடு மேலும் ஒரு கருத்தையும் வெளியிட்டார். ''பொதுவாக எழுத்தாளர்கள் திருடன் ஒருவனைக் குறிப்பதற்குக் 'கள்ளன்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். அது தவறு; கள்ளன் என்பது ஒரு ஜாதியைக் குறிக்கும். கள்வன் என்று எழுதினால் அது ஜாதிப் பெயர் ஆகாது'' என்றார்.

இந்த விளக்கம் ஏற்புடையதாகத் தெரிந்தது கவியரசருக்கு! ஒப்புக் கொண்டார். மறவன் என்ற சொல்லைப் படத்திலிருந்து நீக்குவதற்குச் சம்மதித்தார்.

இந்த விளக்கத்திற்கு முன்பு எழுதிய பாடல்களில் 'கள்ளன்' என்றே பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார் கண்ணதாசன்.

உதாரணமாக, 1954—ல் வெளிவந்த வைர மாலை என்னும் படத்தில் எழுதிய 'நடன கலா ராணி' எனத் தொடங்கும் பாடலில்,

அந்தக் கள்ளனுக்கு உன்மேல்
காதலுண்டாம் — ஆனால்
கல்யாணம் வேண்டாமாம் — என்று
எழுதியிருந்தார்.

ஆனால் 1956—ல் சாஸ்திரி தந்த விளக்கத்திற்குப் பின்னர், தாம் எழுதிய பாடல்களில் எல்லாம் மறவாமல் 'கள்வன்' என்றே அவர் எழுதி வந்தார்!

உதாரணமாக, 1960—ல் வெளிவந்த 'மன்னாதி மன்னன்' என்னும் படத்திற்கு எழுதிய 'காவிரித் தாயே! காவிரித் தாயே' என்ற பாடலில்,

கள்வர் கன்னமிட்டால் உன்னிடம்
சொல்வோம்
காப்பவர் கன்னமிட்டால் யாரிடம்
சொல்வோம்

என்று எழுதினார்!

திரைப்படப் பாடல்களில் மட்டுமின்றி தாம் எழுதிய தனிக் கவிதைகளிலும் 1956—ல் தணிக்கை அதிகாரி ஜி.டி. சாஸ்திரி சொன்ன அறிவுரையை ஏற்று, தமது வாழ்நாள் முடிய இருபத்தைந்து ஆண்டுகள் — கடைப்பிடித்திருக்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

— தமிழ்ப்பித்தன்.



நிபுணர்கள்
அனைவர்க்குமே
உடன்பாடான
அந்த சுவை
இதே தான்.
தர்லா தலால் — புகழ்பெற்ற சமையற் கலை நிபுணர்; சமையல் குறிப்புப் புத்தகங்களது ஆசிரியை.
பத்மஸ்ரீ தங்கம் ஃபிலிப் — முன்னாள் முதல்வர், கேட்டரிங் கல்லூரி, பம்பாய்.
பையன் ராஜா — எல்லா வீட்டிலும் உள்ள சுவை மன்னன்! இவனது விருப்பத்தை மீற முடியுமா என்ன!
ஸன்:ப்ளவர்®
ப்ராண்ட்
வனஸ்பதி
ஒவ்வொரு சமையற்கலை நிபுணரும் தமக்கே உரிய வழியையும், பாணியையும் பின்பற்றுவார், உணவு சமைக்க. ஆனால், சமையல் செய்ய ஏற்ற, கலை மிக்க, சிக்கனமான பொருள் பற்றியோ அவர் அனைவர்க்குமே உடன்பாடுண்டு. அப்பொருள் — ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி.
நீங்கள், லேசாக வறுப்பதானாலும், பொன்னிறமாக நன்கு வறுப்பதானாலும், இனிப்புகளோ, கேக்குகளோ செய்தாலும், தினசரி உணவு அல்லது சிறப்பு உணவு தயாரிப்பதானாலும், உங்களுக்குத் தேவை, ஆம் — ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி.
சொல்லப்போனால், இதைவிடச் சிறந்தது வேறேதுமில்லை, தூய நெய் தவிர.
Sunflower BRAND Vanaspati
Sunflower BRAND Vanaspati
सनफ्लॉवर
WIPRO LIMITED
Closer to the consumer
ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி... இதைவிடச் சிறந்தது தூய நெய் மட்டுமே
HTA 2357

## ஓர் இனிய வேண்டுகோள்!

## முன்னதாக ஆர்டர் செய்யுங்கள்!
## ஏமாற்றத்தை தவிர்த்திடுங்கள்!!

வரும் தீபாவளி பண்டிகைக்கு
உங்கள் தேவைக்கு ஏற்ற இனிப்பு மற்றும் காரவகை
பண்டங்களுக்கு இன்றே அணுகுவீர்:

# ஸாய் கிருஷ்ணா
## ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்
## (AIR-CONDITIONED)




57-A சுப்ரமணியம் தெரு,
அபிராமபுரம்
(சி.பி. ராமஸ்வாமி
ரோடு அருகில்)
சென்னை-600 018.

தொலைபேசி
**458407**

பண்டிகை நாட்களின் மகிழ்ச்சியோடு இனிய சுவையும் கூடுவதற்கு உயர்தரமான இனிப்புகள் எங்கள் சமையற்கலை வல்லுனர்களால் சுகாதார முறையில் தயாரிக்கப்படும்

எங்கள் கடைக்கு ஒரு முறை விஜயம் செய்து நாவிற்கினிய சுவைகளை அனுபவிப்பீர். பண்டிகை நாட்களின் உற்சாகத்தை அதிகரிப்பீர்.

வாடிக்கையாளர்களின் பூரண திருப்தியே எங்கள் குறிக்கோள்

ஸாய் கிருஷ்ணா இனிப்புகள் —
திகட்டாத சுவை.... எண்ணற்ற வகை.

# தப்புக்கணக்கு



இரண்டு இணைபிரியா நண்பர்கள் வாழ்வில் ஒரு வருடம் கழித்து எந்த நிலைமையில் இருக்கிறோம் என்று பார்ப்பதற்காகப் பிரிகிறார்கள்.

ஒருவருக்கு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கை.

மற்றவருக்கு எப்படியும் வாழலாம் என்ற கொள்கை.

இப்படித்தான் வாழவேண்டும் ஆசாமி வேலைகிடைக்காமல் போராடி, சூழ்நிலை காரணமாகக் கொலைகாரன்.

எப்படியும்வாழவேண்டும் ஆசாமி இன்ஸ்பெக்டராக மாறி கொலைகாரன், தன் உயிர் நண்பன்தான் என்று அறியாமல் தேடுகிறார்.

கொலைகாரனும், இன்ஸ்பெக்டரும் ஒருவரை ஒருவர் யார் என்று அறியாமலேயே கண்ணாமூச்சி ஆடுகிறார்கள்.

கடைசியில்.... ஏன் சார் முடிவுரை சொல்லி விட்டால் அப்புறம் என்னதான் மிச்சம் இருக்கும் நீங்கள் படம் பார்க்கும் போது?

சரண்ராஜ், சந்திரசேகர் — மார்க்கெட்டல் என்ற காரணத்தினாலேயே கொஞ்சம் போட்டி போட்டுக் கொண்டு நடித்திருக்கிறார்கள்.

அதுவும் சரண்ராஜ் அந்த உருண்ட மோவாயுடன் தலையை நிமிர்த்திச் சிரிக்கிறாரே ஒரு சிரிப்பு. ஒரிஜினல்.

மாதுரிக்கு மறுபடி மறுபடி மறுபடி இதே மாதிரி ரோல்தானா என்று கேட்க வைத்து விடுகிறார்கள். கொடுத்தவரைக்கும் தலையணைக்கு உறை போல காரெக்டரில் கச்சிதமாகப் பொருந்தி இருக்கிறார்.

புதுமுகம் ஆஷாராணி (?) லேசாக ஜெயஸ்ரீ சாயல். முகபாவங்கள், நடிப்பு மரத்தில் செதுக்கப்பட்ட உருவம் போலக் கொஞ்சம் இறுக்கம்தான். பரவாயில்லை. போகப் போகச் சரியாகிவிடும்.

நம்பியார் இப்போதெல்லாம் அடிக்கடி தலைநீட்ட ஆரம்பித்து விட்டார். வெல்கம், வெல்கம். தப்பித் தவறிக்கூட டூயட் பாட ஆரம்பித்து விடாதீர்கள், சாமீ! உடம்புக்கு ஆகாது.

விஜு சக்ரவர்த்தி — வெறும் சக்ரவர்த்தி.

சரண்ராஜைப் பிடிக்க சந்திரசேகர் முயல, முன்னவர் தப்பித்து ஓட, பின்னவர் துரத்த — மூன்று முறை இந்த சேஸிங்கைப் படத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால் மூன்று முறையும் போரடிக்காத மாதிரி செய்திருப்பது டைரக்டரின் பெயரைச் சொல்கிறது.

சண்டைக் காட்சிகள் நிறைய க்ளூகோஸ் சாப்பிட்டிருக்கின்றன. என்னா மொறு மொறு.... என்னா சுறுசுறு...

நான்கு பாடல்களில் இரண்டு கேட்கும்படி.

அட, இசை நம் எம்.எஸ்.வி.! பெருங்காய டப்பாவில் வாசனை பலமாகத்தான் இருக்கிறது.

சீரான திரைக்கதை என்பதாலேயே அலுப்புத்தட்டவில்லை.

ஜீவபாலனை ஆதரிக்கலாம்.

— ஜெயமன்மதன்.

# எதிர்நீச்சல் போடும் சரவணன்

படத்திலிருக்கும் சுட்டிப் பையனின் பெயர் சரவணன். (ஷ்ரவணன்) — வயது ஒன்பது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, நான்கு வகை நீச்சல் போட்டிகளிலுமே சரவணன்தான் நெம்பர் ஒன்! ஒன்பது வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில், ஃப்ரீ ஸ்டைல், பட்டர்ஃப்ளை ஸ்ட்ரோக், இரண்டிலுமே தேசிய சாம்பியன். தவிர, பாக் ஸ்ட்ரோக்கில் இந்தியாவிலேயே இரண்டாவது இடம்; ப்ரெஸ்ட் ஸ்ட்ரோக்கில் மூன்றாவது.

இப்போது சரவணனுக்கு ஒரு பிரச்னை: தமிழக அரசுக்குச் சொந்தமான சென்னை, அண்ணா நீச்சல் குளத்தில் தினசரி காலையும் மாலையும் தனது பயிற்சியாளர் ஜெயராமனின் மேற்பார்வையில் இவன் பயிற்சி செய்ய முடியாது. இந்தப் பிரச்னையை இவனைப் போலவே சுமார் ஒரு டஜன் இளம் நீச்சல் வீரர்கள் அனுபவிக்கிறார்கள். காரணம்: அவர்களுடைய பயிற்சியாளர் ஜெயராமன் தமிழக விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தினால் நியமிக்கப்பட்ட அரசாங்க 'கோச்' அல்ல என்பதுதான்! தனியார் கோச்சான ஜெயராமன் அரசாங்கத்துக்குச் சொந்தமான அண்ணா நீச்சல் குளத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தக் கூடாதாம்! விதிமுறைகள் இடம்தரவில்லையாம்!

சில மாதங்களுக்கு முன்புவரை ஜெயராமன், அண்ணா நீச்சல் குளத்தில் சரவணன் உள்பட ஒரு டஜன பேருக்குப் பயிற்சி அளித்து வந்தார். ஆனால் திடீரென்று அரசாங்க கோச் அல்லாதாருக்கு அண்ணா நீச்சல் குளத்தைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் முறையிட்டதன் பேரில், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகம் விதியைத் தளர்த்தி, தினமும் ஐம்பது ரூபாய் கட்டணம் செலுத்தி விட்டு, தனியார் கோச் தமது பயிற்சி வகுப்புக்கு அண்ணா நீச்சல் குளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அறிவித்தது. சில நாட்களுக்குப் பிறகு இந்தக் கட்டணம் தினத்துக்கு நூறு ரூபாயாக உயர்த்தப்பட்டது! நெருங்கிக் கொண்டிருந்த தேசிய அளவிலான போட்டிகளை உத்தேசித்து, பயிற்சி தடைபடாமல் இருக்க சரவணன் மற்றும் சில நீச்சல் வீரர்களின் பெற்றோர் இச் செலவை ஏற்றுச் செலுத்தி வந்தனர். தேசிய அளவிலான போட்டிகள் முடிந்ததும், தனியார் பயிற்சியாளர்கள் அண்ணா நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவது ஒட்டுமொத்தமாகத் தடை செய்யப்பட்டு விட்டது!

இப்போது சரவணனும் மற்றும் சில இளம் நீச்சல் வீரர்களும் மெரீனா நீச்சல் குளத்தில் வாரத்துக்கு மூன்று நாட்கள் ஜெயராமனின் மேற்பார்வையில் பயிற்சி செய்கிறார்கள். மற்ற நாட்களில் அண்ணா நீச்சல் குளத்தில் ஜெயராமனின் மேற்பார்வையின்றி பயிற்சி செய்கிறார்கள்.

"நீச்சல் போட்டியில் கலந்து கொள்வதானால், தினந்தோறும் இரண்டு வேளை, ஒரு நல்ல பயிற்சியாளரின் மேற்பார்வையில் பயிற்சி செய்தாக வேண்டும். சென்னையிலோ அதற்கான வசதி மிகவும் குறைவு. நட்சத்திர ஹோட்டல்களில் நீச்சல் குளங்கள் இருக்கின்றன. அங்கு தினமும் பயிற்சி செய்தால் அங்கு தங்குவோருக்கு இடைஞ்சலாக இருக்கிறது. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான மெரீனா நீச்சல் குளமோ வாரத்தில் மூன்று நாட்கள்தான் திறந்திருக்கிறது. இவற்றை விட்டால் அண்ணா நீச்சல் குளம்தான் பயிற்சிக்கு உகந்ததாய் இருக்கிறது" என்று கூறினார் சரவணனின் அம்மா இந்திரா சுப்ரமணியம்.

"இவர்களை அரசாங்கப் பயிற்சியாளரிடமே பயிற்சி பெறச் செய்தால் என்ன? அரசாங்க பயிற்சியாளர்கள் திறமையற்றவர்களா?" என்று கேட்ட போது,

"அரசாங்க பயிற்சியாளரின் திறமையை நாங்கள் கொஞ்சம்கூடக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் தற்போது பயிற்சி அளிக்கும் ஜெயராமன் ஐந்து வயதிலிருந்து சரவணனுக்குப் பயிற்றுவித்து வருகிறார். சாதாரண நிலையில் இருந்த சிறுவனை இந்த நான்கு வருடங்களில் தேசிய சாம்பியனாக உருவாக்கியிருக்கிறார். அவர் என் பையனை எவ்வளவு முழுமையாகப் புரிந்து கொண்டிருப்பார்? அவன் எதிர்காலத்தில் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும் என்பது அவரை விட வேறு யாருக்கு நன்றாகத் தெரிந்திருக்க முடியும்? இந்தச் சமயத்தில் ஒரு புது பயிற்சியாளரை அமர்த்தினால் சரவணனின் பயிற்சி வேகம் தடைப்படும் இல்லையா? இது அவன் எதிர்காலத்தை பாதிக்குமா? பாதிக்காதா?" என்று எதிர்க் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போனார் இந்திரா சுப்பிரமணியன்.

இந்த விஷயம் குறித்து ஐ.ஏ.எஸ். அதிகாரி தியானேஸ்வரனைச் சந்தித்துக் கேட்டோம்.

"தனியாரிடம் பயிற்சி பெறுவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அரசாங்க நீச்சல் குளத்தைப் பயன்படுத்திப் பயிற்சி அளிப்பதன் மூலம் தனிப்

பட்ட முறையில் நிறைய பணம் சம்பாதிக்கும் பயிற்சியாளர், அரசாங்கத்துக்கு ஒரு தொகையைச் செலுத்தட்டும் என்றுதான் கூறுகிறோம். அண்ணா நீச்சல் குளம் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய் நஷ்டம் அடைகிறது! இந் நிலையிலும் நாங்கள் மற்றவர்களிடம் வசூலிக்கும் சாதாரண கட்டணத்தைக் கூட வசூலிக்காமல், தேசிய சாம்பியன்களை இங்கே இலவசமாகப் பயிற்சி செய்ய அனுமதிக்கிறோம். பயிற்சியாளரிடம்தான் கட்டணம் கேட்கிறோம். ஜெயராமனுக்கு மட்டும் அல்ல, எந்த தனியார் பயிற்சியாளருக்கும் இதே விதிதான். அரசாங்க வேலையில் இருந்து கொண்டு உபரியாகப் பயிற்சியாளர் வேலை செய்பவர்கள் தங்கள் அலுவலகத்திலிருந்து 'நோ அப்ஜெக்ஷன்' சான்றிதழ் பெற்று வர வேண்டும் என்றும் கூறுகிறோம்.

கடைசியாய் ஒரு விஷயம். நான் விளையாட்டில் மிகுந்த ஆர்வமுடையவன். எந்தப் பயிற்சியாளரின் மாணவன் என்று பாராமல், திறமைசாலிகள் எல்லோரையுமே கண்டுபிடித்து ஊக்குவிப்பதில் எனக்கு ஆர்வம் உண்டு. ஆனால் அரசு அளிக்கும் சலுகைகளையும் ஊக்கத்தையும் பயன்படுத்திக் கொண்டு முன்னுக்கு வரும் சிலர், அதன் மூலம் பெரிய கல்லூரிகளில் 'அட்மிஷன்' பெறுகிறார்கள். கல்லூரியில் இடம் கிடைத்ததும் விளையாட்டை அடியோடு மறந்து விடுகிறார்கள். இதுதான் வருத்தத்துக்குரியது'' என்றார் தியானேஸ்வரன். இவர் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குனர்.

தியானேஸ்வரன் கூறுவதில் நியாயமில்லாமல் போகவில்லை. ஆனால் ஒன்று. தனியார் பயிற்சியாளர்களிடம் அரசாங்கம் கட்டணம் வசூலிக்க முயன்றால், அந்தப் பயிற்சியாளர் அக் கட்டணத்தைத் தமது மாணவரிடமிருந்து கறந்துதான் கட்டப் போகிறார். எனவே அரசாங்கத்தின் நோக்கம் தோற்றுப் போகிறது! எளிய குடும்பங்களிலிருந்து வரக்கூடிய உண்மையான திறமைசாலிகள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள்.

— ஜூலி.

வண்ணப்படம்: யோகா.

* சாதனைகளை நோக்கி......



**1739 மே.**

**முகமது ஷா என்ற மொகலாயப் பேரரசரின் அரசவை...**
**ஒரு எளிமையான தலைப்பாகைப் பேழை**
**நாதிர் ஷா என்ற பாரசீகப் பேரரசர்க்கு**
**விலைமதிப்பற்ற கோஹினூர் வைரத்தைத் தந்தது.**
**நாதிர் ஷா செய்த தந்திரம். நட்புறவுக்கு அடையாளமாக**
**மொகலாயப் பேரரசருடன் தலைப்பாகையை மாற்றிக்**
**கொண்டார்.**
**இதனால் மொகலாயப் பேரரசர் முகமது ஷா**
**தனது ஒப்பற்ற களஞ்சியமாகிய கோஹினூர் வைரத்தை**
**நிலையாக இழந்து விட்டார்.**

வரலாறு நமக்கு வழங்கும் கதை: மொகலாயப் பேரரசைக் கொள்ளையடித்து அதன் விலைமதிப்பற்ற மயிலாசனத்தையும் பிற செல்வங்களையும் கவர்ந்து கொண்ட பாரசீக மன்னன் நாதிர் ஷா, அரசுப் பொறுப்பை மட்டும் மொகலாய மன்னன் முகமது ஷாவிற்கே திருப்பித்தர முன்வந்தார். அதற்கான விழா ஏற்பாடாயிற்று.

விலைமதிப்பற்ற கோஹினூர் வைரத்தையும் கவர்ந்துகொள்ள நாதிர் ஷாவின் பொருமை மனம் எண்ணியதை நினைத்து அதனைத் தனது தலைப்பாகைக்குள் ஒளித்து வைத்துக்கொண்டு முகமது ஷா அந்த விழாவிற்க்கு வருகை தந்தார்.

இது எப்படியோ நாதிர் ஷாவிற்க்கு தெரிய வந்தது. அவர் ஒரு யுக்தி செய்தார். கோலாகலமான அந்த விழாவில் மரபு முறைப்படி தலைப்பாகையினை முகமது ஷாவுடன் மாற்றிக்கொண்டார். முகமது ஷாவின் தலைப்பாகையோடு பாவலர் புகழ்ந்து பாடிய ஒளிமிக்க விலைமதிப்பற்ற வைரமும் கைமாறியது. வரலாற்றுப் புகழ்மிக்க **கோஹினூர் வைரம்** பாரசீக மண்ணுக்குப் போன கதை இதுவே.


ஆனால் **சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள்** நிறைந்துள்ள இந்நாட்களில் நீங்கள் உங்கள் உடைமைகளைப் பாதுகாப்பதற்கென நாடுகளைக் கடக்கவோ இடர்ப்பாடான வழிகளை நாடவோ அவசியமேயில்லை. உங்கள் விலைமதிப்பற்ற உடைமைகளின் பாதுகாப்புக்கும் வசதிக்கும் உத்திரவாதமளிப்பது **'சக்தி'**.

உங்கள் மதிப்புமிக்க உடைமைகளை உங்களுக்கு மட்டுமே தெரியும் வகையில் பேணிப் பாதுகாத்து வைக்க நீங்கள் சிரமப்படத் தேவையில்லை. உங்களுக்காக அதை **சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள் எளிமையாக, இனிமையாகச் செய்து தருகின்றன.**

பாதுகாப்பிற்கும், நம்பிக்கைக்கும் முழுவதும் பாத்திரமான **சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள்**

**குளிர்சாதன வசதியுடன் நீங்கள் உங்கள் பாதுகாப்புப் பேழைகளைப் பயன்படுத்த, இனிய வரவேற்பு நல்கக் காத்திருப்பவை சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள்.**





துப்பறியும்
சூர்யா - கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
கடற்கரையில் காலிப் பெட்டி ஒன்றில் ஒளிந்து கொண்டாள் கிரண். பெட்டி கப்பலேற்றப் பட்டது. பயணத்தின் முடிவில் அவள் வெளிப்பட்ட போது கூண்டுகளில் அடைபட்ட சில மிருகங்க ளிடையில் இருந்தாள்.
ஒரு மனிதன் பரிசோத னையில் ஈடுபட்டிருந்தான்.
ஏற்கெனவே பார்த்த முகமாகத் தோன்றுகிறதே!
ஒருவேளை நோபெல் பரிசு பெற்ற டாக்டர் கொரானாதானோ?
கிரண் அவரை அழைத்தாள்.
டாக்டர் ஸார்!
டாக்டர் அவளைத் திரும்பிப் பார்த் தார்.
துப்பறியும் கிரண்தானே, நீ? உன் படங்களைப் பார்த்திருக்கிறேன். இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?
முதலில் உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.
என் கதை துயரமானது. சில ஆண்டுகளுக்கு முன் 'ஜீன்'கள் பற்றி ஒரு முக்கிய விஷயம் கண்டுபிடித்தேன்......
(தொடரும்)


நரசுஸ் அளிக்கும்
விழாக்கால வெகுமதிகள்!
கேட்டீங்களா சேதியை? நரசுஸ் காபி வெகுமதி கொடுக்கறாங்களாமே!
பேஷ், பேஷ்! ரொம்ப நல்ல செய்தி!
வெகுமதிகள்:
• 35 கிலோவிற்கு எவர்சில்வர் ஜக்.
• 10 கிலோவிற்கு எவர்சில்வர் டபரா செட்.
• 6 கிலோவிற்கு எவர்சில்வர் டம்ளர்.
• 1½ கிலோவிற்கு துணிப்பை.
• ½ கிலோவிற்கு எவர்சில்வர் ஸ்பூன்.
நரசுஸ்
மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று, வெகுமதிகளைப் பெறுங்கள். 1.10.88 முதல் 7.11.88-ல் முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.
அப்படியா! இதோ போறேன்! நரசுஸ் காபி வாங்க!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ் காபி
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.
ADWAVE/NCC/3621

# பொன்னியின் செல்வன்

## அத்தியாயம் 43
## நந்தி மண்டபம்

மறுநாள் பிற்பகல் மீண்டும் பெரிய பிக்ஷு பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்கு வந்தார். அவரிடம் பல கேள்விகள் கேட்பதற்கு இளவரசன் துடித்துக் கொண்டிருந்தான். சின்ன பிக்ஷுவிடம் அவன் கேள்வி கேட்டு விவரம் அறிந்து கொள்ளச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. "ஐயா! எல்லாம் குருதேவர் தெரிவிப்பார்" என்ற ஒரே வித மறுமொழிதான் திரும்பத் திரும்ப வந்தது.

குருதேவர் வந்ததும், "இளவரசே! இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"ஐயா! உடம்பு என்னை மிகவும் தொந்தரவுபடுத்துகிறது. 'எதற்காகச் சோம்பிப் படுத்திருக்கிறாய்? எழுந்து ஓடு! குதிரை மேல் ஏறு! நதியில் குதித்து நீந்து! யானையுடன் சண்டை போடு! வெறுமனே படுத்திராதே!' என்கிறது. வயிறும் வெகு சுறுசுறுப்பாயிருக்கிறது. சின்ன பிக்ஷு கொண்டு வந்து கொடுத்த உணவெல்லாம் போதவில்லை. ஆச்சாரியரே! இத்தனை நாள் நான் கடும் சுரம் பீடித்து நினைவு தவறியிருந்தேன் என்பதையே நம்ப முடியவில்லை. தங்களுடைய மருந்து அவ்வளவு அற்புதமான வேலை செய்திருக்கிறது!" என்று சொன்னான் பொன்னியின் செல்வன்.

"ஐயா! உடம்பின் பேச்சை ரொம்பவும் நம்பி விடக் கூடாது. சுரம் தெளிந்ததும் அப்படித்தான் இருக்கும். கொஞ்சம் அசட்டையாயிருந்து, இரண்டாந் தடவை சுரம் வந்து விட்டால், உயிருக்கே ஆபத்தாகப் போய் விடும்!"

"குருதேவரே! என்னுடைய உயிருக்கு வரக் கூடிய ஆபத்தைப் பற்றி நான் அவ்வளவாகப் பயப்படவில்லை...."

"தாங்கள் கவலைப்படவில்லை; சரிதான்! ஆனால் இந்தச் சோழ நாட்டில் உள்ள கோடி கோடி மக்கள் சென்ற நாலைந்து தினங்களாக எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், தெரியுமா? நாடு நகரங்கள் எல்லாம் அல்லோல கல்லோலப் படுகின்றன. சின்னஞ் சிறு குழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரையில் கண்ணீர் விடுகிறார்கள்...."

"ஐயா! தாங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. ஜனங்கள் எதற்காக அவ்வளவு வருத்தப்பட வேண்டும்? ஒருவேளை நான் இந்தச் சுரம் குணமாகிப் பிழைக்க மாட்டேன் என்ற எண்ணத்தினாலா? சூடாமணி விஹாரத்தில் தாங்கள் எனக்குச் சிகிச்சை செய்து வருகிறீர்

அமரர் கல்கி

கள் என்று தெரிந்திருக்கும் போது ஜனங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?''

''இளவரசே! தங்களுக்குச் சுரம் என்பதும், தாங்கள் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதும் ஜனங்களுக்குத் தெரியாது. இந்த நகரத்தின் மாந்தர்களுக்கு அது தெரிந்திருந்தால், இந்த விஹாரத்தில் இவ்வளவு அமைதி குடிகொண்டிருக்குமா? மதில் சுவர்களையெல்லாம் இடித்துத் தகர்த்துக் கொண்டு அத்தனை ஜனங்களும் தங்களைப் பார்க்க இங்கு வந்திருக்க மாட்டார்களா? அன்று காலையில் தாங்கள் கடலில் மூழ்கி விட்டதாகச் செய்தி வந்த போது இந்த நகரின் மாந்தர் எழுப்பிய ஓலத்தையும் பிரலாபத்தையும் தாங்கள் கேட்டிருந்தால்.... ஏன்? இந்த விஹாரத்துக்குள்ளேயே அன்று காலை கண்ணீர் விட்டுக் கதறாதவர் யாரும் இல்லையே?''

பொன்னியின் செல்வர் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, ''குருதேவரே! இது என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? நான் கடலில் முழுகிவிட்டதாகச் செய்தி வந்ததா? எப்போது வந்தது? யார் அத்தகைய பயங்கரச் செய்தியைக் கொண்டு வந்தது? எதற்காக?" என்று கேட்டார்.

''யார் கொண்டு வந்தார்களோ, தெரியாது! ஒருநாள் காலையில் அந்தச் செய்தி இந்த நகரமெங்கும் பரவி விட்டது. தங்களை இலங்கையிலிருந்து கோடிக்கரைக்கு ஏற்றி வந்த கப்பல் சுழல் காற்றில் அகப்பட்டு முழுகி விட்டதாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். கோடிக்கரையோரமாக தனாதிகாரி பழுவேட்டரையர் தங்களை எவ்வளவோ தேடியும் தங்கள் உடல்கூட அகப்படவில்லையென்றும், ஆகையால் கடலில் முழுகிப் போயிருக்க வேண்டும் என்றும் பராபரியாகச் செய்தி பரவி விட்டது. அதைக் கேட்டு விட்டு நான்கூட இந்த விஹாரத்தின் வாசலில் நின்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது இன்னொரு பிக்ஷு வந்து, நோயாளியை ஏற்றிக் கொண்டு ஒரு படகு விஹாரத்தின் பின்புறத்துக் கால்வாயில் வந்திருப்பதாகத் தெரிவித்தார். நான் உடனே வந்து பார்த்த போது படகில் உள்ள நோயாளி தாங்கள்தான் என்பதைக் கண்டேன். பிறகு, மூன்று நாளாகச் சிகிச்சை செய்து வந்தோம். நேற்றுத்தான் தங்களுக்கு நினைவு வந்தது.

''ஆச்சாரியரே! என்னைப் படகில் ஏற்றிக் கொண்டு வந்தது யார், சொல்ல முடியுமா!''

''ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் படகு தள்ளிக் கொண்டு வந்தார்கள்.''

''ஆம், ஆம்; எனக்குக்கூடக் கனவில் கண்டது போல் நினைவுக்கு வருகிறது. அந்த இளைஞனும் யுவதியும் யார் என்று தெரியுமா? இளைஞன் வாணர் குலத்து வந்தியத்தேவனா?''

''இல்லை, ஐயா! அவன் பெயர் சேந்தன் அமுதன் என்று சொன்னான். சிவபக்தி மிக்கவன் என்று தோன்றியது. பெண்ணின் பெயரை நான் அறிந்து கொள்ளவில்லை. தேகதிடமும் மனோவலியும் வாய்ந்தவள்.....''

''அவள் யார் என்று நான் ஊகிக்க முடியும். ஓடக்காரப் பூங்குழலி; தியாகவிடங்கரின் மகள். அவர்கள் என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தார்கள் என்று சொல்லவில்லையா?''

''இல்லை, இளவரசே! நான் அவர்களிடம் அதைப் பற்றிக் கேட்கவும் இல்லை.''

''நான் இங்கு பத்திரமாயிருக்கிறேன் என்று தாங்கள் யாருக்கும் தெரியப்படுத்தவில்லையா?''

''இல்லை, ஐயா! யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று தங்களை அழைத்து வந்தவர்கள் சொன்னார்கள். தங்கள் உடல் நிலையை முன்னிட்டுச் சொல்லாமலிருப்பதே நல்லது என்று நானும் எண்ணினேன்.''

''ஆச்சாரியரே! இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. என்னைச்

சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி என் தந்தை — மும்முடிச் சோழ மகாராஜா — கட்டளையிட்டிருந்தார். அதற்கிணங்கவே நான் இலங்கையிலிருந்து புறப்பட்டேன். நடுவில் ஏதேதோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. சக்கரவர்த்தியின் கட்டளைக்கு விரோதமாக நான் நடந்தேன் என்று குற்றம் சாட்டுவதற்காக இந்தச் சூழ்ச்சி நடந்திருப்பதாகத் தோன்றுகிறது. நான் கடலில் முழுகி இறந்து விட்டதாகவும் கதை கட்டி விட்டிருக்கிறார்கள். குருதேவரே! என்னைத் தாங்கள் இந்தச் சூடாமணி விஹாரத்தில் ஏற்றுக் கொண்டதே இராஜத் துரோகமான காரியம். மேலும் வைத்திருப்பது பெருங் குற்றமாகும். உடனே என்னைத் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுங்கள்....."

"இளவரசே! தங்களுக்கு இடங்கொடுத்ததற்காக எனக்கு இராஜ தண்டனை கிடைப்பதாயிருந்தால் அதைக் குதூகலத்துடன் வரவேற்பேன். அதன் பொருட்டு இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்தை இடித்துத் தள்ளி மண்ணோடு மண்ணாக்கி விடுவதாயிருந்தாலும் பாதகம் இல்லை...."

"தங்களுடைய பரிவைக் குறித்து மகிழ்கிறேன், குருதேவரே! ஆனாலும், என்னைக் கொண்டு வந்தவர்களிடம் ஒன்றும் விசாரியாமல் எப்படி என்னை ஏற்றுக் கொண்டீர்கள்?"

"விசாரிப்பதற்கு அவசியம் என்ன? கடும் சுரத்தோடு வந்த தங்களை வரவேற்றுச் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் என்னைப் போன்ற பிக்ஷுக்களுக்கு வேறு என்ன உயர்ந்த கடமை இருக்க முடியும்? மேலும், தங்களுடைய திருத்தமக்கையார், குந்தவை தேவியார், தாங்கள் இங்கு வந்து சில நாள் தங்கக்கூடும் என்று முன்னமே எனக்குத் தெரிவித்திருந்தார்கள்..."

"ஓ! அப்படியா? இளைய பிராட்டியா அவ்விதம் சொல்லி அனுப்பியிருந்தார்? எப்போது?"

"தாங்கள் இங்கு வருவதற்குச் சில நாளைக்கு முன்பு. தங்களைக் கொண்டு வந்த சேந்தன் அமுதனும் இளையபிராட்டியின் விருப்பம் என்று தான் கூறினான்."



**"எங்கள் கையில் ஆட்சியைக் கொடுத்துப் பாருங்கள்! எங்கள் தலைவர் வரும் சாலைகளைச் செப்பனிடுவோம்! சாலைகளில் அலங்கார வளைவுகள் அமைத்து அழகுபடுத்துவோம்..!"**

**— மணியன் தர்மலிங்கம்.**

"குருதேவா! என்னை அழைத்து வந்தவர்கள் இருவரும் உடனே திரும்பிப் போய் விட்டார்களா? அவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா? அவர்களைப் பார்த்தாவது சில விவரங்கள் எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டும்."

"ஐயா! பதற்றம் வேண்டாம். அவர்கள் இருவரும் இந்த நகரத்திலே தான் இருக்கிறார்கள். தினம் ஒரு முறை வந்து தங்கள் உடல் நிலையைப் பற்றி விசாரித்துப் போகிறார்கள். இன்றைக்கு ஏனோ இதுவரையில் வரக் காணோம்..."

இச்சமயத்தில் சின்ன பிக்ஷு வந்து குருதேவரைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தார். ஆச்சாரிய பிக்ஷு "இதோ வந்து விட்டேன், ஐயா!" என்று கூறி விட்டு வெளியே சென்றார். சற்று நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பி வந்த போது இளவரசன் அருள்மொழிவர்மனுடைய பரபரப்பு மேலும் அதிகமாகியிருப்பதைக் கண்டார்.

"ஆச்சாரியரே! இனி ஒரு கணமும் நான் இங்கே தங்கியிருக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையை மீறி நான் இங்கே வந்து ஒளிந்திருந்தேன் என்ற பழியை ஏற்க நான் விரும்பவில்லை. என்னால் இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்துக்கு எந்த விதமான தீங்கு நேரிடுவதையும் விரும்பவில்லை" என்றான் இளவரசன்.

பெரிய பிக்ஷு மலர்ந்த முகத்துடன்

"இளவரசே! உண்மையில் அத்தகைய பெரும் பொறுப்பை நானும் இனி வகிக்க முடியாது. தங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரு கணமும் தங்களை நான் இங்கு வைத்திருக்க விரும்பவில்லை. இந்தக் கணமே தாங்கள் புறப்படலாம். கால்வாயில் படகு ஆயத்தமாய்க் காத்திருக்கிறது!" என்றார்.

"எங்கே போவதற்கு?"

"அது தாங்கள் தீர்மானிக்க வேண்டிய காரியம். தங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்த இருவரும் படகுடன் தங்களை அழைத்துப் போக வந்திருக்கிறார்கள்."

இளவரசன் சிறிது தயங்கினான். ஆச்சாரிய பிக்ஷுவின் முகத்தில் மர்மமான புன்னகை பொலிவதைக் கண்டு, 'இதில் இன்னும் ஏதேனும் சூழ்ச்சி இருக்கக்கூடுமோ?' என்று வியந்தான்.

"அவர்கள் இருவருமே திரும்ப வந்திருக்கிறார்களா? எதற்காக என்று சொல்லவில்லையா?"

"சொன்னார்கள். இந்த விஹாரத்திலிருந்து ஒரு நாழிகை தூரத்தில், கால்வாயின் கரையில் நந்தி மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் தங்களைப் பார்ப்பதற்காக இரண்டு பெண்மணிகள் வந்து காத்திருக்கிறார்களாம்."

இளவரசன் அவசரமாகக் கட்டிலிலிருந்து இறங்கினான். "ஆச்சாரியரே! உடனே படகுக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்! இவ்வளவு தாமதம் ஆகி விட்டதே" என்றான்.

பிக்ஷு இளவரசனைக் கையினால் தாங்கிக் கொண்டு கால்வாய்க்கரை வரையில் சென்றார். ஆனால் இளவரசனுடைய நடையில், நாலு நாளைக்கு மேலாகக் கடுஞ் சுரத்தினால் பீடிக்கப் பட்டிருந்ததின் அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஏறு போல் நடந்து பொன்னியின் செல்வர் கம்பீரமாக வருவதைக் கண்டு சேந்தன் அமுதன், பூங்குழலி இருவருடைய முகங்களும் மலர்ந்தன.

அருள்மொழிவர்மன் படகில் ஏறி உட்கார்ந்ததும் பிக்ஷு அவனைப் பார்த்து, "ஐயா! தங்களுக்கு ஏதேனும் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதை இந்தச் சூடாமணி விஹாரத்துப் பிக்ஷுக்கள் அனைவரும் பெரும் பாக்கியமாகக் கருதுவோம். தாங்கள் திரும்பவும் இங்கு வந்து ஒரு வாரம் தங்கி உடல் வலிவு பெற்றுப் போவது நலம்!" என்றார்.

"குருதேவரே! நான் திரும்பி வருவேன் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. இல்லாவிடில் இவ்வாறு மற்ற பிக்ஷுக்களிடம் சொல்லிக் கொள்ளாமல் அவசரமாய்ப் புறப்பட்டிருக்க மாட்டேன்!" என்றான் இளவரசன்.

படகு நகரத் தொடங்கியதும் சேந்தன், பூங்குழலி இருவரையும் மாறி மாறிப் பார்த்து, "இக் கால்வாயின் வழியாக நீங்கள் என்னை அழைத்துக் கொண்டு வந்த போது, நீங்கள் தேவலோகத்தவர்கள் என்றும், சொர்க்கத்துக்கு என்னை அழைத்துப் போகிறீர்கள் என்றும் எண்ணியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள். சந்நியாசி மடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தீர்கள். போனால் போகட்டும். கடலில் நீந்திக் கை சளைத்து நினைவிழந்து போனதிலிருந்து நடந்ததையெல்லாம் உங்களிடம் கேட்க வேண்டும். அதற்கு முன்னால், நந்தி மண்டபத்தில் எனக்காகக் காத்திருப்பவர்கள் யார் என்று சொல்லுங்கள்!" என்றார் இளவரசர்.

இருவரையும் பார்த்து அருள்மொழிவர்மர் கேட்ட போதிலும் பூங்குழலி வாய் திறக்கவில்லை. சேந்தன் அமுதன்தான் மறுமொழி கூறினான். குந்தவைப் பிராட்டியும் கொடும்பாளூர் இளவரசியும் ஆனைமங்கலத்துக்கு வந்திருப்பதையும், அங்கிருந்து நந்தி மண்டபத்துக்கு வந்து காத்திருப்பதையும் தெரிவித்தான்.

"ஆகா! எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் அந்தப் பெண்ணை எதற்காக இளைய பிராட்டி இங்கேயும் அழைத்து வந்திருக்கிறார்?"

சேந்தன் அமுதன் "ஐயா! தமிழ்

நாட்டுப் பெண்களிடையே இப்போது ஒரு சுரம் பரவிக் கொண்டிருக்கிறது. புனிதமான சைவ சமயத்தை விட்டு விட்டுப் புத்த மதத்தைச் சேர்ந்து பிக்ஷுணிகள் ஆகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான்.

''அப்படி யார் யார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?''

''கொடும்பாளூர் இளவரசி அவ்விதம் சொல்லிக் கொண்டிருக்கிறாராம். இதோ இந்தப் பெண்ணரசியும் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறாள்!''

''இரண்டு பேர்தானே, அமுதா! அதனால் சைவ சமயத்துக்கு நஷ்டம் வந்து விடாது! இலங்கையில் பிக்ஷுணிகள் தவவாழ்க்கை நடத்தும் மடங்கள் பலவற்றை நான் அறிவேன். வேண்டுமானால் நானே இவர்களை அழைத்துப் போய்ச் சேர்த்து விடுகிறேன்!'' என்று பொன்னியின் செல்வர் கூறவும், சேந்தன் அமுதன் நகைத்தான்.

பின்னர், கடலிலிருந்து இளவரசனும் வந்தியத்தேவனும் கரையேறியதிலிருந்து நிகழ்ந்தவற்றையெல்லாம் சேந்தன் அமுதன் தான் அறிந்தவரையில் கூறினான். பொன்னியின் செல்வர் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டு வந்ததுடன், தன்னுடைய ஞாபகங்களையும் ஒத்துப் பார்த்துக் கொண்டு வந்தார்.

''அதோ நந்தி மண்டபம்!'' என்று பூங்குழலி கூறியதும், இளவரசர் அவள் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினார்.

## அத்தியாயம் 44

## நந்தி வளர்ந்தது!

படகு அப்போது சென்று கொண்டிருந்த இடத்தில் கால்வாயின் கரைகள் இருபுறமும் ஓங்கி உயர்ந்திருந்தன. பூங்குழலி சுட்டிக் காட்டிய இடத்தில் கால்வாயின் ஓரமாகப் படித்துறை மண்டபம் ஒன்று காணப்பட்டது. படிகள் முடிந்து மண்டபம் தொடங்கும் இடத்தில் இரண்டு ஓரங்களிலும் இரண்டு நந்தி விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிறந்த வேலைப்பாட்டுடனும் ஜீவகளையுடனும் விளங்கிய அந்த நந்தி பகவானுடைய சிலைகளை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். இந்தச் சிலைகளின் முக்கியம் பற்றியே அம் மண்டபத்துக்கு 'நந்தி மண்டபம்' என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. வருஷத்துக்கு ஒருமுறை வஸந்த உற்சவத்தின் போது திருநாகைக் காரோணத்துக் காயாரோகண சுவாமியும் நீலாயதாட்சி அம்மனும் அந்த மண்டபத்திற்கு விஜயம் செய்து கொலு வீற்றிருப்பது வழக்கம். அப்போது மக்கள் திரள் திரளாக அங்கே வந்து சேர்வார்கள். உற்சவம் பார்த்து விட்டு, நிலா விருந்தும் அருந்தி விட்டுத் திரும்பிச் செல்வார்கள். நகரத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்தபடியால் மற்ற சாதாரண நாட்களில் இங்கே ஜனங்கள் அதிகமாக வருவதில்லை.

படகு, மண்டபத்தை நெருங்கியது. மண்டபத்தில் இருந்த இரு பெண்மணிகளையும் பார்த்த பிறகு இளவரசருக்கு வேறு எதிலும் பார்வையும் செல்லவில்லை; கவனமும் செல்லவில்லை.

படகு நெருங்கிவந்தபோது இளைய பிராட்டி குந்தவை படிகளில் இறங்கிக் கீழ்ப் படிக்கு வந்தாள். வானதியோ மண்டபத்திலேயே தூண் ஒன்றின் பின்னால் பாதி மறைந்தும் மறையாமலும் நின்று கொண்டிருந்தாள்.

படித்துறை அருகில் வந்து படகு நின்றது. இளவரசர் இறங்குவதற்குப் படகிலிருந்தபடி சேந்தன் அமுதனும் படியில் நின்றபடி இளையபிராட்டியும் உதவி செய்தார்கள்.

சேந்தன் அமுதனும் பூங்குழலியும் படகைப் பின்னோக்கிச் செலுத்திக்



கொண்டு போய்ச் சிறிது தூரத்தில் நிறுத்தினார்கள்.

''தம்பி! எப்படி மெலிந்து விட்டாய்?'' என்று குந்தவை கூறிய போது, அவளுடைய கனிந்த குரலிலே கண்ணீர் கலந்து தொனித்தது.

பொன்னியின் செல்வன், ''என் உடல் மெலிவு இருக்கட்டும், அக்கா! உன் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது? என்னைக் கண்டதும் உன் முகம் தாமரை போல் மலருவது வழக்கமாயிற்றே? இன்றைக்கு ஏன் உன் முக சந்திரனை மேகம் மறைத்திருக்கிறது? உன் கண்கள் ஏன் கலங்கியிருக்கின்றன? ஆகா! உன் உள்ளத்தைப் புண்படுத்தி வேதனையளித்த எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் எனக்கு அவ்வளவு அவசரமான ஓலை அனுப்பியிருக்க மாட்டாய்!'' என்றான்.

''ஆம், தம்பி! எத்தனையோ அவசரமான விஷயங்கள் சொல்ல வேண்டும்; கேட்க வேண்டும். இலங்கையின் தங்கச் சிம்மாசனத்தை வேண்டாமென்று தள்ளிய வள்ளலே! இந்தக் கருங்கல் சிம்மாசனத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து கொள்!'' என்றாள்.



பொன்னியின் செல்வன் உட்காரும்போது தமக்கையின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். குந்தவை அவனுடைய தலையைக் கரத்தினால் தொட்டு, உச்சி முகர்ந்தாள், அவளுடைய கண்களில் மேலும் கண்ணீர் ததும்பியது.

இருவரும் உட்கார்ந்த பிறகு குந்தவை, ''தம்பி! உன்னை இன்றைக்கு நான் இங்கு வருவித்திருக்கவே கூடாது. சூடாமணி விஹாரத்தின் தலைவர் உனக்கு உடம்பு நன்றாகக் குணமாகிவிட்டது என்று செய்தி அனுப்பினார். அது சரியல்ல; சுரம் உன்னை வாட்டி எடுத்திருக்கிறது. ஆனால் உன்னைப் பார்க்காமலிருக்கவும் என்னால் முடியவில்லை. ஆனைமங்கலம் வந்த பிறகு ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகச் சென்று கொண்டிருந்தது!'' என்றாள்.

''அக்கா! என்னை இங்கு வருவித்தது பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீ மட்டும் படகு அனுப்பாமலிருந்தால் நான் இத்தனை நேரம் பழையாறைக்கே புறப்பட்டிருப்பேன். கடுமையான சுரத்திலேயுங்கூட உன்னுடைய ஓலைதான் என் மனத்தை வருத்திக் கொண்டிருந்தது. அந்த ஓலையை ஒருவரிடம் அனுப்பியிருந்தாயே? அந்த வாணர்





குலத்து வந்தியத்தேவரைப் போன்ற தீரரை நான் பார்த்ததேயில்லை. எத்தனையோ விதமாக அவரைச் சோதித்தேன். எல்லாவற்றிலும் தேறி விட்டார். அவர் இப்போது எங்கே, அக்கா!''

குந்தவையின் முக சந்திரனை மறைத்திருந்த மேகத்திரை சிறிது அகன்றது. பவள இதழ்கள் திறந்து முத்துப் பற்கள் தெரியும்படி புன்னகை பூத்து, ''தம்பி! அவரைப் பற்றி இப்போது என்ன கவலை? வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன!'' என்றாள்.

''என்ன அப்படிப் பேசுகிறாய், அக்கா! உனக்கு அதிருப்தி அளிக்கும்படி நடந்து கொண்டாரா?''

''இல்லை, இல்லை! நான் ஏன் அதிருப்தி அடைய வேண்டும்? உன்னை அழைத்துக் கொண்டு வந்து சேர்ப்பதாக வாக்களித்தார். அந்த வாக்கை அவர் நிறைவேற்றி விட்டார்....''

''அதற்காக அவர் செய்த தந்திர மந்திரங்களையும் கைக்கொண்ட சூழ்ச்சி வித்தைகளையும் நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவர் எங்கே, அக்கா! நீ இங்கு வந்திருக்கிறாய் என்று தெரிந்ததும், வந்தியத்தேவரும் உன்னுடன் வந்திருப்பார் என்று எண்ணினேன். எடுத்ததற்கெல்லாம் மூர்ச்சை போட்டு விழும் இந்தப்

பெண்ணரசி அல்லவா வந்திருக்கி றாள்!''

''இவள் எவ்வளவு தைரியசாலி ஆகி விட்டாள் என்பது உனக்குத் தெரியாது, தம்பி! நேற்று நமது முதன் மந்திரியின் யானை இவளைத் தன் துதிக்கையால் தூக்கி எறிந்தது. மேலே அம்பாரியில் இருந்த என் மடியிலேதான் எறிந்தது. ஆனால் அது அவளுக்குத் தெரியாது! அப்போது எவ்வளவு தைரியமாக இருந்தாள் என்பதை நீ பார்த்திருந்தால்...''

''போதும், உன்னுடைய தோழியின் புகழை நிறுத்திக் கொள். என் நண்பரைப் பற்றிச் சொல்!''

''அவரைப் பற்றி என்ன சொல்வது? அவர் வந்த காரியம் ஆகி விட்டது. திரும்பி அவருடைய எஜமானன் ஆதித்த கரிகாலனிடம் போய் விட்டார்.''

''அப்படியானால், அவர் வாக்குத் தவறி விட்டார். தாம் காஞ்சிக்குப் போகப் போவதில்லையென்றும், சோழ நாட்டிலேயே இருந்துவிடப் போவதாகவும் கூறினாரே?''

''அது எப்படிச் சாத்தியம்? சோழ நாட்டில் இருந்து அவர் என்ன செய்வது? இங்கே உள்ளவர்களின் கதியே நாளைக்கு என்ன ஆகும் என்று தெரியாமலிருக்கிறது. அவர் பேரில் உனக்கு அவ்வளவு பிரியமிருந்தால், சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவருடைய முன்னோர்கள் ஆண்ட சிற்றரசை அவருக்குத் திருப்பிக் கொடுக்கும்படி செய்து விட்டால் போகிறது!''

''சிற்றரசை வைத்துக் கொண்டு அந்த மகாவீரர் என்ன செய்வார், அக்கா?''

''எல்லாச் சிற்றரசர்களும் என்ன செய்கிறார்களோ, அதை அவரும் செய்கிறார்! நீதான் இலங்கா இராஜ்யம் வேண்டாம் என்று மறுத்தாய்; அது போல் அவரும் வேண்டாம் எனச் சொல்லுவார் என நினைக்கிறாயா?''

இளவரசன் இளநகை புரிந்த வண்ணம், ''அக்கா! இலங்கை இராஜ்யம் வேண்டாம் என்று நான் சாட்சிகள் வைத்துக் கொண்டு மறுத்திருக்கிறேன். அப்படியிருந்தும் என் மீது குற்றம் சாட்டிச் சிறைப்படுத்திக் கொண்டு வரத் தந்தை கட்டளையிட்டிருக்கிறார்....''

''தம்பி! நீ இராஜ்யத்தை ஒப்புக் கொண்டிருந்தால் உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டுவரக் கட்டளை பிறந்திருக்காது! நீ சுதந்திர மன்னன் ஆகியிருப்பாய்! அப்போது உன்னை யார் சிறைப்படுத்த முடியும்?''

''தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக அவ்விதம் நான் நடந்து கொண்டிருக்க வேண்டுமா?''

''பொன்னியின் செல்வா! நீ இலங்கை இராஜ்யத்தை ஒப்புக் கொண்டிருந்தால் தந்தை மகிழ்ச்சி அடைந்திருப்பார்! மிச்சமுள்ள சோழ சாம்ராஜ்யத்தை உன் தமையனுக்கும் மதுராந்தகனுக்கும் பிரித்துக் கொடுத்து மன நிம்மதி அடைந்திருப்பார். இப்போதும் அதற்குத்தான் முயற்சி நடக்கிறது, தம்பி! கொள்ளிடத்துக்கு வடக்கே ஒரு ராஜ்யமாகவும் தெற்கே ஒரு ராஜ்யமாகவும் பிரித்து விடப் பிரயத்தனம் நடக்கிறது. நீ வந்தால் இது விஷயத்தில் தந்தைக்கு உதவியாயிருப்பாய் என்று அவருக்கு நம்பிக்கை. முன்னால் உனக்குச் சொல்லி அனுப்பி நீ வராதபடியால் இப்போது சிறைப்படுத்திக் கொண்டு வரச் சொன்னார். இலங்கை ராஜ்யத்தை நீ மறுத்து விட்டாய் என்பது சக்கரவர்த்திக்கு நன்றாய்த் தெரியும்.''

''இராஜ்யத்தைப் பிரிப்பதற்கு நான் ஒருநாளும் உதவியாயிருக்க மாட்டேன். அதைப் போல் பெரிய குற்றம் வேறொன்றுமில்லை. அதை விடச் சித்தப்பா மதுராந்தகருக்கே முழு ராஜ்யத்தையும் கொடுத்து விடலாம்.''

''அப்படியானால் முதன் மந்திரியும் நீயும் ஒரேமாதிரி அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்!''

''ஆம்; முதன் மந்திரியும் அப்படித்தான் கருதுகிறார். இலங்கைக்கு அவர் வந்ததே இதைப் பற்றி என்னுடன் கலந்து பேசுவதற்காகத்தான். அக்கா! இலங்கை இராஜ்யத்தை நான் வேண்டாம் என்று மறுத்ததின் உண்மைக் காரணத்தைச் சொல்லட்டுமா?''

''என்னிடம் சொல்லாமல் வேறு

யாரிடம் சொல்வாய், தம்பி!''

''ஆம்; என் அந்தரங்கத்தைச் சொல்வதற்கு வேறு யாரும் இல்லை தான். இலங்கைக்குப் போவதற்கு முன்னால் அந்நாட்டைப் பற்றிப் பிரமாதமாக எண்ணியிருந்தேன். போன பிறகு தான் அது எவ்வளவு சிறிய நாடு என்று தெரிந்தது. குதிரையில் அல்லது யானையில் ஏறிப் புறப்பட்டால் ஒரே நாளில் அந் நாட்டின் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைக்குப் போய் விடலாம்.''

''சோழ நாடு மட்டும் அதை விடப் பெரிதா, தம்பி? இந்த நாட்டையும் அப்படி ஒரே நாளில் குதிரை ஏறிக் கடந்து விட முடியாதா?''

''சோழ நாடும் சிறியதுதான். ஆகையினால் சோழ நாட்டுக் கிரீடத்தை எனக்கு யாரேனும் அளித்தாலும் வேண்டாம் என்றுதான் சொல்லுவேன். இந்தத் தெய்வத் தமிழகத்தைச் சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு என்று பிரித்தார்களே! அவர்கள் பெரிய குற்றம் செய்தார்கள். அதனாலேயே தமிழகத்தில் வீராதி வீரர்கள் பிறந்தும், இந்த நாடு சோபிப்பதில்லை. வடநாட்டிலே சந்திர குப்தர் என்ன, அசோகர் என்ன, சமுத்திர குப்தர் என்ன, விக்ரமாதித்யர் என்ன, ஹர்ஷவர்த்தனர் இப்படி மகா சக்கரவர்த்திகள் தோன்றி மகா சாம்ராஜ்யங்களை ஆண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அவ்விதம் யாரேனும் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆண்டது உண்டா? காஞ்சி பல்லவர் குலத்தில் மகேந்திர சக்கரவர்த்தியும் மாமல்லரும் இருந்தார்கள். பிறகு அந்தக் குலமும் க்ஷீணித்து விட்டது. அக்கா! நான் இராஜ்யம் ஆளுவதாயிருந்தால், இந்த மாதிரி சின்னஞ் சிறு இராஜ்யத்தை ஆள மாட்டேன். இலங்கை முதல் கங்கை வரையில் பரவி நிலைபெற்ற இராஜ்யத்தை ஆளுவேன். மாலத் தீவிலிருந்து சாவகத் தீவு வரையில் தூர தூர தேசங்களில் புலிக்கொடி பறக்கும் மகா சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பேன்!.... என்னைப் பைத்தியக்காரன் என்றுதானே எண்ணுகிறாய்?''



## அருள்வாக்கு

கொடுக்க வேண்டும். அதுதான் த்யாகம். அதைத்தான் வேதம் எங்கே பார்த்தாலும் வற்புறுத்துகிறது. எந்தக் கர்மாவும்செய்து முடிக்கும்போது, ''நான் தான் கர்த்தா என்பதால் இதன் ப்ரயோஜனம் எனக்கே வந்துவிடப் போகிறதே: அப்படி என் ஒருத்தனுக்கு மட்டும் பலன் கிடைத்துவிடக் கூடாது'' என்கிற பரம த்யாக புத்தியில் ''ந மம''— ''எனதில்லை; எனக்கில்லை'' என்று அதன் பலனை லோக க்ஷேமார்த்தம் த்யாகம் பண்ணச் சொல்கிறது நம்முடைய மதம்.

மற்றவஸ்துக்களைக் கொடுத்துவிட்டு, ''நான் கொடுத்தேன்'' என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டே இருந்தால் இந்த அஹங்காரமானது த்யாகத்தாலும் தானத்தாலும் கிடைக்கிற ஆத்மா விருத்தியை அப்படியே ஏப்பம் விட்டு விடும். த்யாகம் பண்ண வேண்டும். அதைவிட முக்யமாக த்யாகம் பண்ணினேன் என்ற எண்ணத்தையும் த்யாகம் பண்ணிவிட வேண்டும்.

மஹாபலி நிறையக் கொடுத்தான். வாரி வாரிக் கொடுத்தான். ஆனால் தான் கொடுக்கிறோம் என்ற அஹங்காரத்தை அவன் பகவானுக்குப் பலி கொடுக்கவில்லை. இதனால்தான் பகவானே அவனிடம் இந்த அஹங்காரத்தை யாசகமாகப் பெற்று, அஹங்கார நாசத்துக்கு அடையாளமாகத் தலையிலே கால் வைத்தான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

"இல்லை, அருள்வர்மா! என்னைப் போல் ஆகாசக் கோட்டைகள் கட்டுவதற்கும் கற்பனைக் கனவுகள் காண்பதற்கும் நீயும் ஒருவன் இருக்கிறாயே என்று எண்ணி மகிழ்கிறேன். நீ பைத்தியக்காரனாயிருந்தால், நான் உன்னை விடப் பெரிய பைத்தியக்காரி. நம்முடைய தந்தையின் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி அப்படியெல்லாம் மனோராஜ்யம் செய்திருந்தார் என்பதை நான் அறிவேன். அவர் காலத்தில் அது பூரணமாய் நிறைவேறவில்லை. ஆனால் என்னுடைய ஆயுட் காலத்தில் நான் அதைப் பார்க்கப் போகிறேன். சோழ சாம்ராஜ்யம் இலங்கை முதல் கங்கை வரையிலும் மாலத் தீவு முதல் சாவகம் வரையிலும் பரந்து விஸ்தரிப்பதைப் பார்த்து விட்டுத்தான் நான் சாகப் போகிறேன். இந்த என் எண்ணம் நம் தமையன் ஆதித்த கரிகாலனால் நிறைவேறும் என்று ஒரு காலத்தில் நம்பினேன். அந்த நம்பிக்கை எனக்கு இப்போது போய் விட்டது. ஆதித்த கரிகாலன் மகா வீரன்; ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவனிடம் இல்லை. அதனால் அவன் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது. என் மனோரதம் உன்னால் நிறைவேறும் என்ற ஆசை எனக்கு இன்னும் இருக்கிறது. ஒரு வேளை அதுவும் கைகூடாமல் போகலாம். அதனாலும் நான் நிராசை அடைய மாட்டேன். உன்னால் கைகூடா விட்டால் உனக்குப் பிறக்கும் பிள்ளையினால் கைகூடும் என்று உறுதி கொண்டிருக்கிறேன். உனக்குப் பிறக்கும் புதல்வனை, பிறந்த நாளிலிருந்து நானே எடுத்து வளர்ப்பேன். அவனை இந்த உலகம் கண்டறியாத மகாவீரன் ஆக்குவேன். அற்ப ஆசைகளில் அவன் மனத்தைச் செலுத்த விடாமல் அற்புதங்களைச் சாதிக்கக் கூடிய புருஷ சிங்கமாக்குவேன்...."

"அக்கா! நீ என்னைவிடப் பெரிய பைத்தியம் என்பது நிச்சயம். எனக்குக் கலியாணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லை. எனக்குப் பிறக்கப் போகும் புதல்வனைப் பற்றி நீ பேச ஆரம்பித்து விட்டாய். நீ செல்லம் கொடுத்து வளர்க்கும் தோழிகளில் யாருக்காவது அத்தகைய எண்ணமிருந்தால், என்னை மணந்து கொண்டு மணி மகுடம் சூடிச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கலாம் என்ற ஆசை இருந்தால், அது ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை. இதை நிச்சயமாய் அவர்களுக்குச் சொல்லி விடு!" என்று பொன்னியின் செல்வன் கூறிய போது அவனுடைய பார்வை ஒருகணம், மண்டபத்தின் தூணுக்குப் பின்னால் நின்றிருந்த வானதியின்பால் சென்றது. மறுகணம் அவன் திரும்பிய போது, அவனுக்கெதிரே இருந்த படித்துறை நந்தி விக்கிரகத்தைப் பார்த்தான்.

"அக்கா! ஒரு செய்தி! இலங்கை சிறிய இராஜ்யமாயிருந்தாலும் அந்த இராஜ்யத்தை முற்காலத்தில் ஆண்ட மன்னர்கள் மகா புருஷர்கள். பெரிய உள்ளங்களைப் படைத்தவர்கள். அவர்கள் பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுப் பெரிய பெரிய காரியங்களைச் சாதித்தார்கள். செங்கல்களைக் கொண்டு மலை போன்ற, மேக மண்டலத்தை அளாவிய புத்த ஸ்தூபங்களை நிர்மாணித்தார்கள். ஆயிரம் இரண்டாயிரம் அறைகள் உள்ள புத்த விஹாரங்களைக் கட்டினார்கள். பதினாயிரம் தூண்கள் உள்ள மண்டபங்களை எழுப்பினார்கள். புத்த பகவான் எவ்வளவு பெரியவர் என்பதைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளும்படியாக, அதோ அந்தத் தென்னை மர உயரமுள்ள புத்தர் சிலைகளை அமைத்தார்கள். அக்கா! இதோ நமக்கு முன்னாலிருக்கும் நந்தி விக்கிரகத்தைப் பார்! எவ்வளவு சின்னஞ் சிறியதாயிருக்கிறது! அடியும் முடியும் காண முடியாத மகாதேவரின் வாகனமாகிய நந்தி இவ்வளவு சிறயதாகவா இருக்கும்? கைலாசத்தில் பரமசிவனுடைய பரிவாரங்களோ பூதகணங்கள். அந்தப் பூதகணங்கள் அடிக்கடி வந்து தொந்தரவு செய்யாமல் கைலாசத்தின் வாசலில் நின்று காவல் புரிகிறவர் நந்தி தேவர். அவர் இவ்வளவு சிறிய உருவத்துடன் இருந்தால் பூதகணங்களை எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அதோ பார், அக்கா! என் கண் முன்னால் இதோ இந்த நந்தி வளர்கிறது.

அதி நவீன பட்டு வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு
பெறுவது வண்ணங்கள்...
அவைகளின் அழகு ஜாலங்களை
பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு
வகைகளில் உங்களுக்குக்
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்


தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை
கைத்தறி வகைகள்.

DIPR/1766/MS88/HTA

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள் • இணையிலா புதுமைகள், எண்ணிலா வகைகள்

# பாலிஸிதாரர்களுக்கு போனஸ் மேன்மேலும் உயர்கின்றது

**1988**



ஆயுட்கால பாலிஸிகள்

*** Rs. 77.50**

எண்டோமெண்ட் பாலிஸிகள்

**☆ Rs. 62.00**

**1987**



ஆயுட்கால பாலிஸிகள்

*** Rs. 72.50**

எண்டோமெண்ட் பாலிஸிகள்

**☆ Rs. 58.00**

**1986**



ஆயுட்கால பாலிஸிகள்

*** Rs. 65.00**

எண்டோமெண்ட் பாலிஸிகள்

**☆ Rs. 52.00**

**1985**



ஆயுட்கால பாலிஸிகள்

*** Rs. 55.00**

எண்டோமெண்ட் பாலிஸிகள்

**☆ Rs. 44.00**

* ☆ ஆண்டொன்றுக்கு காப்புத் தொகை ரூ. 1000 ஒவ்வொன்றுக்கும்.



மார்ச் 31, 1988 அன்று மதிப்பிடப்பட்ட புதிய போனஸ் விகிதங்கள் பின் வருமாறு:
ஆயுட்கால பாலிஸிகள்:
ஆண்டொன்றுக்கு காப்புத் தொகையின் ரூ. 1000 ஒவ்வொன்றுக்கும்
**ரூ. 77.50**
எண்டோமெண்ட் பாலிஸிகள்:
ஆண்டொன்றுக்கு காப்புத் தொகையின் ரூ. 1000 ஒவ்வொன்றுக்கும்
**ரூ. 62.00**

அதனுடன் தந்திப்பான பாலிஸிகளுக்கு இறுதியில் (கூடுதல்) போனஸும் உண்டு

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எப்போதையும் விட இப்போது அதிகமான பயனளிக்கிறது.

ஆகவே உங்கள் ஆயுள் காப்பு பற்றி இன்றே திட்டமிடுங்கள்!

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**
மக்களின் சேவையில்

வளர்ந்து, வளர்ந்து, வளர்ந்து பெரிதாகிறது. பிரம்மாண்ட வடிவம் பெற்று இம் மண்டபத்தின் மேற் கூரையை முட்டுகிறது. மேற் கூரை இப்போது போய் விட்டது. நந்தி பகவான் வானளாவி நிற்கிறார்! பூதகணங்கள் வருகிறார்கள்! நந்தி பகவானைப் பார்த்துப் பயபக்தியுடன் நின்று சிவனைத் தரிசிக்க அனுமதி கேட்கிறார்கள்! நந்தி பகவான் அவ்வளவு பெரியவராயிருந்தால் சிவபெருமான் வீற்றிருக்கும் ஆலயம் எப்படியிருக்க வேண்டும்? தக்ஷிண மேரு என்று சொல்லும்படி வானை அளாவிய கோபுரம் அமைக்க வேண்டாமா? அதற்குத் தக்கபடி பிராகாரங்கள் இருக்க வேண்டாமா? இப்போது சோழ நாட்டில் உள்ள கோயில்கள் அகஸ்திய முனிவர் கோவில் கொள்வதற்குத்தான் ஏற்றவை. சிவபெருமானுக்கு உகந்தவை அல்ல. எனக்கு இராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். சோழ சிம்மாசனத்தில் யார் அமர்ந்தாலும் ஆலயத் திருப்பணி அதிகாரியாக என்னை நியமிக்கும்படி கேட்டுக் கொள்வேன்......."

"தம்பி! நம் இரண்டு பேரில் பைத்தியம் யாருக்கு அதிகம் என்று போட்டி போட வேண்டியதுதான். தற்சமயம் இந்தச் சோழ நாட்டைப் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உட்பகைவர்களாலும் வெளிப் பகைவர்களாலும் சிநேகிதர்கள் போல் நடிக்கும் பகைவர்களாலும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சில காலமாக நான் அடிக்கடி ஒரு பயங்கரமான கனவு காண்கிறேன். மின்னலென ஒளி வீசும் கூரிய கொலை வாள் ஒன்று என் அகக் கண் முன்னால் தோன்றுகிறது. அது யார் மேலேயோ விழப் போகிறது. அது யார் என்பது எனக்குத் தெரியவில்லை. சோழ குலத்தைச் சேர்ந்த யாராவது அந்தக் கொலை வாளுக்கு இரையாகப் போகிறார்களா அல்லது இந்தச் சோழ ராஜ்யத்தை இரண்டாகத் துண்டு செய்து நாசமாக்கப் போகும் கொலை வாளா அது என்று தெரியவில்லை. நீயும் நானும் யோசித்து முயற்சி செய்துதான் அத்தகைய அபாயம் இந்நாட்டுக்கு ஏற்படாமல் தடுக்க வேண்டும்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆம், அக்கா! வல்லவரையர் கூறிய விவரங்களிலிருந்து எனக்கும் அவ்வாறுதான் தோன்றுகிறது. முக்கியமான அபாயம் சோழ குலத்துக்கு யாரிடமிருந்து வரப் போகிறது என்பதை அறிவாயல்லவா?" என்றான் இளவரசன்.

"பழுவூர் இளையராணி நந்தினியைத்தானே குறிப்பிடுகிறாய், தம்பி!"

"ஆம், அக்கா! அவள் யார் என்பதையும் அறிவாய் அல்லவா?"


"வந்தியத்தேவர் கூறிய விவரங்களிலிருந்து அதையும் அறிந்து கொண்டேன். ஆகையினாலேயே இவ்வளவு அவசரமாக உன்னைப் பார்க்க வந்தேன்!" என்றாள் குந்தவை.

(தொடரும்)

"உங்க சஸ்பென்ஸ் பிளஸ் க்ரைம் கதையில் கொலைகாரன் யார்ங்கிற விஷயத்தைக் கடைசி வரைக்கும் சொல்லாம கதையை முடிச்சிட்டீங்களே, ஏன்?"

"எனக்கே யார்னு தெரியல..."

— மணியன் தர்மலிங்கம்.



'இன்று எப்படியாவது அப்பாவிடம் குடை வாங்கித் தரச் சொல்லிக் கேட்க வேண்டும்' — மழையில் நனைந்து வந்த மாலு மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

மாலுவுக்கு மழையில் நனைவது என்றால் அலாதி பிரியம். அதுவும் கனத்த மழை பெய்து ஓய்ந்த பிறகு, சிறிது சிறிதாய் மழைத் தூறல் விழும்போது, தேங்கி நிற்கும் தண்ணீரில் நடப்பதற்குக் கொள்ளை விருப்பம்.

அம்மாவுக்குத்தான் இந்த மழையைப் பிடிப்பதே இல்லை. கம்பி கம்பியாய் நீளும் மழையைப் பிடிக்க அவள் தாவித் தாவி ஓடும் போதெல்லாம் முதுகில் அடித்து இழுத்து வந்துவிடுவாள்.

முற்றத்தில் தேங்கிய நீரில் கப்பல் விடுவதற்கு எல். கே. ஜி. நோட்டைக் கிழித்ததும் அதற்காக அப்பாவிடம் அடிவாங்கியதும் அவளுக்கு நினைவில் தோன்றின.

அப்பாவுக்கு மாலுவிடம் பிரியம் அதிகம். எவ்வளவுதான் கோபமாய் இருந்தாலும் மாலு கேட்கும் அசட்டுக் கேள்விகளுக்குப் பொறுமையாய்ப் பதில் கூறுவார். ஆனாலும் அன்று ஏனோ கோபமாய் அடித்து விட்டார். அதில் ஒன்றும் மாலுவுக்கு வருத்தம் இல்லை.

அவளுக்கு அப்பாவை நன்கு தெரியும். வெளியே போய்விட்டு வரும்போதெல்லாம் பூந்தி வாங்கி வரும் அப்பா... ஸ்கூலுக்குப் போக மாட்டேன் என்று சொன்னால், காசு தந்து சமாதானம் செய்யும் அப்பா... சட்டையைப் புழுதியாக்கினாலும் பொருட்படுத்தாமல் கட்டிக் கொள்ளும் அப்பா... அப்பா அடித்ததில் அவளுக்கு வருத்தம் இல்லை.

அப்பாவிடம் குடை வாங்கித் தரச் சொல்லிக் கேட்டால் உடனே வாங்கித் தருவாரா...? அவரிடம் காசு இருக்க வேண்டுமே! காசுக்கு என்ன செய்வார்?

மாலுவுக்கு இன்று பள்ளிக்கூடத்தில் நடந்தது நினைவுக்கு வந்தது.

மத்தியானம் வரை நல்ல வெயில்தான் அடித்துக் கொண்டிருந்தது. திடீரென்று மூன்று மணியளவில்தான் கறுப்பு கறுப்பாக மேகம் வானத்தில் நிறைய வந்து மூடிக் கொண்டது.

பரத், விமல், கமலு... யாருமே குடை கொண்டு வரவில்லை. ஆனால் வீட்டுக்குப் போக மணி அடிப்பதற்கு முன்னாலேயே அவர்களுடைய அப்பாவெல்லாம் அவர்களுக்காகக் குடை, ரெயின் கோட் எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

பாலு, சாந்திக்கெல்லாம் மேரிமிஸ் குடையை எடுத்துக் கொடுத்தார்கள்.

"என்ன மாலு, நீ குடை கொண்டு வரல்லே?"

"இல்லை மிஸ்!"

"அப்பா கூட்டிட்டுப் போக வருவாங்களா?"

'வரமாட்டாங்க' என்பது போல் தலையை மட்டும் ஆட்டினாள் மாலு.

"கொஞ்சம் இரு; மழை நின்னதும் போகலாம்" — என்றார் மேரி மிஸ்.

எல்லாரும் போய் விட்டார்கள். நிறைய பேரைக் கார் வந்து அழைத்துச் சென்றது. மாலுவுக்கு அந்த ஸ்கூலிலேயே தான் மட்டுந்தான் ஏழை, தனக்கு மட்டுந்தான் குடை இல்லை என்ற உணர்வு பொங்கியது.

சே...! இந்த ஸ்கூலுக்கே வரக்கூடாது! எப்பப் பாரு, பக்கத்தில இருக்கிற மீரா ஏதாவது ஒரு புது பாக்ஸ் கொண்டு வர்றா... எல்லார் கிட்டேயும் காட்டிப் பெருமைப்பட்டுக்கறா...

இன்னைக்கி எனக்குக் குடை இல்லேன்ன உடனே, உங்கிட்ட குடை இல்லையான்னு கேலி பேசறா...

மேரிமிஸ் மட்டுந்தான் நல்ல மிஸ்... அவங்கதான் அடிக்கிறதே இல்லை. அந்த நிம்மி மிஸ் ரொம்ப மோசம்... எப்பவும் ஸ்கேல் வச்சுட்டுத்தான் கிளாசுக்கு வர்றாங்க...

அதுவுமில்லாம, எவ்வளவு பாடம் படிக்க

**போட்டிக்கதை — 8**

# குடை





வேண்டியிருக்கு இந்த ஸ்கூல்லே! மூணாங்கிளாஸ் படிக்கும் போதே இவ்வளவு பாடம்னா... இன்னும் போகப் போக எவ்வளவு பாடம் இருக்கும்...! அப்பப்பா, நம்மால முடியாது!

பக்கத்து வீட்டு மாமா எத்தனாங்கிளாஸ் படிச்சிருக்காரோ... நல்லா இங்கிலீஷெல்லாம் பேசறாரு... அம்மா ஒரு நாள் அவர் எம். ஏ. படிச்சிருக்கார்'னு சொன்னது நினைவுக்கு வந்தது. இன்றைக்குப் போனவுடனே எம். ஏ. ன்னா எத்தனாங்கிளாஸ்னு கேட்கணும்.

"மாலு மழை நின்னுடுச்சி. வீட்டுக்குப் போகலாம் வர்றியா...?'' —மேரி மிஸ்தான் கூப்பிட்டார்.

'ம்...' என்று தலையை ஆட்டிக் கொண்டு கூட நடந்தாள் மாலு.

வழியில் இருந்த தண்ணீரில் எல்லாம் கால் வைத்துக் குதிக்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. அதே சமயம், மேரி மிஸ் கோபப் படுவாங்

முகிலை இராசபாண்டியன்

களேன்னு பயமாகவும் இருந்தது.

வீடு திரும்பும் திருப்பத்தில் மாலுவை அனுப்பி விட்டுச் சென்றார் மேரி மிஸ்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மா ஓடி வந்தாள்.

''எங்கே மழையில் நனைஞ்சிட்டியோன்னு கவலையா இருந்தது.... மழையில் நனையல் லியே?'' என்று பையை வாங்கினாள்.

அம்மாவிடம் குடை வாங்கித் தரச் சொல் லிக் கேட்டால் என்ன? வேண்டாம். அம்மா கிட்டே கேட்டால் கோபம்தான் வரும். அம்மா நல்ல அம்மாதான். பணம் இல் லேன்னா என்ன செய்வாங்க...

நிம்மி மிஸ்ஸுக்கும் அம்மா மாதிரி 'பட்' டுனு கோபம் வரது. அடிச்சுடறாங்க. அம்மா வுக்குப் பணம் இல்லாமல் கோபம் வர்றது போல அவங்களுக்கும் பணம் இல்லாததால் தான் கோபம் வருதோ? அவங்கதான் சம்ப ளம் வாங்கறாங்களே! பிறகு ஏன் அடிக்க ணும்?

— அப்பா வந்ததும் கேக்கணும்.

''மாலு, காப்பி இந்தா.'' — அம்மா காப்பி கொண்டு வந்தாள். அவளுக்குக் காப்பி குடிக்க வேண்டும் போல்தான் இருந்தது. ஏனோ குடிக்க மனம் இல்லை.

''அப்பா வந்த பிறகு குடிக்கிறேம்மா'' என்று சொல்லி விட்டு ஹோம் வொர்க் செய்ய ஆரம்பித்தாள்.

இரவு ஏழு மணிக்கு மேல் அப்பா வந் தார். கை கால் அலம்பி, சாப்பிடப் போகும் போது அப்பாவிடம் கேட்டாள்.

''அப்பா.... அப்பா... இன்னைக்கு ஸ்கூல் விடற நேரத்துக்கு ஒரே மழைப்பா. என் கிளாஸ் பசங்கள்லாம் குடை எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போனாங்க. எனக்கும் ஒரு குடை வாங்கித்தாங்கப்பா.''

அப்பா பதில் ஏதும் சொல்லாமல் சாப் பிட்டுக் கொண்டிருந்தார்.

''எனக்குப் பக்கத்தில இருக்கிற மீரா தினமும் ஒரு குடை கொண்டு வர்றாப்பா... அவங்க அப்பா கார் எல்லாம் வச்சிருக் காங்க.''

''அவங்க பணக்காரங்கம்மா.....''

''ஏம்பா, நாமும் பணக்காரங்களா இருந்தா என்னப்பா... நாமும் கார் வாங்க லாம் இல்லையா?''

''நமக்கும் கடவுள் நிறைய பணம் தரட் டும், நாமும் கார் வாங்கலாம்.... சாப்பிடு.

ஏன் கடவுள் நமக்கு நிறைய பணத்தைத் தரலை....? கடவுள்கிட்டே கேட்கணும். ஒரு வேளை அப்பா கடவுள்கிட்டே பணம் கேட்க மாட்டாரோ என்னமோ? என்று நினைத்துக் கொண்டாள் மாலு.

அப்பா சாப்பிட்டு விட்டு முற்றத்தில் கிடந்த கட்டிலில் வந்து அமர்ந்தார்.

''மாலூ, அந்த விசிறியைக் கொஞ்சம் எடுத்துட்டு வாம்மா....''

விசிறியைக் கொடுத்து விட்டு வானத் தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அப்பாவின் கையை மெதுவாகத் தொட்

''பிஸ்கட்'' என்ற சொல் பிரெஞ்சுச் சொல்லாகும். இதற்கு, 'இரண்டு முறை சுடப்பட்டது' என்று பொருள்!

— ரமா ராமநாதன்.

டாள் மாலு.

அப்பா குனிந்து, என்ன என்பதைப் போல் பார்த்தார்.

''பக்கத்து வீட்டு மாமா எதுவரைக்கும் படிச்சிருக்காருப்பா....''

ஏன் இவள் இப்படிக் கேட்கிறாள் என்று நினைத்தாரோ என்னவோ.... கொஞ்சம் யோசித்து விட்டு நிதானமாகக் கூறினார்.

''எம்.ஏ., படிச்சிருக்கார்.....''

''எம்.ஏ.'ன்னா எத்தனாங் கிளாஸ்ப்பா?''

''எம்.ஏ....ன்னா... எம்...ஏன்னா.... பெரிய கிளாஸ்!''

''பெரிய கிளாஸ்...ன்னா?''

''பெரிய கிளாஸ்ன்னா... உனக்குத் தெரி யாது.''

''எனக்கு ஸ்கூலுக்குப் போறதுக்கே பிடிக் கல்லை. மூணாங்கிளாஸ்க்கே இவ்வளவு புக்ஸ் படிக்கணும்னா... பெரிய கிளாஸ்ல எவ்வளவு புக்ஸ் இருக்கும்... நம்மால முடி யாதுப்பா...

அப்பா எதுவும் பேசவில்லை. அவருக்கு அவரது பிரச்னைகள்தான் பெரிதாகத் தெரிந்திருக்கும். மாலு சொல்வது எல்லாம் சாதாரணம்.

வானத்தில் நிலா மேகத்திற்குள் மறைவ தும், வெளிவருவதுமாய் இருந்தது. நட்சத்தி ரங்கள் முணுக்... முணுக்... என்று மின்னின.

மாலுவுக்குத் தூங்க வேண்டும் போல் இருந்தது. அப்படியே கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் தூங்கினாளோ தெரி யாது.


''ஏய், சனியனே! கடங்காரா... கறந்து வச்ச பாலைக் கவிழ்த்துக்கிட்டு நிக்கறியே... கண் இல்லையா?'' என்று பக்கத்து வீட்டு மாமி திட்டும் சத்தத்தைக் கேட்டுத்தான் விழித்தாள்.

அப்பா எப்போதோ எழுந்து போய்விட் டிருந்தார்.

மழை சிறுசிறு தூறலாய்ப் போட ஆரம் பித்தது.

மாலுவுக்குக் குடையின் நினைவு வந்தது. குடை இல்லாமல் ஸ்கூலுக்குப் போக வேண்டும் என்று நினைக்க நினைக்க இல் லாத கவலை எல்லாம் அவளுக்கு வந்தது.

''சே! காலங்கார்த்தாலே மழை பிடிச்சி டுச்சா? ஒரு வேலையை உருப்படியாச் செய் தாற்போலத்தான்...'' உளுந்து காயப் போட நினைத்திருந்த அம்மாவுக்கு மழையைப்



பார்த்ததும் வெறுப்பு.

ஒன்பது மணிக்கு மழை ஓய்ந்தது. 'சே! எப்பவும் இந்த மழை இப்படித்தான் ஸ்கூல் போற நேரம் பார்த்து நின்னுடுது' என்று மழையைத் திட்டிக் கொண்டே மாலு அடுப்பங்கரைக்குப் போனாள்.

''நீ இன்னும் ஸ்கூலுக்குப் புறப்படலே?'' என்ற அம்மா, கையில் இருந்த கரண்டியைக் கீழே வைத்துவிட்டு, பிடி துணியால் அடுப்பில் இருந்த பாத்திரத்தை இறக்கினாள்.

முந்தானையில் கையைத் துடைத்தபடியே மாலுவைக் குளியலறைக்குள் இழுத்துச் சென்றாள்.

''அம்மா... இன்றைக்கு எல்லாரும் குடை கொண்டு வருவாங்க... நான் மட்டும் குடை இல்லாமல் போகணும்னா பிடிக்கலை.''

அம்மா காது கொடுத்துக் கேட்பதாய் இல்லை. தலைவாரத் தொடங்கினாள். அவசர அவசரமாக உப்புமாவைத் திணித்தாள்.

''பையை எடுத்துக்கிட்டு உடனே ஸ்கூலுக்குப் போ'' என்று விரட்டினாள்.

''அம்மா, குடை...''

என்று இழுத்த மாலுவிடம்,

''அப்பா இன்றைக்குச் சாயங்காலம் வாங்கி வருவாங்க'' என்றாள். எல்லாம் ஒரு பேச்சுக்குத்தான்.

**வ**குப்பில் கவனமே இல்லை. அப்பா குடை வாங்கி வருவாரா... மாட்டாரா...? ஒருவேளை மறந்திட்டார்னா...? நாளைக்கும் குடை இல்லாமல்தான் வரணும்...

அப்படி எல்லாம் அப்பா மறக்க மாட்டார். என்னை மறந்தால்தானே எனக்குக் குடை வாங்கி வர மறக்கும்.

எப்படிப்பட்ட குடை வாங்கி வருவாரோ? தெரியலை. மீரா வச்சிருக்கிறது மாதிரி கலர் குடை வாங்கி வந்தா நல்லா இருக்கும். ஆனால் கலர் குடை காசு அதிகம் இருக்குமே!

நம்ம அப்பா பாவம். காசுக்கு என்ன செய்வார். மேரி மிஸ் வச்சிருக்கிற கோமாளிப் பொம்மை குடைகூட நல்லாத்தான் இருக்கு. அது மாதிரி வாங்கிக்கிட்டு வந்தாலும் நல்லா இருக்கும்... என்று குடை பற்றிய நினைவுகளிலேயே வகுப்பை ஓட்டினாள் மாலு.

**ம**ணி மூன்று அடித்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் வீட்டுக்குப் போயிடலாம். அப்பா வர்றதுக்கு ஏழு மணியாகும். எப்படியும் குடை வாங்கிட்டு வந்துடுவார். இன்னிக்கு ஒரு நாள் வீட்டுக்குப் போகும் போது மழை வராமல் இருக்கணும். வெளியில் எட்டிப் பார்த்தாள். வெயில் இல்லை. குளிர்ந்த காற்று வீசியது.

ஒருவேளை மழை வந்துவிட்டால்...?

மேரி மிஸ் கூடப் போயிடலாம். மிஸ் கிட்டே சொல்லலாம். 'அப்பா இன்றைக்குக் குடை வாங்கித் தருவார்'னு.

அப்படிச் சொல்ல வேண்டாம். அப்பா வாங்கித்தரலேன்னா நாளைக்கு மிஸ் 'குடை வாங்கலியா'ன்னு கேட்பாங்க.

கேட்டா என்ன? மேரி மிஸ்தானே! கேட்கட்டுமே. இல்லைன்னா சொல்லிடலாம்.

நல்லவேளை... மழை வரலை. ஒரே ஓட்டமா வீட்டுக்கு ஓடிடலாம் என்று மணி அடித்ததும் வீட்டுக்கு ஓடினாள் மாலு.

**அ**ப்பா வீட்டில் இருந்ததைப் பார்த்ததும் மாலுவுக்கு ஒரே ஆச்சரியம். அதைவிடவும் பெரிய ஆச்சரியம். அப்பாவுக்கு அருகில் இருந்த கலர் குடைதான். மீராவின் குடையைப் போலவே... இல்லை... இல்லை... அதைவிட அழகாய் இருந்தது. எல்லார் கிட்டேயும் காட்டலாம்.

அப்பா குடையை எடுத்து விரிப்பதற்கு ஒரு பட்டனைத் தட்டினார். குடை அப்படியே சாமந்திப்பூப் போல் விரிந்தது.

'ஹையா... அழகா இருக்கு' என்று குடையைக் கையில் வாங்கினாள் மாலு.

''அம்மா... அம்மா... குடைம்மா, கலர் குடைம்மா, பூவெல்லாம் போட்டிருக்கு'' என்று அம்மாவிடம் நீட்டினாள்.

அம்மாவின் முகத்தில் மகிழ்ச்சியையே காணோமே! ஒருவேளை அவங்களுக்கும் வாங்கித் தரலைன்னு கோபமா இருக்கும் என்று நினைத்த மாலு குடையை வைத்துவிட்டு ஹோம் வொர்க் செய்ய ஆரம்பித்தாள்.

**இ**ரவு...

அம்மா, அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''உங்க கடிகாரத்தை விற்று, குடை வாங்கற அளவுக்கு, குடை அவ்வளவு அவசரமா...?''

''குழந்தைதானே...?''

''குழந்தைக்குத்தான்... குழந்தைக்குத்தான், இருந்தாலும்...''

அதற்கு மேல் மாலுவுக்குக் கேட்கப் பிடிக்கவில்லை.

அப்பா, கடிகாரத்தை விற்று விட்டுக் குடை வாங்கியதில் அவளுக்கு விருப்பம் இல்லை. அப்பாவின் மனம் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்!

மாலுவுக்கு இப்போது குடை பிடிக்கவே இல்லை. தனக்குக் குடை இல்லைன்னு மீரா கேலி செய்து சிரிப்பதைப் பற்றி அவளுக்குக் கவலையே இல்லை.

இனிமேல் அப்பாவிடம் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டாள் மாலு.

**ம**யில்வாகனத்திற்கு அஸ்வின் குமாருடன் ஏறக்குறைய நான்கு வருடப் பழக்கம். இன்றைக்கு இரவு நூறு ரூபாய்க் கட்டை எடுத்துப் போடுவான். நாளைக்குக் காலையில் தெளிந்தவுடன் முதல் வேலையாய் மயில்வாகனம் மீதே திருட்டுப் பட்டம் கட்டுவான். அஸ்வின் குமாருடன் நாள் தள்ளுவது என்பது உலகமகாக் கொடுமை.

அஸ்வின் குமார் நூறு ரூபாய்க் கட்டை எறிந்த கையோடு கட்டிலில் சரிந்தான். கட்டிலின் மேல் இருந்த பளபளப்பான ஸாட்டின் போர்வையை எடுத்து மயில்வாகனம் அஸ்வின் குமாருக்குப் போர்த்தி விட்டான். நூறு ரூபாய்க் கட்டை எடுத்து, லாக்கரில் வைத்தான். பூட்டினான். சாவியை

# ஸ்ரீரிவ் மிதக்கும் ஸ்ரீவா

அஸ்வின் குமாரின் தலையணைக்குக் கீழே வைத்தான்.

அஸ்வின் குமார் மிச்சம் வைத்திருந்த ஸ்காட்ச் பாட்டிலை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான். அஸ்வின் குமாரின் அறைக்கு வெளியே இருந்த காரிடாரில், பால்கனிக்குப் பக்கத்தில் ஒரு மெத்தை விரிக்கப்பட்டு, தலையணை போடப்பட்டுத் தயாராகக் காத்திருக்க, மயில்வாகனம் மெத்தையில் அமர்ந்து கொண்டான். தலையணைக்குக் கீழே இருந்து வாழைச் சருகில் பத்திரமாக வைத்திருந்த எலுமிச்சை ஊறுகாயை எடுத்துப் பிரித்தான். ஸ்காட்சை அப்படியே கொஞ்சம் கொஞ்சமாகச் சரித்துக் கொண்டான். ஊறுகாயை ஒருமுறை நாக்கில் தொட்டுக் கொண்டான்.

'காயாத கானகத்தே...' என்று தொடங்கி, டி.ஆர். ராஜகுமாரியை நினைத்து, டூயட் பாடத் தொடங்கினான்.

**ம**றுநாள் காலை. அஸ்வின் குமாரின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தான் மயில்வாகனம்.

சுத்தமாகக் குளித்திருந்தான். காப்பிப் பொடி நிறத்தில் ஒரு ஷர்ட். சந்தனக் கலரில் ஒரு பான்ட். அவன் அந்த அறையில் நுழை

சுபா



வதற்காகவே காத்திருந்த மாதிரி டெலிஃபோன் அடிக்கத் தொடங்கியது.

''ஹலோ...'' என்று நம்பர் சொன்னான். ''ஆமா... சபாபதி... ஆமா... அண்ணன் தூங்கிக்கிட்டிருக்காரு. எழுப்பிடறேன். ஒம்போதுக்குத்தானே ஷூட்டிங்? வந்துடுவாரு. டுயட்டா? காமினியா? சொல்றேன். காமினின்னா இன்னும் சீக்கிரம் வந்துடுவாரு.''

மயில்வாகனம் சிரிக்கச் சிரிக்கப் பேசினான். ரிசீவரை அதனிடத்தில் வைத்தான்.

மயில்வாகனம் இன்டர்காம் பட்டனைத் தட்டினான். காத்திருந்தான்.

அஸ்வின்குமார் அவன் அறையில் ஒலித்த இன்டர்காமின் ரிசீவரை எடுத்தான். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். ஸ்காட்ச் இன்னும் மூளையில் 'ரீய்ங்' என்று சிறகடித்தது.

''என்ன மயிலு... ராத்திரி மறுபடி எமாத்திட்டியே?'' என்றான்.

''மேலே வர்றேண்ணே'' என்றான் மயில்வாகனம் சிரித்து.

''வராதே. வர்றதா இருந்தா ஷில் பாவோட வா.''

மயில்வாகனம் ரிசீவரை வைத்துவிட்டு மாடியேறினான். அஸ்வின் குமாரின் அறையில் நுழைந்தான். அவனைப் பார்த்ததும் அஸ்வின்குமார் சிகரெட்டை ட்ரேயில் பாழாக்கினான்.

''இதோ பார்... இன்னிக்கு எங்கே ஷூட்டிங், யாரோட



ஷூட்டிங்எல்லாம்அப்புறம்வெச்சிக்கலாம். 'நீர்ல மெதக்கற நெலா' நிச்சயம் இன்னிக்கு இல்ல. ஷில்பா வீட்லதான் இருப்பா. அந்த அப்பன்காரன் வீட்லதான் இருப்பான். பேராசை பிடிச்சவன். நீ நேரா அவன் வீட்டுக்குப் போறே. ஜூபிடர் ரத்தினத்தைப் பாக்கறே... அண்ணங்கிட்டேர்ந்து வர்றேன்னு சொல்றே. 'என்ன இந்த மாதிரி டொக்குல வந்து கெடக்கறீங்க. அண்ணன் கோவிச்சிக்கறாரு... அவரோட சாந்தோம் பங்களா சும்மாதான் இருக்குதாம். ஷில்பாவும் நீங்களும் உடனே அங்கே குடி போறீங்கன்னு சொல்றே. பொண்ணு கொஞ்சம் நொண்டி ஆடிக்காட்டும். சினிமா ஹீரோயின்னா இந்த மாதிரி வீட்ல இருக்கக்கூடாது. எவனும் மதிக்க மாட்டான். ஒரு நல்ல வீட்ல தான் இருக்கணும்னு சொல்றே. அவங்களை எடம் மாத்திட்டு அப்புறம் நீ வந்து என்னைப் பாக்கறே... என்ன சரியா?''

''சரிண்ணே'' என்றான் மயில்வாகனம்.

**பி**ருத்விராஜ் எழுந்து பால்கனிக்கு வந்தான். முதல் மாடியில் இருந்த அறையிலேயே இரவு படுத்துக் கொள்ளச் சொல்லி ஸ்ரீநாத் உத்தரவு மாதிரி போட்டு விட்டுப் போயிருந்தான். பால்கனியில் இருந்து கீழே பார்த்தான். வீட்டு முகப்பு தெரிந்தது.

புனிதா குனிந்து கோலம் போட்டுக் கொண்டிருந்தான்.

''அட'' என்று ஆச்சரியப்பட்டான் பிருத்விராஜ்.

சென்னையில் விடிகாலையில் கோலம் போடும் நாகரிகப் பெண்ணா?

பிருத்விராஜ் சாலையைப் பார்த்தான். சாலைச் சுவரில் புதிதாக ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள்.

இன்று முதல்....

இளங்குமரனின் 'எங்கே என் இதயம்?'

பிருத்விராஜ் மறுபடி ஆச்சரியப்பட்டான். நேற்று இரவு வரை சென்ஸாரில் மாட்டி இருக்கிறது. இளங்குமரன் மெட்றாஸிலேயே இல்லை. பம்பாயில்தான் இருக்கிறான். இன்று காலையில் போஸ்டரா? எங்கே என் இதயம் இன்றைக்கே வெளியாகிறதா?

புனிதா திடீரென்று ஏதோ ஓர் உணர்வு உந்த, தலைநிமிர்ந்து மேலே பார்த்தான். பிருத்விராஜைப் பார்த்ததும் சிரித்தான்.

''குட்—மார்னிங் ரைட்டர் சார்'' என்றான்.

''குட்—மார்னிங் மேடம்'' என்றான் பிருத்விராஜ் பதிலுக்குச் சிரித்துக் கொண்டு.

''காலையில் உங்களை ஒரு கேள்வி கேக்கலாமா?''

''கேக்கலாமே'' என்றான் பிருத்விராஜ்.

''சூரியன் ஏன் காலையில கிழக்கு திசையில உதிக்குது... சொல்லுங்க பாக்கலாம்?''

பிருத்விராஜ் யோசித்தான். என்ன கேள்வி இது?

''தெரியலையே'' என்றான்.

''சாயங்காலம் அது மேற்குத் திசையில் மறையணுமில்ல?''

பிருத்விராஜ் சிரித்தான். கீழேயிருந்து புனிதா சிரித்தான்.

''என்னம்மா காலைல என் தங்கச்சி கிட்ட வம்பு பண்ணிட்டிருக்கே...?'' என்று பிருத்விராஜிற்குப் பின்னால் குரல் கேட்டது.

பிருத்விராஜ் திடுக்கிட்டுத் திரும்பினான். தோளில் போட்ட துண்டு, பனியன், லுங்கி, வாயில் நுரையுடன் கூடிய பிரஷ் சகிதம் ஸ்ரீநாத் நின்று கொண்டிருந்தான்.

''அது வந்து... வந்து...''

''வந்தாவது... போயாவது.... பிருத்வி உங்கிட்ட ஒரு ரிக்வெஸ்ட் பண்றேன். மறுக்க மாட்டியே?''

''என்ன அது?'' என்றான் பிருத்விராஜ் பயந்த குரலில்.

''இந்த வீட்ல மூணாவதா ஒரு ஆள் இருந்தா எவ்வளவு கலகலப்பா இருக்கும்னு இப்பத்தான் தெரியுது. நீ அந்த திருவல்லிக் கேணி ரூமைக் காலி பண்ணிட்டு ஒழுங்கா இங்கயே வந்து இருந்துடேன்.''

''என்னது?''

''என்னம்மா... உன்னை என்ன முட்டையா போடச் சொன்னேன். இந்த மெரளு மெரள்றே... இங்க வந்து இருன்னுதானே சொல்றேன். ரெண்டு பேரும் ஒரே யூனிட்ல ஒர்க் பண்ணப் போறோம். டிஸ்கஸ் பண்ண, கொள்ளச் சௌகரியமா இருக்கும்... என்ன சொல்றே?''

பிருத்விராஜ் தயங்கினான். இங்கே தங்கினால் ரூம் வாடகை பிரச்னை கழன்று கொள்ளும். கொசுத் தொல்லை இருக்காது. வீட்டுச் சாப்பாடு கிடைக்கும்.

''புனிதா... நம்ப ரைட்டர் நம்ப கூடயே தங்கப் போறாராம்... நீ என்ன சொல்றே?'' என்று பால்கனி கிராதியில் வயிற்றைப் பதித்துக் கீழே எக்கிப் பார்த்துக் கேட்டான் ஸ்ரீநாத்.

''நான் எங்கே சொன்னேன்...?'' என்று பலஹீனமான குரலில் பிருத்விராஜ் மறுத்தான்.

''நான் நேத்து நைட்டே கெஸ்ட் ரூமை ஒழிச்சி வெச்சிட்டேன். புதுசா ஒரு பேஸ்ட், புதுசா ஒரு பிரஷ்... புதுசா ஒரு டவல்.. புதுசா ஒரு சோப் எல்லாம் வாங்கி வெச்சாச்சி... நம்ப வீட்ல புதுசா ஒரு ஆள் சேரப் போறார்னு...'' என்றான் புனிதா.

''தட் ஈஸ் புனிதா'' என்றான் ஸ்ரீநாத்.

**''வா**ய்யா'' என்றான் இளங்குமரன்,

நிருபர்: நீங்க ஹீரோயினா நடிக்கிறதை நிறுத்திக்கப் போறதாச் சொல்றீங்களே, ஏன்?

நடிகை: தள்ளாமை வந்துட்டதால ஓடியாடி டூயட் பாடி நடிக்க முடியல...

— மணியன் தர்மலிங்கம்.

பிருத்விராஜைப் பார்த்து. உற்சாகமாக இருந்த மாதிரித்தான் தெரிந்தான். ஆனால் கண்கள்தான் அந்தி நேரச் சூரியன் நிறத்தைப் போலச் சிவந்து இருந்தன.

''உக்காரு... ஸ்ரீநாத் வீட்டுக்கே போய்ட்டியாமே. ஸ்ரீநாத்தாம்பா சொன்னான். ஒனக்கு மச்சம்யா. ஓஹோன்னு வருவே பாரு...'' இளங்குமரன் சொல்லி விட்டு சோஃபாவுக்கு அடியில் இருந்து ஒரு கிளாஸை எடுத்தான். கிளாஸில் திரவம் இருந்தது. அந்தத் திரவத்தைக் குடித்தான் இளங்குமரன்.

'இத்தனை காலையிலா?' என்று நினைத்தான் பிருத்விராஜ்.

''ஸ்ரீநாத்துக்கு எம்மேல கோவம்யா. நான் ஃபோன் பண்ணி என்ன விஷயம் ஏது விஷயம்னு சொல்லலேன்னு. நான் மெட்றாஸ்ல இருந்துகிட்டே பம்பாய்ல இருக்கறதாத் தகவல் தரச் சொன்னேன்னு... என் நிலைமையில அவன் இருந்து பார்த்தா தெரிஞ்சிருக்கும். சென்ஸார்ல 'எங்கே என் இதயத்தை'க் கொதறி எடுத்துட்டானுங்க. பாட்ச் ஒர்க் பண்றதுக்கெல்லாம் நேரமில்ல. டிஸ்ட்ரிப்யூட்டருங்க அத்தனை பேரும் துண்டை விரிச்சிகிட்டு என் வீட்டு வராந்தாவுலேயே உக்காந்துட்டானுங்க — பொட்டியக் குடுத்தாத்தான் ஆச்சின்னு... வட்டியே சாப்புடுதாம் அவுங்களை... திமர்னுதான் ரிலீஸ் பண்றதுன்னு முடிவாச்சு.. கெடைச்ச தியேட்டர்ல ரிலீஸ் பண்ணியாச்சி. பப்ளிசிடி போதாது... தியேட்டரும் ஒரு டொக்கு தியேட்டர். மூட்டைப்பூச்சி கடி. விசிலடிக்கிறானுங்க போர்னு... ஸ்க்ரீன் மேல் செருப்பை எறியறானுங்க... இவனுங்களைக் கூப்ட்டு உக்காரவச்சி ஒரு படம் பண்ணிக்குட்றான்னு சொல்லணும்... ஏண்டா... எம்படத்தையாடா கொறை சொல்றீங்க...?'' இளங்குமரன் இன்னொரு முழு கிளாஸை 'கடக்கடக்' என்று சத்தம் வரக் குடித்தான்.

பிருத்விராஜ் கவலைப்பட்டான். இந்த மாதிரி இளங்குமரனை அவன் இதுவரை சந்தித்ததில்லை.

''உன்னை எதுக்காக வரச் சொன்னேன்னு தெரியுமாய்யா?''

''தெரியாதுங்க'' என்றான் பிருத்விராஜ்.

''அதெப்படி தெரியாதுன்னு சொல்லலாம். நீயெல்லாம் ஒரு அஸிஸ்டென்ட் டைரக்டர். எதுக்கெடுத்தாலும் தெரியாது. தெரியாதுன்னுட்டு. பெரியசாமி இங்க வாய்யா. கிளாஸ்ல இல்ல பார். ஊத்து. 'எங்கே என் இதயம்' கவுந்துடுச்சின்னு சொல்றானுங்களே. அந்தத் துக்கத்தை மறக்க வேணாம்... ஊத்து பெரியசாமி. இவன் யாருன்னு நெனைக்கறே. பிருத்விராஜ். நம்ப அஸிஸ்டென்ட். மச்சம் இருக்கற அஸிஸ்டென்ட். இவன் சொல்லுவான் பாரு இப்ப ஒரு கதையை. அதை வெச்சித்தான் நான் மறுபடி தலைநிமிரப் போறேன். சொல்லுய்யா பிருத்விராஜு.

''இப்பவா?''

''பின்ன? இதுக்கெல்லாம் ராவுகாலம் எமகண்டமா பாக்க முடியும், சொல்லு.''

பிருத்விராஜ் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

**ந**டராஜன் காரை நிறுத்தினார். மதுமதி கதவைத் திறந்து முதலில் இறங்கினாள். காத்துக் கொண்டிருந்த ஜகதாவும், விஜியும் ''வா மது... மறுபடியும் பெங்களூருக்கு வரணும்னு தோணிச்சே ஒனக்கு?'' என்று கோரஸான குரலில் சொன்னார்கள்.

''இங்க வந்தா எனக்கு என் சிவாவைப் பாக்கறா மாதிரி இருக்கு. அதனாலத்தான் வந்தேன். திருவான்மியூர்த் தோட்டத்துல நின்னு ரோஜாவையெல்லாம் பாத்துகிட்டிருந்தப்ப எனக்கு சிவாவைப் பாக்கணும் போல இருந்தது. துவாரகாவிலதானே சிவா வேற வேற போஸ்ல வாழ்ந்துகிட்டிருக்காரு. அத்தை நீங்க மெட்றாஸ் வரணும் அத்தை... நம்ப தோட்டத்தைப் பாக்கணும் நீங்க.''

''வர்றேன்... வேலைல சேர்ந்துட்டேன்னு எழுதின லெட்டரும் கெடைச்சது. வேலை பிடிச்சிருக்கா?''

''ம்ம்... பிடிச்சிருக்கு.''

''நேத்திக்குக்கூட நீ காலேஜ் பசங்களோட போட்ட அந்த வெரைட்டி ப்ரோக்ராமை விடியோலபோட்டுப்பாத்துகிட்டிருந்தோம்... அது சரி... நீ எதுக்கு வேலைக்குப் போகணும்.. நாங்க எல்லாம் இல்லியா...?''

ஜகதா ஒவ்வொரு வார்த்தைக்கும் அன்பு சாக்லேட் தடவித் தடவிக் கேட்டாள்.

அவர்களோடு சிரித்துப் பேசி, சந்தோஷமாக இருக்கும் போது தனக்குப் பெரும் விடுதலையுணர்வு கிடைப்பதை மதுமதி மிகவும் நேசித்தாள்.

**மா**லை. மாடி ஹாலில் நான்கு பேருமாய் உட்கார்ந்து கேரம் ஆடிக் கொண்டிருந்த போது ஃபோன் வந்தது. நடராஜன் சென்று எடுத்தார்.

''மதுமதியா? இருக்காளே. இதோ கூப்பிடறேன். மது ஃபோன்.''

''எனக்கா?'' மதுமதி எழுந்து கொண்டாள். 'யாராக இருக்கும்?' நடராஜனிடமிருந்து ரிசீவரை வாங்கினாள்.

''ஹலோ மதுமதி ஹியர்.''

''அப்பா நம்ப எல்லாரையும் விட்டுட்டுப் போய்ட்டார் மது'' என்று சந்துரு கதறினான், அந்தப் பக்கம்.

(தொடரும்)




குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
Cuticura
TALCUM POWDER
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR

# விக்ரமன் என்னும் விசுவரூபம்!



**அமுதசுரபி ஆசிரியர் விக்கிரமன் மணி விழா அண்மையில் சிறப்பாக நடந்தது. மணி விழாமலர் (பிரசுரம்: சாவி காரியாலயம், சென்னை — 40) பக்கங்களிலிருந்து சில ரசத் துளிகள்...**

● நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் டாக்டர் ரா. பி. சேது பிள்ளையுடன் அவர் அறையில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது இராசன் அச்சக உரிமையாளர் கிருஷ்ணசாமியும் இன்னொருவரும் வந்தனர். இராசன் அச்சகம் வாயிலாகத் தமிழில் திங்கள் இதழ் தொடங்க இருப்பதாகவும் அதற்குப் பெயர் வைக்க வேண்டும் என்றும் சேது பிள்ளையைக் கேட்டுக் கொண்டனர். சிறிது ஆழ்ந்து ஆய்ந்து நாங்கள் இருவரும் ''அமுதசுரபி'' என்று பெயர் வைப்பது பொருத்தமாகும் என முடிவு செய்து அவர்களிடம் சொன்னோம். அன்றுதொட்டு இன்று வரை அமுதசுரபியின் ஆசிரியராக உள்ளார் வேம்பு என்ற இயற்பெயர் கொண்ட விக்கிரமன்.

**— சு. மு. பரமசிவானந்தம்.**

● அவர் அஞ்சா நெஞ்சம் நேரில் கண்டவருக்குத்தான் தெரியும். ஒரு சமயம் நூற்றுக் கணக்கான மாணவர்கள் அச்சகத்தின் மீது படையெடுத்து விட்டார்கள். ''ஒழிக'' என்று கோஷமிட்டார்கள். விக்கிரமன் ஒரு தவறும் செய்யவில்லை. நாங்கள் தடுத்ததையும் கேளாமல் அவர்கள் மத்தியில் குதித்து, ''வருபவர்கள் வரட்டும்; ஆனால் நான் நிரபராதி'' என்று நிமிர்ந்து நின்றார். வந்தவர்கள் அசந்து விட்டனர். பொங்கிய பால், நீர் தெளிக்க அடங்குவது போல் திரும்பினர்.

**— கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்.**

● சைதாப்பேட்டையில் அடுத்தடுத்து எங்கள் வீடுகள். எனக்கு விளையாட்டுக்களில் ஈடுபாடு கிடையாது. வேம்புவுக்கும் அப்படித்தான். ''நந்தி'' என்று கையெழுத்துப் பத்திரிகை வேம்பு தொடங்கினால், 'கருடன்'' என்று ஓர் இதழ் நான் தொடங்குவேன். வேம்பு நடத்தும் இதழ் நன்றாகவே இருக்கும். ஓரளவு ஓவியம் போடவும் அவனுக்குத் தெரியும். இரவோடு இரவாகக் ''கருடன் திவால்'' என்று எழுதப்பட்ட தாள் என் வீட்டுச் சுவரில் ஒட்டப்பட்டுக் காலையில் காட்சி தரும்! திரும்பி, ''நந்தி திவால்'' என்று நான் வேம்பு வீட்டில் சுவரொட்டி ஒட்டுவேன்! அவரது ஆதர்ச எழுத்தாளர் கல்கிதான். ''கல்கி அன்பர்கள் சங்கம்'' என்றதொரு அமைப்பை நாங்கள் தொடங்கி, சில காலம் நடத்தினோம். அவை திரும்பி வராத இனிய, இளமை நாட்கள்.

**— இரா. சுராஜ்.**

● எனக்கு நன்றாகத் தெரியும். ஆரம்ப காலத்தில் அவர் அமுதசுரபிக்காகப் பட்ட கஷ்டங்களும்; நஷ்டங்களும். பத்திரிகைக்கு அவரே ஆசிரியர்; அவரே கணக்கர்; அவரே சகலமும். நிதி வசதி இல்லாமல் பல இன்னல்களுக்கு இடையில் சிறப்பாக அமுதசுரபியை வெளியிட்டு வந்தார். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒரு தீபாவளி அன்று காலை நாங்கள் இருவரும் தீபாவளி மலர் பிரதிகளைச் சுமந்து கொண்டு போய்ப் 'போஸ்ட்' செய்து விட்டுத் திரும்பினோம்.

**— நா. ராமச்சந்திரன்**

● சின்ன அண்ணாமலையும் நானும் சேர்ந்து வெள்ளிமணி என்ற வார இதழ் ஆரம்பித்தோம். பத்திரிகைத் துறையில் இருந்த ஆர்வம் காரணமாக ஸ்பென்ஸர் கம்பெனியிலிருந்து விலகி வெள்ளி மணியில் சேர விரும்பினார் விக்கிரமன். சின்ன அண்ணாமலை அவரிடம் சர்க்குலேஷன் பொறுப்பை ஒப்படைத்தார். அந்த வேலையை அவர் திறமையாகக் கவனித்த போதிலும் எழுத்தார்வம் அவரை விடவில்லை. ஒருநாள் அரசியல் குறிப்புக்கள் சிலவற்றை எழுதி என்னிடம் தந்தார். 'அது நன்றாகவே இருந்து. அதைப் பிரசுரித்தால், வேம்புவுக்கு மேலும் எழுதும் ஆசை வந்து விடும்; சர்க்குலேஷனை முழு மனத்தோடு கவனிக்க முடியாமல் போய் விடும்' என்று நான் எண்ணியதால் எதையும் வெளியிடவில்லை! பரிசிலிக்காமலேயே திருப்பித் தந்து விட்டேன்! ஆயினும் திறமைக்கு யார் அணை போட முடியும்? என் நடவடிக்கை வேம்பு என்ற இளைஞன், ''விக்கிரமன்'' என்ற மாபெரும் எழுத்தாளராக விசுவரூபமெடுப்பதைத் தடுக்க முடியவில்லை.

**— சாவி.**

"**தா**லிச் சரடைத் திராவகத்தில் போட்டு உருக்கிக் கொண்டாங்க; அப்பத்தான் எடுத்துக்க முடியும்!''

கறாராகச் சொன்னார் சேட்ஜி.

நான் யோசனையுடன் நண்பனைப் பார்த்தேன். அவன் இருப்புக் கொள்ளாமல் நெளிவதை உணர்ந்தேன். அவனைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்திவிட்டதற்காகமிகவும்வேதனைப் பட்டேன்.

''சேட்ஜி! எனக்கு உருக்கி விக்கிறதுல நம்பிக்கை இல்லை; இஷ்டமும் இல்லை. அப்படியே ஒரு விலை போட்டு எடுத்துக்கிறதா இருந்தாச் சொல்லுங்க.....''

நான் முடிக்க வில்லை. என் நண்பன் என்னை எரித்து விடுவதுபோல் பார்த்தான்.

நான் சில வினாடிகள் மௌனம் சாதித்தேன்.

''சார்! இந்தத் தாலிச் சரடு இருபத்தி மூணு கிராம் இருக்குது. உருக்கினா ஆறு கிராம் குறையும். நிகரமா பதினேழு கிராம் தேறும். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தா பதினெட்டு கிராமாகக்கிடைக்கவும் வழியுண்டு. அதிர்ஷ்டக்கட்டையா இருந்தா பதினாறு கிராமாகவும் குறையும். உருக்கிக் கொண்டு வர்ற தங்கம், கிராம் இருநூற்று எழுபத்தைந்து ரூபாய்க்கு எடுத்துக்கிறோம். சீக்கிரம் முடிவைச் சொல்லுங்க!''

— சொல்லிவிட்டு சேட்ஜி வேறொரு வாடிக்கைகாரர் பக்கம்வியாபார தோரணையில் திரும்பினார்.



# தாலிச்சரடு

## ரகுபதி

நான் ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்தேன். என் நண்பன் 'நறுக்' என்று கிள்ளினான். வலிய முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு கேட்டேன்:

''சேட்ஜி! முடிவா என்ன சொல்றீங்க?''

''நான்தான் சொன்னேனே சார்!''

''உருக்காம அப்படியே ஒரு விலையைச் சொல்லி எடுத்துக்குங்க!''

அவமானத்தால் குன்றிப் போனவன் போல் என் நண்பன் தலையைக் குனிந்து கொண்டான். நான் பேரம் பேசுவது அவனுக்குத் துளியும் பிடிக்கவில்லை என்பதை அவன் முகம் எனக்கு ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டியது.

''இவ்வளவு கேட்கறதினால சொல்றேன் — நாலாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்ன்னா எடுத்துக்கிறேன், சார். அதுக்கு மேலே பேசாதீங்க!''

கணத்தில் கணக்குப் போட்டது — என்னுடைய மூளை. பதினைந்தரை கிராமுக்குக் கூட அவர் விலை போடவில்லை!

''தாலிச் சரடை கொடுங்க. எனக்குத் தெரிஞ்ச கடை இருக்கு. விலை விசாரிக்கிறேன்; நீங்க கேட்ட விலைக்கும் குறைச்சலாவோ — நீங்க கேட்ட விலையே கேட்டாலோ சரடை உங்களண்டை கொண்டு வந்து கொடுக்கிறேன். இதுக்கும் மேல விலை போச்சுன்னா அங்கேயே முடிச்சுறேன்!''

நான் மண்டையில் அடித்தாற் போல் சொன்னேன்.

சேட்ஜி என் நண்பனைப் பார்த்தார்.

''கொடுங்க சேட். நான் இருக்கிறேன்!'' — பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான்.

தாலிச் சரடு என் கைகளில் ஒப்படைக்கப் பட்டது. கைநீட்டிப் பெற்றுக் கொண்டேன்.

என் நெஞ்சில் ஏறி இருந்த பாரம் குறைந் தாற் போல் உணர்ந்தேன்.

நகை ஏல நோட்டீஸ் வந்தது.

என் நண்பன் காஷியராகப் பணிபுரியும் அந்த வங்கியில்தான் தாலிச் சரடை அடகு வைத்திருந்தேன். அசல் இரண்டாயிரத்து ஐந்நூறு. வட்டியுடன் சேர்ந்து மூவாயிரம் ஆகும் என்று தோராயமாகக் கணக்குப் போட்டுப் பார்த்தேன்.

இப்போது பணத்திற்கு எங்கே போவது?

என் மனைவியுடன் ஆலோசனை கலந்தேன்.

'பணம் யாரிடமாவது கைமாற்று வாங்கி மீட்டு மீண்டும் பாங்கில் வைத்துத் திருப்பி விடுவோம்' என்றேன்.

'வேண்டாங்க. வட்டி வீணா கட்ட வேண்டியுள்ளது. வீடு கட்டியதுக்குப் பற்றாக் குறைக்குத்தானே பாங்கில் தாலிச் சரடு வைத்துப்பணம் வாங்கினோம். அந்தக் கடனை நிரந்தரமாக அடைக்கணும்னா தாலிச்சரடை விக்கிறது தாங்க ஒரே வழி' என்றாள், முத்தாய்ப்பாக என் தர்மபத்தினி.

எனக்கும் அது சரியாகத் தோன்றியது.

துரிதமாகச் செயல்பட்டேன்.

காஷியர் நண்பனைப் பார்த்தேன்.

''என்ன செய்வயோ ஏது செய்வாயோ — தாலிச் சரடை மீட்டுக் கொடு. நாளைக்கே விற்று, பணத்தைத் திருப்பி விடுகிறேன்!'' என்றேன்.

''சரி!'' என்றான்.

இரண்டு மணி நேரத்தில் எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்தான்.

பகல் ஒருமணிக்கெல்லாம் தாலிச் சரடை வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டேன்.

என் நண்பன் எழுந்து வந்தான். என்னை வெளியில் அழைத்து வந்தான்.

''தாலிச்சரடைக் கொடு பார்க்கலாம்?'' என்றான். கொடுத்தேன்.

''அட! ஜோரா இருக்கே! மதியம் லீவு போட்டு விடட்டுமா?''

''எதற்கு?''

''இதை விற்பதற்கு!''

எனக்கு லேசான அதிர்ச்சி. வாய்திறந்து பேசவில்லை. முதல் வைத்து நகையை மீட்டுக் கொடுத்தவன் — நம்பிக்கை இல்லாமல் கூடவே வந்து தாலிச் சரடை விற்றுத் தனக்குச் சேர வேண்டியதைப் பெற்றுக் கொள்ளத் துடிக்கிறானோ?

அப்படியொரு எண்ணம் இருக்கும் பட்சத்தில் அது நியாயமானதே என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை; வேண்டாம். நாளைக்கு விற்போம்!''

''சரி. உன் இஷ்டம்! எனக்குத் தெரிஞ்ச சேட் கடை ஒண்ணு இருக்குது. 'மூல்சந்த் ஜுவல்லரி'. எனக்கு அந்தக் கடை சொந்தக் காரரோட மகன் நண்பன். அவனுக்குப் போன் போட்டுத்தான் உன் நகையை மீட்கப் பணத்துக்கு ஏற்பாடு செய்ஞ்சேன். நாளைக்கே போவோம்!''

என் நண்பன் தாலிச்சரடை பாண்ட் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

அடப்பாவி! தாலிச் சரடுக்குச் சொந்தக்காரன் நான். என் கண் எதிரிலேயே உன் பாக்கெட்டில் திணிக்கிறாயே — இது நியாயமா? அடுக்குமா?

அடுக்கடுக்கான கேள்விகள் எழுந்தன உள்ளத்தில். எழுந்த வேகத்தில் அடங்கி அமுங்கின!

நான் வெறுங் கையோடு வீட்டுக்குத் திரும்பினேன். நடந்த விவரங்களை என் மனைவியிடம் சொன்னேன். என்னைப் பிடி பிடி என்று பிடித்து விட்டாள் என் இல்லத்தரசி.

''மூணாயிரம் ரூபா கொடுத்ததுக்காக மூணு சவரன் நகையை யாராவது கொடுத்துட்டு வருவாங்களா? கொஞ்சமேனும் மனுஷனுக்குச் சுயபுத்தி வேண்டாம்! வெள்ளிக்கிழமையா இருந்தா என்ன — இன்னைக்கே வித்துத் தொலைச்சிட்டு வந்திருக்கலாமே!''

பிலாக்கணம் பிடிக்காதது ஒன்றுதான் குறை. நான் 'கப்சிப்' என்று, மூச்சு விடவும் மறந்தவனாக, அமைதியாக, பொறுமையாக இருந்தேன்.

என் உயிர் நண்பனிடம் தாலிச்சரடைக் கொடுத்து விட்டு வந்ததற்கே இவ்வளவு ஏச்சும் பேச்சும் என்றால், முகம் அறியாத அன்னியன் ஒருவனிடம் கொடுத்து விட்டு வந்திருந்தால்.....?

'மூல் சந்த் ஜுவல்லரி'யை விட்டு வெளியில் வந்தேன்.

''கொஞ்சம் இரு!''

என் நண்பன் கட்டளையிட்டான்.

நான் நின்றேன்.

என் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு சிறிது தூரம் என்னுடன் நடந்து வந்தான் நண்பன்.

''சீக்கிரம் வந்து விடு. அவன் — என் நண்பன் ஒரு சந்தேகப் பிராணி. உனக்குத் தெரிஞ்ச கடைன்னு சொன்னியே எந்தக் கடை?''

''ஏன்? நீயும் வர்றியா?''

"இல்லை. நானும் வந்தா என் நண்பரோட சந்தேகம் வலுத்துடும்! எந்தக் கடைக்குப் போறே?"

"ர......"

எனக்குள் ஏதோ பொறிதட்டினாற்போல் உணர்ந்தேன் — 'பளிச்' என்று ஒரு மின்னல் வெட்டு.

நிதானித்தேன். தீர்மானித்தேன்.

"ராகவன் ஜுவல்லரி!"

"சரி. சீக்கிரம் வந்துடு!"

என்னை முதுகில் தட்டிக் கொடுத்து அனுப்பிவிட்டு அவன் 'மூல்சந்த் ஜுவல்லரி'க்குள் புகுந்து கொண்டான்.

பக்கத்துத் தெருவில் இருந்த 'ராகவன் ஜுவல்லரி'க்குள் நுழைந்தேன்.

"தாலிச்சரடா? ஓ! அந்த விலையா? அதுக்கும் குறைச்சுக் கேட்டு அசத்திடறேன். வைச்சிடவா? கமிஷன்? அது எனக்குத் தெரியாதா?"

— டெலிபோன் உரையாடல் எனக்குத் தெளிவாகக் கேட்டது.

ரிஸீவரைக் கவிழ்த்துவிட்டு நிமிர்ந்தவர் என்னைப் பார்த்தார். 'இவன்தான் 'அந்த' இளிச்சவாயனா? நாம் போனில் பேசியதைக் கேட்டிருப்பானோ?' — இப்படி சில எண்ண ஓட்டங்கள் அவர் உள்ளத்தே ஓடியதை ஊடுருவிப் பார்த்தேன்.

"வாங்க! என்ன வேணும்?"

"மூணு சவரனில் தாலிச் சரடு ஒண்ணு வேண்டும்!"

'டக்' என்று பதிலிறுத்தேன்.

அவர் முகம் 'குப்' என்று வியர்த்துக் கொட்டியிருக்க வேண்டும். ஃபேனின் குளுமையான ஓட்டத்தில் அவர் முகத்தைக் கர்ச்சிப்பால் அழுந்தத் துடைத்துக் கொண்டார். சுதாரித்துக் கொண்டு பேசினார்.

"பஜார்ல வேலை ஏதாவது இருந்தா பார்த்துட்டு அரை மணி நேரம் பொறுத்து வாங்க. மெருகு போட்டுகிட்டிருக்காங்க. ஆள் அனுப்பி வாங்கிவரேன்!"

நான் தலையாட்டி விட்டுத் திரும்பினேன்.

'ரங்கா ஜுவல்லரி'யை நோக்கி நடையை நீட்டிப் போட்டேன். அதுதான் எனக்குத் தெரிந்த கடை. நான் எந்த நகையை வாங்குவதாக இருந்தாலும் அங்குதான் போவேன். விற்பது என்ற நிலை ஏற்பட்டாலும் அதுவே நம்பிக்கைக்குரிய ஜுவல்லரி என்பது என்னுடைய ஆணித்தரமான எண்ணம்.

'ரங்கா ஜுவல்லரிக்குள் நுழைந்தேன்.

"வாங்க சார். வந்து ரொம்ப நாளாச்சே!"

குசலம் விசாரித்தார் சின்ன முதலாளி. ஒப்புக்கு நானும் ஏதோ பதிலைச் சொல்லி வைத்தேன்.

வந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். அவரும் 'உருக்கிக் கொண்டு வந்து விடுங்கள்' என்ற பாணியில்தான் பேசினார்.

மனைவியின் தாலிச் சரடை உருக்க மனமில்லை என்பதால் உருக்காமல் எடுத்துக் கொள்ளும்படி அவரிடம் கோரினேன்.

அவரும் ஒப்புக் கொண்டார்.

எடை போட்டார். சரியாக இருபத்து மூன்றரை கிராம் இருந்தது.

நான்கரை கிராம் கழிவு போட்டுக் கொண்டு பத்தொன்பது கிராம் என்று எடுத்துக் கொள்வதாகச் சொன்னார். கிராம் ஒன்றுக்கு இருநூற்று எண்பது ரூபாய் என்று கணக்கு செய்து ஐந்தாயிரத்து முந்நூற்று இருபது ரூபாய் எண்ணி, கனையாக என்னிடம் நீட்டினார்.

பூரிப்புடன் பணத்தைப்பெற்றுக்கொண்டு விடை பெற்று வெளியில் வந்தேன்.

வழிமேல் விழி வைத்து என் வரவையே மிக ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தான், என் ஆருயிர் நண்பன்!

நண்பா!

இதோ வந்து விட்டேன்.

தாலிச் சரடு திரும்ப வரும்; 'மூல்சந்த் ஜுவலரி'க்காரன் கொடுக்கும் பிச்சைக்கார கமிஷன் பணத்தில் முழு பாட்டில் உடைத்து உள்ளுக்குத்தள்ளி முழு சுகம் காணலாம் என்று காத்திருக்கும் என் இனிய நண்பனே — இதோ வந்து விட்டேன்!

"என்ன ஆச்சு?"

பரபரப்பு, பதற்றம், ஆவல்.

"உனக்கு எவ்வளவு பணம் சேரவேண்டும்?"

அழுத்தமாகக் கேட்டேன்.

அவன் முகம் வெளுத்தது. சோர்ந்தது. துவண்டான்.

"சொல். எவ்வளவு தர வேண்டும்?"

"இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது!"

"இந்தா மூவாயிரம் — ஒருநாள் வட்டிக்கு ஐம்பது ரூபாய்!"

பணத்தை நீட்டினேன். அவன் கை விரல்கள் நடுங்கின.

நான் நிற்கவில்லை. வேகமாக நடந்தேன்.

யார் முகத்தில் வேண்டுமானாலும் விழிக்கலாம்; நம்பிக்கைத் துரோகிகள் முகத்தில் விழிப்பது மகா பாவம்!




வம்பளந்தான் பாறைத் தெரு!

நெல்லை மாவட்டம் விக்கிரம சிங்கபுரத்திற்கு ஓர் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர்கள் குடியிருக்கும் தெருவின் பெயர்: "வம்பளந்தான் பாறைத் தெரு!"

— ரமா ராமநாதன்.



திருவருள் பெற்றிட தீபங்கள் ஏற்றிடுவீர்
தீபவொளியில் பாங்காக மிளிர்ந்திட...
குமரன் சில்க்ஸ்
பனகல் பார்க் எதிரில், 12, நாகேஸ்வரன் சாலை,
தி. நகர், சென்னை - 600 017.
எங்களுக்கு கிளைகள் எங்கேயும் கிடையாது.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 250/- ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- மூல தனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ. 250/- அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.


****** இந்த நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு ******

அறைக்குள் ஒன்றாக நுழைந்த ராஜ்குமாரையும், ராதிகாவையும் பார்த்து ஆச்சரியப்பட்டான் கார்த்திகேயன்.

"என்ன ராம்குமார்... நீ வர பர்மிஷன் கேட்டுட்டு அவங்களையும் அழைச்சிட்டு வந்திருக்கே... என்ன விஷயம்...?"

ராம்குமார் சற்றுத் தயங்கி பின் சொன்னான்.

"சார்... முதல்ல உங்க ஆசிர்வாதம் வேணும் சார்...."



# தொடுவான மனிதர்கள்

## 5

"ஆசிர்வாதமா...? என்னை என்ன கிழவன்னா நினைச்சே ஆசிர்வாதமெல்லாம் பண்ண...? உன்னை விட ஒரு வருஷம் தாம்ப்பா பெரியவன் நான்...

"இருக்கலாம் சார்... ஆனா உங்க குணம், படிப்பு, அந்தஸ்து... எல்லாத்துக்கும் மேலா அந்த மனசு... என்னை விட எத்தனையோ மடங்கு உயர்ந்தவர் சார் நீங்க... நியாயமாப் பார்த்தா நீங்கதான் சார் ஆசிர்வாதம் பண்ணத் தகுதியானவர்..."

ஓ... என்ன இப்படி ஒரேயடியா ஐஸ் வைக்கற... இப்பத்தான் குளிர் தேசத்துலேருந்து வந்திருக்கானே... இங்கே ஒரே வெய்யிலா இருக்கே... அதனால கொஞ்சம் குளிர்ச்சியா இருக்கட்டுமேன்னா இப்படி ஐஸா கொட்டறே....? நான் ஏர்கண்டிஷன் ரூம்லதான் இருக்கேன்..."

"இல்லே சார்... இது ஐஸ் இல்லே... மனஸ்பூர்த்தியா நெஞ்சுலேர்ந்து வர்ற வார்த்தை. உங்களை முன் வச்சு, உங்க ஆசிர்வாதத்தோட, நீங்க நடத்தி வைக்கணும் எங்க கல்யாணத்தைன்னுதான் நானும், ராதிகாவும் காத்துண்டிருந்தோம்...."

சடாரென்று பிடரியில் ஓங்கி அறைந்த மாதிரி இருந்தது கார்த்திகேயனுக்கு. ஒரு வினாடி தப்பாகக் காதில் ஏதோ விழுந்து விட்டதோ, அல்லது தான் சரியாகக் கேட்டுக் கொள்ளவில்லையோ என்ற சந்தேகத்தில் மெதுவாகக் கேட்டான்.

"கல்யாணமா...? நீ என்ன சொல்றே ராம்குமார்...? யாருக்குக் கல்யாணம்...?"

"தெரியாத மாதிரி கேட்கிறீங்களே சார்...? நேற்று உங்ககிட்டே ராகவன் சார் சொல்லலை...? அதைத்தானே நீங்க ராதிகா கிட்ட பேசணும்னு சொன்னீங்க...? அதுக்கு முன்னால் நாங்களே சொல்லிடலாம்னு வந்துட்டோம் சார். இதுவரை சொல்லாததற்கு மன்னிக்கணும் சார். சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்காமல் நீங்க ஃபாரின் போயிட்டீங்க. இப்ப சொல்றோம் சார். எங்க ரெண்டு பேரையும் ஆசிர்வதிச்சு நீங்கதான் சார் இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்...

பளிச்சென்று சொல்லி விட்டான் ராம்குமார். ராதிகாவிற்கும் அவனுக்கும் கல்யாணம். ராம்குமார் முந்திக் கொண்டு விட்டான். ஆமை, முயல் கதை மாதிரி, தான் பின் தங்கித் தோற்றுப் போக நேர்ந்து விட்டது. இதுவரை வாழ்க்கையில் தோல்வி என்பதே தெரியாமல் வளர்ந்தவனுக்கு இது தான் முதல் அடி. சற்றுப் பலமான அடி தான். அவனுடைய வாழ்க்கையில் பெண் என்பவள் புதிதானவள் அல்ல. அவன் பழகாதவன் இல்லை. ஆக்ஸ்ஃபர்டில் படித்த அந்த இருபது வயதிலேயே அவனுக்குப் பெண் அறிமுகம் உண்டு. ஆனால் எந்தத் தனியொரு பெண்ணிடமும் ஈடுபாடு மட்டும் ஏற்பட்டதில்லை. மிக மிக சுதந்திரமாக வளர்ந்த காரணத்தினாலும், வெளிநாட்டுக் கலாசாரம் படிந்து போனதாலும் இந்தியத் திருமண முறைகளில் நம்பிக்கையற்றுப் போயிருந்தான். இங்குள்ள பெண்களின் மனோபாவத்திற்கும், தனக்கும் ஒத்து வராது என்கிற அனுமானத்திலிருந்தான். அதனாலேயே திருமணத்தைத் தவிர்த்துக் கொண்டிருந்தான்.

அப்படிப்பட்டவனுக்குத்தான் முதல்

—இந்துமதி—



முதலாகக் காதல் என்பது மனசுக்குள் எட்டிப் பார்த்தது. ராதிகாவின் அழகைத் தவிர கண்களில், முகத்தில் தெரிந்த கபடமின்மை அவனைக் கவர்ந்தது. அதன் பின்னரே அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று யோசிக்க ஆரம்பித்தான். அவளை அவனுக்குப் பிடித்திருந்தது. தனக்கு அவள் மீது ஏற்பட்டிருப்பது வெறும் கவர்ச்சியில்லை. ஒருநாள் கிடைக்கக் கூடிய பட்சத்தில் அடங்கிவிடக் கூடியதில்லை என்பதை உணர்ந்த போது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. truly in love...? என்று தன்னைத் தானே மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டு 'எஸ்... எஸ்... எஸ்...' என்ற உறுதியான பதில் வந்த பின்பே —

அன்று ராதிகாவிடம் சொல்லத் தயாரானான். நேரமின்மையால் தள்ளிப் போட்டுப் பின்னர், அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த பின்பு சொல்லலாம் என்றிருந்தது —

இப்போது இப்படித் திசை திரும்பியிருக்கிறது. இவளை அடைகிற அதிர்ஷ்டசாலியாக ராம்குமார் மாறியிருக்கிறான். இவள் அவனைத்தான் விரும்புகிறாள் என்கிற பட்சத்தில் — அவர்களை வாழ்த்தி அவர்கள் கேட்டுக் கொள்கிற மாதிரி சந்தோஷமாகக் கல்யாணம் பண்ணி வைப்பதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது...?

சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு, இந்தத் திருப்பம் தன்னை ஆழமாகப் பாதித்து விடாத அளவில் எளிதாய் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற முடிவில், தன் வழக்கமான புன்சிரிப்பை முகத்திற்குக் கொண்டு வந்தான். எப்போதும் பார்க்கிற மாதிரி கம்பீரமாகப் பார்த்தான். பின்னர் சாமர்த்தியமாகத் தன் உணர்ச்சிகள் எதையும் வெளிக்காட்டாமல் ராம்குமாரின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

"பணம், புகழ், படிப்பு, அந்தஸ்துன்னு எது எதெல்லாமோ என்கிட்டே இருக்கிறதா கொஞ்ச முன்னால் சொன்னே இல்லை ராம்குமார். ஆனால், அதையெல்லாம் மீறின அதிர்ஷ்டம் உன்கிட்டே இருக்கு..."

அவனது முகத்தின் சிரிப்பையும், பேச்சின் பரவசத்தையும் பார்த்த பின்னரே ராம்குமாருக்கு உயிர் வந்தது. முதல் ஐந்து நிமிடங்கள் அவன் அமைதியாக இருந்ததில் உள்ளுக்குள் பதறின பதற்றமெல்லாம் வடிந்து பழைய உற்சாகம் தொற்றிக் கொள்ள, சொன்னான்:

"ஓ... தாங்க்யூ சார்.... நீங்க இதை எப்படி எடுத்துக்கிட்டீங்களோன்னு பயந்துண்டிருந்தோம்..."

"ஓ காட்! இதுல பயப்பட என்ன இருக்கு? நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிற போது மூணாவது மனுஷனுடைய அபிப்பிராயத்துக்குத் தேவை என்ன...? தனி மனுஷ சுதந்திரத்துல நம்பிக்கையும், அதுல தலையிடற யாரையும் மன்னிக்காத குணமும் உடையவன் நான்ங்கறது உனக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் எதுக்கு இந்தப் பேச்செல்லாம்...? ஆமாம், ராம்குமார்... நீ இத்தனை சொன்னியே... ராதிகா வாயைத் திறந்து ஒரு வார்த்தை யாவது சொன்னாளா பாரு...?"

"ஏய் ராதி சொல்லேன்... சார், கேட்கிறார் இல்லே...?"

"என்ன சொல்லணும்...?" — அவள் வெட்கமும், படபடப்புமாக நிமிர, அந்த வெட்கம் அவளை இன்னமும் அழகாக்குவதைக் கவனித்த கார்த்திகேயன், உள்ளுக்குள் எழுந்த பெருமூச்சை அடக்கிக் கொண்டே கேட்டான்.

"என்ன சொல்றதா...? ஹௌ மச் யூ லவ் ஹிம்னு சொல்றது...?"

அவள் இன்னமும் வெட்கப்பட்டுத் தலை குனிய, கார்த்திகேயன் சீண்டத் தொடங்கினான்.

"ஓ... கமான்... டெல் மீ ஹௌ மச் யூ லவ் ஹிம்...? இஸ் மச்...?" — என்று இரு கைகளையும் விரித்து அழகாய் அபிநயம் மாதிரி காட்ட, அதைப்பார்த்த அவள் கன்னங்களில் சிவப்பேற, மெலிதாய், "ம்ஹூம். நாட் திஸ் மச்..." என்றாள்.

அவன் விடுவதாக இல்லை.

"நாட் திஸ் மச் என்றால் என்ன அர்த்தம்...? இதைவிடக் குறைச்சல்னா...?"

"ம்ஹூம். அதிகம்னு..."

"எவ்வளவு அதிகம்...?"

"இந்த உலகத்தைவிட அதிகம்னு வெச்சுக் கோங்களேன்..."

"அடேங்கப்பா!" என்று கார்த்திகேயன் சிரிக்க ஆரம்பித்ததும் அவர்களும் அவனோடு சேர்ந்து கொண்டனர்.

சிரிப்பு அடங்கியதும் ராம்குமாரைப் பார்த்துக் கேட்டான். "உனக்கு யாருமில்லை... உன் பக்கத்திலேர்ந்து இந்தக் கல்யாணத்துக்கு எந்தவித அப்ஜெக்ஷனும் இருக்காதுன்னு எனக்குத் தெரியும். ஹௌ அபௌட் ஹர்...? அவ வீட்டிலே அம்மா, அப்பாவெல்லாம் இதுக்கு ஒத்துண்டாங்களா...?"

"ராதிகாவுக்கு அப்பா இல்லே சார்..." என்று ஆரம்பித்துச் சுருக்கமாக முழுவதையும் சொல்லி முடித்தான் ராம்குமார். பாட்டியிடம் தான் சொல்லிவிட்டு வந்ததைத் தெரியப்படுத்திவிட்டுக் குரல் கரகரக்கக் கேட்டான்.

"நீங்க வந்ததும் கல்யாணத்தை நடத்தி வச்சுடுவீங்கன்னு ரொம்ப ரொம்ப நம்பிக்கையா, தீர்மானமா பாட்டி கிட்டச் சொல்லிட்டேன் சார்..."

# இப்போது
# பிரிட்டானியா
# மில்க் பிக்கிஸ்
# எடுப்பாகக்
# கண்கவரும்
# இப் புதிய
# பேக்கிலே




பிரிட்டானியா®

வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை.

LINTAS MB P 13 2416 TM

# Y.G. மகேந்திரன் தன் மனைவியிடம் என்ன சொல்கிறார்?



Bisleri
CLUB
SODA

**Y.G**

WHO ரிப்போர்ட் என்ன சொல்கிறது தெரியுமா உனக்கு?

இந்தியாவிலேயே 80% வியாதிகள் அசுத்தமான தண்ணீரை குடிப்பதால் வருகிறதாம். அதனாலே ஆபிசிலே நீ கண்ட தண்ணீரை குடிக்காதே.

**Mrs. Y.G**

அப்படின்னா, தாகம் எடுத்தால்...?

**Y.G**

அப்படி கேளு... சென்னை பாட்லிங் கம்பெனியில் குடி தண்ணீரை சுத்தப்படுத்தி "ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ்" முறையில் மறுபடியும் சுத்தப்படுத்தி, சுகாதார முறையில் "பிஸ்லேரி கிளப் சோடாவை" தயாரிக்கிறார்கள். அதை நானே நேரில் பார்த்தேன். அதனால் பிஸ்லேரி கிளப் சோடாவை சாப்பாட்டோட ஆபிஸுக்கு தினமும் எடுத்துண்டு போயிடு.

**Mrs. Y.G**

Thanks, என் மேலே உங்களுக்கு எவ்வளவு அக்கறை.!

தயாரிப்பாளர் : சென்னை பாட்லிங் கம்பெனி லிட்.

"அவ்வளவுதானே... Done..." என்று சிரித்தான் கார்த்திகேயன். நெக்ஸ்ட் முகூர்த்தம் எப்பன்னு பார்க்கச் சொல்லி உடனே ஏற்பாடு பண்ணிடறேன். பொண்ணு வீடு, பிள்ளை வீடு ரெண்டுக்கும் நானே முன்ன நின்னு நடத்தி வைக்கிறேன். இது என் வீட்டுக் கல்யாணம் மாதிரி... செலவு முழுசும் என்னோடது... ஓ.கே..."

ராம்குமார் நெகிழ்ந்து, பேச்சு வராமல் தவிக்க, ராதிகாவின் கண்கள் நிறைந்து போயின. உணர்ச்சிவசப்பட்ட இருவரும், "சார்... இப்படி நில்லுங்க சார். நமஸ்காரம் பண்றோம்" என்று முன் வந்ததும், சரே லென்று நகர்ந்து கொண்டான் கார்த்திகேயன்.

"டோண்ட் பி ஸ்டுப்பிட்... நீங்க ரெண்டு பேரும் எனக்கு ஏதாவது பிரதி உபகாரம் பண்ணனும்னு நினைச்சா... கிவ் மீ எ கிராண்ட் ட்ரீட் இலே..."

"ஓ.கே. சார்... இன்னிக்கே தாஜ்ல டேபிள் ரிசர்வ் பண்ணிடறேன்."

"ஓ...நோ...." என்று உடனடியாக மறுத்தான் அவன்.

"இந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் சாப்பாடெல்லாம் அலுத்துப் போச்சு எனக்கு. ஒய் நாட் வி டு ஒன் திங்? ராதிகா, இன்னிக்கு ராத்திரி உங்க வீட்டுக்குச் சாப்பிட வரேன். உங்க பாட்டி கிட்டச் சொல்லி வத்தக் குழம்பும், சுட்ட அப்பளமும் பண்ணித் தரச் சொல்றியா...? தட் வில் பி எ கிரேட் ட்ரீட் ஃபார் மீ...?"

ஒரு வினாடி ராம்குமார், ராதிகா இருவருமே சிலிர்த்துப் போனார்கள்.

உணர்ச்சிவசப்பட்ட குரலில் சொன்னாள் ராதிகா.

"எங்க வீடு... வந்து... ரொம்பச் சின்னது சார்... ஒரு சாதாரணத் தெருவுல இருக்கு."

"ஓ... நான் வீட்டுக்காக வரலை ராதிகா.. உங்க ரெண்டு பேருக்காக... உங்க மனசுக்காகத்தான் வரேன்... அது பெரிசா விசாலமா இருக்கு இல்லே...?

"நீங்க வர நாங்க ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும் சார்...."


"ஓ.கே... அப்படின்னா ராம்குமார், நீ சரியா சாயந்திரம் ஏழு மணிக்கு என் வீட்டுக்கு வந்துடு சொன்னேன். ரெண்டு பேருமா என் காரிலேயே ஏழரை மணிக்ெல்லாம் ராதிகா வீட்டுக்குப் போயிடலாம். பட், ரிமெம்பர் ஒன்திங். வத்தக் குழம்பு, சுட்ட அப்பளம் தவிர வேற ஒண்ணும் வேணாம்."

"ஓ.கே சார்...."

**அ**ன்று மாலை மூன்று மணிக்கெல்லாம் ராதிகாவைக் காரில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தான் ராம்குமார்.

"நீ முதல்ல போய் வீட்டைக் கொஞ்சம் சுத்தப்படுத்தி, பாட்டிகிட்டச் சொல்லி ரெடி பண்ணு. நான் என் ஸ்கூட்டர்ல சேர்மென் வீட்டுக்குப் போய், அவரோட கார்ல வந்துடறேன். சரியா ஏழரை மணிக்கெல்லாம் வீட்ல இருப்போம், சேர்மென் ரொம்ப பங்சுவல். ஒரு நிமிஷம் லேட்டானால் கூட அவருக்குப் பிடிக்காது. என்ன...?"

'சரி' என்று தலையாட்டி விட்டு மனம் நிறைய சந்தோஷத்தையும், நிம்மதியையும் ஏற்றிக் கொண்டு காரில் புறப்பட்டாள் ராதிகா.





''நீங்க தயாரிச்சிருக்கிற படம் ஒவ்வொரு தியேட்டர்லேயும், நூறு நாளைக் குக்குறையாமல் பிச்சுக்கிட்டுப்போகும்னு சொல்றீங்களே; என்ன கதைங்க?''

''கதையா? நான் எடுத்திருப்பது, 'விளம்பரப் படம்'ங்க!''

— ஆர். அப்துல் சலாம்.

மணி ஏழாகி, ஏழே காலாகி ஏழரையாகி, எட்டடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்த போது, ராதிகா வாசலில் நின்று அவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்க, கார்த்திகேயன் அவளை டெலிபோனில் கூப்பிட்டான்.

''என்ன ராதிகா இன்னும் ராம்குமாரைக் காணோம்...?''

''அங்கே வரலையா சார்...?''

''இல்லையே... நான் ஏழு மணியிலிருந்து காத்துண்டிருக்கேன். உன்கிட்ட என்ன சொன்னான்....?''

''ஸ்கூட்டர்ல உங்க வீட்டுக்கு வந்து ஸ்கூட்டரை அங்க வச்சிட்டு உங்ககூட கார்ல வர்றதாச் சொன்னார் சார்...''

''ஏன், கார் என்ன ஆச்சு...?''

''கார் இங்கதான் சார் இருக்கு. மூணு மணிக்கெல்லாம் என்னைக் கார்ல வீட்டுக்கு அனுப்பிட்டு, ஏழு மணிக்கு உங்களை அழைச்சுண்டு கிளம்பறதாச் சொன்னார்....''

சிறிது யோசித்த கார்த்திகேயன், ''சரி, நீ டெலிபோனை வை. நான் அவன் வீட்டுக்கும், ஆபீசுக்கும் போன் பண்ணிக் கேட்டுண்டு, திரும்ப உன்னைக் கூப்பிடறேன்...'' என்றான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் மறுபடியும் கார்த்திகேயனிடமிருந்து போன் வந்தது.

''அவன் ஆபீசை விட்டு ஐந்தரை மணிக்கெல்லாம் கிளம்பிட்டானாம். வீட்டுல கூப்பிட்டா சமையற்காரர் இன்னும் வீட்டுக்கே வரலைன்னு சொல்றார்... வாட் வுட் ஹேவ் ஹாப்பண்ட்...? வேறே எங்கேயாவது போயிட்டு வர்றதா சொன்னானா...?''

''இல்லையே சார்....''

சில கணங்கள் மௌனமாக இருந்த கார்த்திகேயன் பின் கேட்டான்.

''டிரைவர் அங்க இருக்கானா...?''

''இல்லையே சார்... வீட்டுக்கு அனுப்பிட்டேனே...''

''ஆல் ரைட்... நீ உன் வீட்டு விலாசத்தைச் சொல். நான் அங்கே வரேன். ரெண்டு பேருமா ராம்குமார் வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாம்....''

அவளது வீட்டு விலாசத்தைக் குறித்துக் கொண்டு மேலும் கால் மணி நேரத்திற்கு மேல் காத்திருந்து பார்த்த பின்னரே கார்த்திகேயன் ராதிகாவின் வீட்டிற்குப் புறப்பட்டான். அதற்குள் பதற்றமும், பயமுமாக வாசலுக்கும், உள்ளுக்குமாக நடையாக நடந்தாள் ராதிகா.

''என்ன பாட்டி இவர் இன்னும் வரலை... சொன்னா சொன்னபடி வந்துடுவாரே பாட்டி...'' என்று கவலை தொனிக்கச் சொன்ன போது,

''எதுக்கு இப்படி கவலைப்படறே... வழில ஸ்கூட்டர் ஏதாவது ரிப்பேர் ஆயிடுத்தோ என்னமோ...?'' என்று பாட்டி சமாதானப்படுத்திக் கொண்டிருக்க, அதைக் கேட்டவாறே உள்ளே நுழைந்தான் கார்த்திகேயன்.

''வா ராதிகா... ராம்குமார் வீட்டுக்குப் போய் எதுக்கும் பார்த்துண்டு வந்துடலாம்...'' என்று அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்து காரில் ஏறத் தயாரான போது —

வீட்டு வாசலில் வந்து நின்றது அந்த போலீஸ் ஜீப். அதிலிருந்து கீழே குதித்த இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனைப் புரிந்து கொண்டு கையை உயர்த்தி 'குட் ஈவினிங் சார்' சொன்னார்.

''என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...?'' என்றவனைத் தனியாகச் சற்றுத் தள்ளி அழைத்துப் போய் அவர் சொன்ன செய்தியைக் கேட்டதும் கார்த்திகேயனுக்கு அடிவயிற்றில் கத்தி பாய்ந்த உணர்வு ஏற்பட்டது. நெஞ்சு பதறியது. ஒரு வினாடி இதயத் துடிப்பு நின்று விடும் போலிருந்தது. அந்தச் செய்தியின் அதிர்ச்சி உடம்பு முழுவதிற்கும் பரவி லேசாய் நடுக்கத்தை ஏற்படுத்த, வாய் உலர்ந்து வார்த்தைகளுக்குத் தடுமாறினான்.

''எ... எப்...படியாச்சு இன்ஸ்பெக்டர்....?''

''தௌசண்ட் லைட்கிட்ட சார்... இவர் கிரீம்ஸ் ரோட்லேருந்து வேகமா வந்து இடது பக்கம் திரும்பியிருக்கார். ஃப்ளை ஓவர்லேருந்து வந்துகிட்டிருந்த லாரி மோதி... இவரு இடது பக்கம் விழுந்திருந்தார்னா தப்பிச்சிருப்பாரு... ஆனா வலது பக்கம் விழுந்ததுல அவரோட வயத்து மேல லாரி ஏறி இறங்கி—''

''மைகாட்... மைகாட்...'' என்று வாய் விட்டுச் சன்னமாகக் கதறினான் கார்த்திகேயன். இனம்புரியாத பயமும், கலவரமும் கவிழ்ந்து, முகம் வெளிறக் கார் கதவைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த ராதிகாவை மெல்லத் திரும்பிப் பார்த்தான். நெஞ்சினுள் சொல்ல இயலாத சோகமும், துக்கமும் பரவின. முதல் முதலாகத் தன் அறைக்குள் நுழைந்து நாற்காலி விளிம்பில் உட்கார்ந்திருந்த அந்த ராதிகாவை மீண்டும் பார்க்கிற மாதிரி தோன்ற, உள்ளுக்குள் குமுறிப் போனான். 'இந்தப் பெண்ணிடம் எப்படிச் சொல்லப் போகிறோம்...? எவ்வாறு இவளால் இதைத் தாங்கிக் கொள்ள முடியும்...?'

அதற்கு மேல் அவளைப் பார்க்கிற சக்தியற்று மீண்டும் இன்ஸ்பெக்டரின் பக்கம் திரும்பினான்.

''இப்போ பாடி எங்கே இருக்கு...?''

''ஜி.எச்ல சார். போஸ்ட் மார்ட்டத்துக்குக் கொண்டு போயிருக்காங்க...''

(தொடரும்)



ராஜாஜி வாழ்க்கை வரலாறு — V

ராஜ்மோகன் காந்தி

காமராஜ் 12

* காமராஜர்: தருணம் பார்த்துத் தாக்கு

# கை ஓங்குகிறது!

**ரா**ஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தை வன்மையாக எதிர்த்தார் பெரியார் ஈ.வெ.ரா. ஆயினும் தனிப்பட்ட முறையில் அவர்களிடையே அதிசயமான அளவில் நட்புறவு நீடித்தது. பொது நிகழ்ச்சியொன்றில் இருவரும் ஒரே மேடையில் தோன்றினார்கள். ஸி. ஆர். தமது டயரியில், ''நாங்கள் இருவரும் சேர்ந்து இருந்ததைக் காணப் பெருங்கூட்டம் பெருமகிழ்ச்சியில் ஆழ்ந்தது'' என்று குறிப்பிட்டார்.

எதிர்ப்பிலே கண்ட நேசப் பான்மை இது. இதற்கு மறுபுறமாக ஆதரவினூடே காமராஜின் விரோத பாவம் நீடித்தது! ஸி. ஆர். முதல்வராவதற்கும் அதன் பின்னரும் அவருக்கு மனமின்றியே ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருந்தார் காமராஜ். கட்சிக்குள்ளே தமது பழைய எதிரி, கடந்த ஓராண்டு காலமாக ஒன்றன்பின் ஒன்றாகப் பல வெற்றிகளைக் குவிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆந்திரா பிரிவினை ஸி. ஆரைப் பலவீனப்படுத்தியது; காமராஜ் கரங்களைப் பலப்படுத்தியது. பிரிவினைக்குப் பிறகு எஞ்சிய சென்னை மாகாணச் சட்டசபையில் காங்கிரஸ் எம். எல். ஏக்கள் பெரும்பான்மையில் இருந்தது மட்டுமல்ல; அவர்கள் எல்லோருக்கும் காமராஜ்தான் தொகுதிகளைப் பகிர்ந்தளித்துக் காங்கிரஸ் வேட்பாளர்களாக்கியிருந்தார். எனவே, அவர்கள் அனைவரும் காமராஜிடம் நன்றிக் கடன்பட்டிருந்தனர். தமது கால்களை நன்கு ஊன்றிக் கொள்ள முடியும் என்று தெரிந்ததும், தலைமையில் மாற்றம் கொண்டு வரலாமே என்பது போல் ஸி.ஆரிடம் கோடி காட்டிப் பேச ஆரம்பித்தார் காமராஜ்.

அது. 1953 செப்டம்பரின் தொடக்கம். காமராஜ் இவ்வாறு நடந்துகொள்ளப்போகிறார் என்பதாக ஸி. ஆர். மே மாதத்திலேயே ஊகிக்க ஆரம்பித்து விட்டார். அவரது டயரியில் மே மாதம் 4 — ஆம் தேதி பின்வரும் குறிப்பு காணப்படுகிறது: ''நான் இப்போது (ஷேக்ஸ்பியரின்) ஜூலியஸ் ஸீஸர் படித்துக் கொண்டிருக்கிறேன். இது யதேச்சையாக அமைந்த ஒரு பொருத்தம். காமராஜ் ஸீஸரைக் குத்துகிறார். நான் அப்படித்தான் உணர்கிறேன். கடவுள் அவரை மன்னிக்கட்டும்.''

இப்போது, அந்தரங்கமாகத் தம்க்கு விடுக்கப்பட்ட சவாலைப் பகிரங்கமாக ஏற்கத் தயாரானார் ஸி. ஆர். ''சட்டசபை காங்கிரஸ் கட்சி கூடட்டும்; புதிய தலைவர் தேவையா என்று யோசிக்கட்டும்'' என்றார். காமராஜ் அவசரமாகப் பின் வாங்கினார். தில்லியிலிருந்து நேரு அத்தகைய நடவடிக்கைக்கு அவசியமில்லை என்று செய்தி அனுப்பினார். சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெறவில்லை.

**இ**ந்தச் சம்பவம் பற்றிப் பத்திரிகைகளில் படித்த நண்பர் நவரத்ன ராமராவ், ''இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?'' என்று கேட்டுப் பெங்களூரிலிருந்து எழுதினார். ஸி. ஆரின் பதில்: ''விஷமம் செய்யப் பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். எந்த மாறுதலும் இல்லை. ஜனநாயகம் நீடிக்கிறது. அதாவது, இப்போதுள்ளது போல், பெரும்பான்மையினர் என்னை ஆதரிக்கும் வரை நான் இருப்பேன். அல்லது நான் விரும்பும் வரை இருப்பேன். இதில் எது முன்னதாக முறிகிறதோ அப்போது எனது பதவிக் காலம் முடியும்.'' ராமராவ் பதில் எழுதினார்: ''நிலைமை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி இருக்கிறது என்று அறிய மகிழ்ச்சி. பட்டிக்காட்டான் ஒருவன் வீசிய மோசமான பந்தில் பிராட்மன் அவுட் ஆவதைவிடச் சோகம் வேறு இருக்க முடியாது!''

ராமராவுக்கு ஸி. ஆரிடம் இருந்த அன்பு அவரது பார்வையை மறைத்து விட்டது. ஸி. ஆர். அற்புதமாக மட்டை பிடித்து ஆடக் கூடியவர்தான். ஆனால் பந்து வீச வந்த காமராஜ் ஆட்டத்துக்குப் புதியவரல்ல. அவர் ஒரு மோசமான பந்து வீச. அதனை ஸி. ஆர்.

பவுண்டரிக்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் காமராஜ் தமது தவறுகளிலிருந்து பாடம் கற்கக் கூடியவர். ஆபத்தான பலரகப் பந்துகளைத் தேவைப்படும் போது விகசம் திறன் படைத்தவர். மேலும் விக்கெட் இப்போது காமராஜுக்குச் சாதகமாக இருந்தது. பந்து நன்றாகத் திரும்பியது. காமராஜ் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாரானார். ஆந்திரா பிரிவினையுடன் தமது ஆட்டத்தை ராஜாஜி முடித்துக் கொண்டு ரிடையராகிப் பெவிலியனுக்குத் திரும்பியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் இந்த அற்புதமான வாய்ப்பை ஸி. ஆர். நழுவ விட்டு விட்டார்.

**கா**ங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் பலர், புதிய கல்வித் திட்டத்துக்கும் அதன் மூலம் ராஜாஜிக்கும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க அதிக காலம் ஆகவில்லை. சிலர் மனப்பூர்வமாகக் குறை கூறினர். சிலர் ராஜாஜி தங்களை ஒதுக்கி விட்டார் என்ற ஆதங்கத்தில் எதிர்த்தனர். வேறு சிலர், பிராமணருக்கு ஆதரவானதாகக் கருதப்பட்ட ஒரு கல்வித் திட்டத்தை எதிர்ப்பதன் மூலம் பிரபலமடைய எண்ணினர். முதன் முதலாகப் பகிரங்கமாக எதிர்க்க ஆரம்பித்தவர் வரதராஜுலு நாயுடு. ஸி.ஆர். முதல் மந்திரியாக வேண்டும் என்ற கருத்து உருவாவதற்கு முன்னர், வரதராஜுலு நாயுடு, தாம் முதல்வராகத் தயார் என்று அறிவித்திருந்தார். (புகழ்பெற்ற 1919 தேசத் துரோக வழக்கில் வரதராஜுலு நாயுடு சார்பில் வழக்காடியவர் ஸி.ஆர்.) நவம்பர் மாதத்தில் வரதராஜுலு நாயுடு, தலைமை மாற வேண்டும் என்றும் தமக்கு இதில் முப்பத்து ஒன்பது காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருப்பதாகவும் அறிவித்தார்.

நாயுடுவின் போக்கு மிகவும் தவறானது என்று ஜவாஹர்லால் கண்டித்தார். ஆனால்



நிகழ்ச்சிகள் காமராஜ் ஆதரவாகத் திரும்பிக் கொண்டிருந்தன என்பதற்கு இந்த உட்கட்சிப் புரட்சி எடுத்துக்காட்டாக அமைந்தது. புதிய கல்வித் திட்டத்தை ஸி.ஆர். வாபஸ் பெற்றுக் கொண்டால் இந்தக் கிளர்ச்சி அடங்கி விடும். ''ஆதரவு இன்மையால் புதிய கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்கிறேன்'' என்று ஒரு வாக்கியம் ஸி.ஆர். சொன்னால் போதும். அவரை எதிர்ப்பதற்கு எதிராளிகளுக்கு ஆயுதம் ஏதுமில்லாமல் போய் விடும். ஆனால் ஸி.ஆர்., ஸி.ஆராகவே இருந்தார். விட்டுக் கொடுக்க அவர் தயாராக இல்லை. இந்த யதார்த்தம் காமராஜுக்கு மிகுந்த நம்பிக்கை அளித்தது. தக்க சமயம் உருவாகக் காத்திருக்க வேண்டியதுதான் அவர் வேலை.

**பு**த்தாண்டு (1954) தொடக்கத்தில் ஸி.ஆர். எழுபத்தைந்து வயதைக் கடந்திருந்தார். பிராமணர் எதிர்ப்புச் சொற்பொழிவுகள் தீவிரமடைந்திருந்தன. புதுதில்லியில் ஸி.ஆரின் இடத்தில் இப்போது உள்துறை அமைச்சராக இருந்த கைலாசநாத் கட்ஜு, 'இந்த சொற்பொழிவாளர்கள் மீது ஏன் வழக்குத் தொடரப்படவில்லை' என்று கேட்டார். 'வன்முறையை நேரடியாகத் தூண்டி விடும் இந்தப் பேச்சுக்களைவிடப் பயங்கரமான சொற்பொழிவுகளை நான் கேட்டதே இல்லை' என்று அவர் எழுதினார். ஸி.ஆரின் பதில்: ''கிரிமினல் குற்றச் சட்டங்களை அரசியல் ரீதியில் பயன்படுத்துவது சாத்தியமில்லை. கைது செய்து வழக்குத் தொடர்ந்தால் இந்த விஷமிகள், பெரும்பாலான பிராமணரல்லாதார் கண்களுக்கு மாபெரும் தியாகிகளாகத் தென்படுவார்கள்.''

கூட்டம் தடை செய்யப்பட்டிருந்த இடங்களில் ஈ.வெ.ரா. தாம் பிரசங்கம் செய்யப் போவதாக அறிவித்தார். அவரைத் தடுத்து நிறுத்தப் போலீஸார் அனுமதிகோரி ஸி.ஆரிடம் சென்றனர். ''சட்டத்தை மீற அவரை அனுமதியுங்கள். ஓரிரு பிரசங்கங்களுக்குக் கூட்டம் வரும். அப்புறம் யாரும் வர மாட்டார்கள். ஈ.வெ.ரா. தாமே நிறுத்திக் கொள்வார். இதற்கிடையில் வழக்குத் தொடர நீங்கள் நிறைய சாட்சியங்களைச் சேகரிக்கலாம்'' என்றார் ஸி.ஆர்.

இந்தச் சாணக்கியம் நல்ல பலன் அளித்தது. ''ஸி.ஆர். சொன்னபடியேதான் நடந்தது'' என்கிறார் சிங்கார வேலு. ''நாங்கள் நிறைய சாட்சியங்களைச் சேகரித்திருந்தோம். ஆனால் ஸி.ஆர். அத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று அபிப்பிராயப்பட்டார். வழக்கு தொடரப்படவில்லை.''

ஆனால் இந்தச் சாணக்கியமெல்லாம் எதிரிகளிடமிருந்த பிரதான ஆயுதத்தை மழுங்கச் செய்யவில்லை. புதிய கல்வித் திட்டத்துக்கு எதிர்ப்பு என்ற ஆயுதம் மேலும் கூர்மை அடைந்து வந்தது.

(தொடரும்)






# சோம்பலுக்குச் சூடு போட்டது!

* ஏழைமைக்கு மருந்து தரும் டாக்டர்கள்'' — ரூசா பற்றிய கவர் ஸ்டோரி, அரும்பெரும் பணிகளை அமைதியாகச் செய்து வரும் களப்பணியாளர்களைச் சிறப்பித்தது. சேவை மனப்பான்மையோடு நாங்கள் தஞ்சையில் இதே போல் செயல்படுகிறோம். எங்களுக்கும் எங்களைப் போன்ற அமைப்புகளுக்கும் ரூசா வழிகாட்டியாக இருக்கும்.

தஞ்சை. தியாக ஜோதி ராமலிங்கம்.

* 'ரூசா'வின் தனிச்சிறப்புக்கள், வளர்ச்சிப் பணி பற்றிய செய்திகள் பிரமிக்க வைத்து விட்டன. எந்த வித அரசியல் தலையீடும் இல்லாமல் ஒரு தனியார் அமைப்பு இந்த அளவுக்குப் பிரம்மாண்டமான சேவைகள் செய்து வருவதைப் பார்க்கும் போது மெய் சிலிர்க்கிறது!

தலைஞாயிறு. ந. இளங்கோவன்.

* பஞ்சர் ஒட்டும் பாவையின் அட்டைப்படம் நெஞ்சைத் தொட்டது. வேலை கிடைக்கவில்லை யெனச் சொல்லிக் கொண்டு வெட்டித்தனமாக அலையும் இளைஞர்களின் சோம்பல் தன்மைக்குச் சூடு போடுகிறது இந்த அட்டைப்படம்.

திருக்குவளை. வெற்றிப்பேரொளி.

* ஹிந்தி மொழி வெறியர் தேவிலாலுக்குச் சாமரம் வீசத் துவங்கி விட்ட கலைஞரின் பரிதாப நிலை, இலங்கையில் நடைபெறப் போகும் (?) மாகாணத் தேர்தல்களைக் கிண்டல் செய்திருந்த பாங்கு, ஒலிம்பிக் தோல்வி குறித்து நையாண்டி செய்திருந்த நறுக் சுருக்கான கார்ட்டூன்... இப்படி பரபரப்பான கார்ட்டூன்களைப் போட்டு அசத்தி விட்டீரே.... சபாஷ்!

தோட்டக்குறிச்சி. இரா. வளையாபதி.

* ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய அணியின் பரிதாப நிலைமையைப் பல்வேறு தலைவர்களைக் கற்பனையாகப் பேட்டி கண்டு நகைச்சுவையுடன் கிண்டல் செய்ததைப் பார்த்தால் இதை எழுதி வரும் செம்பியனுக்கு சாம்பியன் பட்டம் கொடுத்தது முற்றிலும் தகும் என்று எண்ணத் தோன்றுகிறது.

மதுரை. எஸ். செல்வன்.

* தலையங்கம் கண்டேன்! 'ஒன்று நடந்த பின் எப்படி நடந்தது அது?' என்பதோடு அது இனி நிகழாமலிருக்க, என்ன செய்ய வேண்டும் என்று சரியான நோக்கில் அரசுக்கு உணர்த்தியுள்ள பாங்கு பாராட்டுக்குரியது!

குத்தாலம். வி. சுந்தர்ராமன்.

* ஜப்பானுடைய வளர்ச்சியின் ரகசியம் இதுநாள் வரை தெரியாமல் இருந்தது. 'நேஷனல்' அதிபர் கோனோசுகே மட்சுஷிதாவின் 'என்னால் முடியுமென்று எனக்குத் தெரியும்' கட்டுரை படித்ததும் அந்த ரகசியத்தைத் தெரிந்து கொண்டேன்.

மயிலாடுதுறை. டி. சோமசுந்தரம்.

* 'தோரணம்' சிறுகதை கண்டேன். போட்டிக்கு ஏற்பச் சரியான தேர்வு. சிறுகதைக்குள் சிறுகதையை அழகாக அடக்கி எழுதியுள்ளார் தமிழ்நேசன். பாராட்டுக்கள்!

வடபழனி. போடி. ப்ரியபாரதி.

* 'தோரணம்' கதையில் வானத்துத் துண்டு நிலவை வெறித்தபடி படுத்துக் கிடந்தேன் என்று வர்ணனை உள்ள போது ஜெயராஜின் படத்திலோ முழு நிலவு. ஏனிந்த முரண்பாடு?

திருவாரூர். ஆரூர். ந. இராஜேஸ்வரி.

* மனித மனத்தின் சின்னச் சின்ன வெளிப்பாடுகள் வெகு நேர்த்தியாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன 'பொறாமை' சிறுகதையில்... பாராட்டுக்கள்!

திருத்துறைப்பூண்டி — 16. ஜெ... பிஸ்மி.

* பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்ற பழமொழிக்கும், முன் சென்ற வாய்க்கால்தான் பின் செல்லும் என்ற பழமொழிக்கும் ஒரு சேர உதாரணமாக இருந்த சிறுகதை மும்தாஜ்யாசீனின் 'மகன்'.

திருப்பரங்குன்றம். டி. கே. சுப்பிரமணியன்.

* 'மகன்' ஒரு சிறுகதையல்ல. காவியம்! நடுத்தரக் குடும்பங்களில் தாய்க்கும் மகனுக்கும் இடையே நடக்கும் மனப்போராட்டத்தின் திரைப்படம்! மகனையே ஆதாரமாக நினைக்கும் ஒவ்வொரு தாயும் தெரிந்து கொள்ள வேண்டிய சரித்திரம்! ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் சம்பவங்களின் தொகுப்பு!

கதாசிரியர் மும்தாஜ்யாசீனைப் பாராட்ட வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்...!.. இன்னமும்....

தக்கோலம். ஆ. புகாரி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 14 0/—; விமானத் தபால் ரூ. 34 0/—.



nutrine
நியூட்ரின் குலாப் ஜாமுன் மிக்ஸ்.
nutrine
INSTANT
GULAB JAMUN MIX
மிருதுவான, ருசிமிகு குலாப் ஜாமுன்.
ஒரு 200 கிராம் பேக் கொண்டு 50 சுவைமிகு குலாப் ஜாமுன்கள் தயாரிக்கலாம். வெளியே பார்ப்பதற்கு பொன்நிறம், உள்ளே மிருதுவான ரச நயம். இந்தப் பண்டிகையிலே, உங்கள் மிட்டாய்க் கடைக்காரர் பொறாமையடையட்டும், நீங்கள் நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமுன்களை ருசித்து மகிழுங்கள்.
பொறாமையடையச் செய்யுங்கள், உங்கள் மிட்டாய்க் கடைக்காரரை.
Rediffusion/NC/6019

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க் வாங்குவதற்கு,
இப்போது இன்னும் இரண்டு அருமையான காரணங்கள்!

# இலவசம்!

இலவசம்: இத்துடன்
பாண்ட்ஸ் ஸாண்டல் சோப் (50 கிராம்)

இலவசம்: இத்துடன்
பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் சோப் (50 கிராம்)




மதிப்பில் பொன்னைப் போன்ற
அரிய நறுமணம், இப்போது
மேலும் மதிப்பு பெறுகிறது!
ஒவ்வொரு 140 கிராம் பாண்ட்ஸ்
ஸாண்டல் டால்க் வாங்கும்போதும்
ஒரு பாண்ட்ஸ் ஸாண்டல் சோப்
இலவசம். ஒவ்வொரு 60 கிராம்
ஸாண்டல் டால்க் வாங்கும்போதும்.
ஒரு பாண்ட்ஸ் ட்ரீம் ஃப்ளவர்
சோப் இலவசம்.

* இந்த சலுகைகள் சரக்கு உள்ள
வரை தமிழ் நாட்டில் மட்டுமே.
* இச்சலுகை இல்லாமலும்
பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க்
கிடைக்கும்.



HTA 7053

## பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க்.

அரிய நறுமணம். மதிப்பில் பொன்னைப் போல் உயர்ந்தது.